விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk




சங்கு 19 வள்ளுவர் ஆண்டு 2049 தை 12 வியாழக்கிழமை (25.01.2018) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 037

## சிறுமியை வன்புணர்ந்த கொலை குற்றவாளிக்கு மீளவும் தண்டனை

### யாழ்.மேல் நீதிமன்றம் தீர்ப்பு


(யாழ்ப்பாணம்)

கோப்பாய் பொலிஸ் பிரிவைச் சேர்ந்த பதின்ம வயதுச் சிறுமியை கடத்திச் சென்று வன்புணர்ந்த குற்றவாளிக்கு 2 ஆண்டுகள் கடூழியச் சிறைத் தண்டனை வழங்கி யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

குற்றவாளி மற்றொரு வழக்கில் கொலைக் குற்றத்துக்கு 10 ஆண்டுகள் கடூழியச் சிறைத் தண்டனையை அனுபவித்து வருவதால் இந்த வழக்கின் தண்டனையை 5 ஆண்டுகளுக்கு ஒத்திவைத்து மேல் நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகர் இளஞ்செழியன் தீர்ப்பளித்தார். 23

## கடற்படையின் கனரக வாகனம் மோதியதில் மாணவி உயிரிழப்பு

### புங்குடுதீவு பிரதேசத்தில் பதற்றம்; சாரதி கைது



(யாழ்ப்பாணம்)

புங்குடுதீவு நாற்சந்திக்கு அருகில் வீதியில் ஓரமாக நிறுத்தப்பட்டிருந்த மோட்டார் சைக்கிளை, கடற்படையின் கனரக வாகனம் மோதியதில் மோட்டார் சைக்கிளில் பயணித்த 9 வயது பாடசாலை மாணவி ஒருவர் பரிதாபமாக உயிரிழந்ததுடன், 23

தென்னிலங்கையில் குழப்பம்

## பரபரப்படையும் அரசியல் களம்

(கொழும்பு)

சமகால தென்னிலங்கை அரசியலில் பல்வேறுபட்ட குழப்பநிலைகள் தோன்றியுள்ளதாகவும் அரசியல் மட்டத்தில் மறைமுக 23

மானிப்பாய் தொகுதிக்கான

## தமிழரசுக்கட்சியின் வேட்பாளர் கைது

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண மகளிர் விவகார அமைச்சரை முகநூலில் அவதூறாக கருத்து தெரிவித்த தமிழரசுக்கட்சியின் உள்ளூராட்சி 23

## தேர்தல் வன்முறை 705 முறைப்பாடுகள்

(கொழும்பு)

தேர்தல் வன்முறைகள் தொடர்பில் இது வரையில் 705 முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும், மேல் மாகாணத்திலேயே அதிகளவான முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாகவும் தேர் 24

## ஊழல் மோசடிகளில் ஈடுபட்டவர்களுக்கு

# தண்டனை கொடுப்பது எனது பொறுப்பு!

### தேர்தல் முடிந்த பின்னர் நடவடிக்கை எடுப்பேன் என மைத்திரி அறிவிப்பு



(கொழும்பு) ஊழல் மோசடிகளில் ஈடுபட்டவர்களுக்கு தண்டனை பெற்றுக்கொடுக்கும் பொறுப்பை தனிப்பட்டமுறையில் தான் பொறுப்பேற்பதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார். மேலும் பெப்ரவரி 10 ஆம் திகதி தேர்தல் முடிந்த பின்னர் இந்நடவடிக்கை ஆரம்பமாகும் எனவும் தெரிவித்துள்ளார். (23-ம் பக்கம் பார்க்க...)

## வடக்கு - கிழக்கு மாகாணங்களில் இந்தோனேசியா முதலிட வேண்டும்

### அந்நாட்டு ஜனாதிபதியிடம் சம்பந்தன் கோரிக்கை



23

பிணைமுறி தொடர்பாக

## ஜனாதிபதியின் செயலாளரே பொறுப்புக்கூற வேண்டும்

(கொழும்பு)

பிணைமுறி அறிக்கை குறித்து ஜனாதிபதியின் செயலாளரே பொறுப்புகூற வேண்டும் என மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுரகுமார திசாநாயக்க தெரிவித்தார். நாடாளுமன்றில் நேற்றைய தினம் உரையாற்றிய போதே அவர் இதனை குறி 23

## குழந்தை பிறந்து 6நாட்களில் இளம்தாய் ஒருவர் மரணம்

(யாழ்ப்பாணம்)

குழந்தை பிறந்து ஆறு நாட்களேயான நிலையில் இளம்தாய் ஒருவர் யாழ்.போதனா வைத்தியசாலையில் நேற்று உயிரிழந்துள்ளார்.

அனிக்கன்குளம் மல்லாவியை சேர்ந்த சசிகலகுமார் மேரிவியித்தா (வயது 28) என்பவரே மேற்படி உயிரிழந்தவராவார்

திருமணமாகி ஒரு வருடம் ஆன குறித்த பெண், நிறை மாத கர்ப்பிணியாக இருந்துள்ளார். இவர் மருத்துவ பரிசோதனைக்காக கடந்த 7 ஆம் திகதி மல்லாவி வைத்திய சாலைக்கு சென்று குருதிஅழுக்கத்தினை பரிசோதித்துள்ளார்.

பின்னர் கடந்த 18 ஆம் திகதி கிளிநொச்சி மருத்துவம 23

மத நல்லிணக்க விழா

வட கதிர்காமம் பறாளாய்
சுழிபுரம்

கதிர்காமவேல் பிரதிஷ்டா வைபவம்

காலம் : 26.01.2018 வெள்ளிக்கிழமை
நேரம் : முற்பகல் 9.30 - 11.00 மணிவரை
பிரதம குரு : சிவஸ்ரீ.ந.கேதீஸ்வரக்குருக்கள்
(இருபாலை) அவர்கள்

பிரதிஷ்டா குருமார்கள்


வண. லால் அறாபக்ஷ
(கபு மாத்தயா)
கதிர்காமம்




சோழியூரான் -
பிறைசூடிக்குரு
(குரு மாத்தயா) ஈசுவர
விநாயகர் தேவஸ்தானம்

அனைத்து அடியார்களையும் அன்புடன் அழைக்கின்றோம்
சோழியூரான் - பிறைசூடிக்குரு
[illegible] தேசிய மதகுருமார் சபை பிரதம அமைப்பாளர்
(2537)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# வித்தியா வழக்கு சந்தேக நபர் எழுத்து மூல விண்ணப்பம்

சிவலோகநாதன் வித்தியா கொலை வழக்கில் முதலாவது சந்தேகநபராக கைது செய்யப்பட்டு ரயல அட்பார் நீதிமன்றால் நிரபராதியாக விடுதலை செய்யப்பட்ட போதும், பொலிஸார் ஒருவரை அச்சுறுத்திய வழக்கில் தொடர்ந்து விளக்கமறியலில் உள்ள பூபாலசிங்கம் இந்திரகுமார் சார்பில் சட்ட உதவி ஆணைக்குழு சட்டத்தரணி எழுத்து மூல விண்ணப்பம் ஒன்றை செய்துள்ளார்.

நேற்றைய தினம் குறித்த வழக்கானது ஊர்காவற்றுறை நீதவான் நீதிமன்றில் நீதவான் ஏ.எம். எம்.றியால் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டிருந்த போதே மேற்படி விண்ணப்பமானது செய்யப்பட்டிருந்தது.

இதன்போது மன்றில் சந்தேகநபர் சார்பாக முன்னிலையான சட்ட உதவி ஆணைக் குழு சட்டத்தரணி குறித்த நபருக்கு ஏன் பிணை வழங்குவதை பொலிஸார் மறுக்க கூடாது என்பது தொடர்பாக எழுத்து மூல வண்ணப்பம்ஒன்றை செய்திருந்தார்.

இதனையடுத்து குறித்த எழுத்து மூலமான விண்ணப்பத்தற்கான கட்டளையை வழங்குவதற்காக இவ் வழக்கு விசாரணையை எதிர்வரும் 07 ஆம் திகதி வரை ஒத்தி வைக்கவும் அது வரை குறித்த நபரை விளக்க மறியலில்வைக்கவும் நீதவான் உத்தரவிட்டார். (ம-4)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 28 - 04 - 1964 | 26 - 12 - 2017 |

கடந்த 26.12.2017 செவ்வாய்க்கிழமை
இறைபதமடைந்த எங்கள் குடும்பத் தலைவி

### அமரர் பாரதிதாசன் தங்கமலர்

அவர்களின் அந்தியேட்டிக்கிரியைகள் இன்று (25.01.2018) வியாழக்கிழமை காலை 6 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறும். அதனைத் தொடர்ந்து 12 மணியளவில் நடைபெறும் சபிண்டீகரணக் கிரியைகளிலும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

பிருந்தாவனம்
மகாத்மா வீதி, அல்வாய் வடக்கு.

இவ்வண்ணம்
குடும்பத்தினர்

(J-1374)

## மரண அறிவித்தல்



### முருகன் நடேசன்

(ஊழியர், காங்கேசன்துறை சீமெந்து கூட்டுஸ்தாபனம்)

மாவை கலட்டியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட முருகன் நடேசன் அவர்கள் 24.01.2018 புதன் கிழமை நேற்று இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முருகன்-பொன்னி தம்பதியரின் அன்பு மகனும், பூமணியின் அன்புக் கணவரும், கௌரிசிவா, கௌரிதரன், சர்வேஸ்தரன், பகிதரன், ரகுலதரன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 25.01.2018 வியாழக்கிழமை இன்று முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கீரிமலை மணல்தரை இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

மாவை கலட்டி,
தெல்லிப்பழை

தகவல்:குடும்பத்தினர்

(2551)

## துயர் பகிர்கின்றோம்



### அமரர் தவசி சின்னராசா

வலி.கிழக்கு பிரதேச சபையில் கடமையாற்றி வரும் எமது சக ஊழியர் சி.சிறீரஞ்சன் அவர்களின் அன்புத் தந்தையார் தவசி சின்னராசா அவர்கள் 24.01.2018இல் இறைவணடி சேர்ந்து விட்டார். அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக்கொள்வதுடன் அவரது ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை பிராார்த்திக்கின்றோம்

பிரிவால் துயருறும்:
ஊழியர் நலன்புரிச்சங்கம்:
வலி.கிழக்கு பிரதேச சபை, புத்தூர்

## மரண அறிவித்தல்கள்

### அமரர் கந்தையாபிள்ளை கனகராஜா



காரைநகர் பலகாட்டை பிறப்பிடமாகவும் கந்தர்மடம், யாழ்ப்பாணத்தையும் லிவர்பூல் பிரித்தானியாவையும் வசிப்பிடமாகக் கொண்ட கந்தையாபிள்ளை கனகராஜா அவர்கள் 20.01.2018 சனிக்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கோ.க.ஆ.கந்தையாபிள்ளை-நாகம்மா தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான செல்லத்துரை-ஜெயராஜேஸ்வரி தம்பதிகளின் அன்பு மருமகனும், பாக்கியலட்சுமியின் அன்புக் கணவரும், அமரர்களான பரமேஸ்வரி, நடராஜா, பரமசிவம்பிள்ளை (சட்டத்தரணி), கௌரிநாயகி மற்றும் கோமலாம்பாள் (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரனும், கந்தசாமி, செல்வரத்தினம் (கனடா), நேசராஜா (இலங்கை) ஆகியோரின் அன்பு மைத்துனரும், திருமகள் (லண்டன்), திருக்குமார் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், ஞானச்சந்திரன் (லண்டன்), கல்பனா (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும், கிரிதரன் (கனடா), கீதா (கனடா), சஞ்சீவ் (இலங்கை) ஆகியோரின் தாய்மாமனாரும், திரிசிகா, காசினி, தார்மீகன், தர்மிலன், கோபிஷா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 30.01.2018 செவ்வாய்க்கிழமை ஐக்கிய ராச்சியத்தில் உள்ள லிவர்பூலில் இடம்பெறும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:குடும்பத்தினர்

தொடர்புகளுக்கு:-க.திருக்குமார் (மகன்)-07397383738,
த.ஞானச்சந்திரன் (ஞானா) மருமகன்-07480474158

(2547)

### திருமதி ஜெகநாதன் சத்தியபாமா



| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 1946 - 02 - 27 | 2018 - 01 - 21 |

பொன்னையாலேன் ஆனைக்கோட்டையை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ஜெகநாதன் சத்தியபாமா 21.01.2018 ஞாயிற்றுக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற குமாரவேல்பிள்ளை-பாக்கியம் தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்ற செல்லத்துரை-இளையபிள்ளை அவர்களின் அன்பு மருமகளும், செல்லத்துரை ஜெகநாதனின் அன்பு மனைவியும், சத்தியேந்திரவின் அன்புத்தாயாரும், சத்தியேந்திரசுபாவின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.01.2018) வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் நல்லடக்கத்திற்காக கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பொன்னையா வீதி,
ஆனைக்கோட்டை

(சி-1377)

தகவல்:-
தி.உருத்திரதீஷன் (நேதாஜி)
(பேறாமகன்)
T.P:0773695922

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேலைத்திட்டங்களை பட்டியலிட இந்த அரசாங்கத்திற்கு முடியுமா?

## மகிந்த பகிரங்க சவால்

(கொழும்பு)

நான் ஆட்சியில் இருக்கும் போது பெறப்பட்ட கடன் தொகையை விட இவர்கள் சர்வதேச நாடுகளிடம் அதிக கடன் தொகையை பெற்றுள்ளனர். ஆனால் பெற்ற கடனுக்கேற்ற வேலைத்திட்டம் இல்லை. ஆனால் என்னால் இப்போதும் எனது அரசாங்கத்தால் மேற்கொள்ளப்பட்ட வேலைத்திட்டங்களைப் பட்டியலிட்டு காட்ட முடியும். ஆட்சியிலுள்ள அரசாங்கத்திற்கு முடியுமா? என முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ சவால் விடுத்துள்ளார்.

பதிவி ஆசையில் பதவிக் காலத்தை 6 ஆண்டுகளாக்க ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன முயற்சித்தார். எனினும் அவரது ஆசை நிறைவேறவில்லை. 5 ஆண்டுகள் மாத்திரமே ஜனாதிபதி பதவி வகிக்க முடியும் என தீர்ப்பு அறிவிக்கப்பட்டதன் பின்னர் ஜனாதிபதி குழப்பத்திலுள்ளார்.

பதவியை தக்கவைத்துக் கொள்ள முடியாது போனதால் கோபத்தை என்மீது காட்டுகின்றார். அதனால் எந்தப் பிரயோசனமும் இல்லை. எனக்கும் எந்தப் பாதிப்பும் இல்லை என அவர் மேலும் தெரிவித்தார்.


பலாங்கொடையில் நேற்று இடம்பெற்ற தேர்தல் பிரசாரத்தின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-7)

# ரவி எம்.பியின் கோரிக்கை பாராளுமன்றில் நிராகரிப்பு

(கொழும்பு)

முன்னாள் நிதியமைச்சர் ரவி கருணாநாயக்க பாராளுமன்றத்தில் விடுத்த கோரிக்கையை சபாநாயகர் கரு ஜெயசூரிய நிராகரித்துள்ளார்.

பாராளுமன்றில் நேற்று பாராளுமன்ற நிலையியற் கட்டளைச் சட்டத்தின் கீழ் சிறப்புரையொன்றை நிகழ்த்துவதற்காக முன்னாள் நிதியமைச்சர் ரவி கருணாநாயக்க சபாநாயகரிடம் அனுமதி கோரியிருந்தார்.



ஆனால் ரவி கருணாநாயக்கவின் கோரிக்கையை சபாநாயகர் கரு ஜெயசூரிய ஏற்க மறுத்துவிட்டார். (இ-7)

# ஊவா தமிழ் கல்வி அமைச்சராக செந்தில் தொண்டமான் நியமனம்



(கொழும்பு)

ஊவா மாகாண தமிழ்கல்வி அமைச்சராக செந்தில் தொண்டமான் நேற்றுக் காலை ஊவா மாகாண ஆளுநர் எம்.பி. ஜயசிங்க முன்னிலையில் பதவிப் பிரமாணம் செய்து கொண்டார். (இ-7)

# உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்காக 7 ஆயிரம் கண்காணிப்பாளர்கள்

(கொழும்பு)

உள்ளூர் அதிகார சபைத் தேர்தல் கண்காணிப்பிற்காக 7 ஆயிரம் கண்காணிப்பாளர்களை கடமையில் ஈடுபடுத்த எதிர்பார்ப்பதாக பவ்ரல் அமைப்பு தெரிவித்துள்ளது.

கண்காணிப்புப் பணியில் ஈடுபடவுள்ளவர்கள் தற்போது பயிற்சிகளில் ஈடுபட்டு வருவதாகவும் பவ்ரல் அமைப்பு தெரிவித்துள்ளது.

எதிர்வரும் பெப்ரவரி மாதம் 10 ஆம் திகதி நாடு முழுவதும் உள்ளூர் அதிகார சபைத் தேர்தல் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதற்கான தபால்மூல வாக்களிப்பு கடந்த 22 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது. (இ-7)


## வாத நோய்களுக்கு சிறப்புச் சிகிச்சை

## Special Treatment for Rheumatism

கழுத்துப்பிடிப்பு (Cervical spondylosis), தோள் மூட்டு வாதம் (Frozen shoulder), கீழ்முதுகு வலி (Law back pain), நாரிப்பிடிப்பு (Lumbago), முள்ளெலும்பு இடைத்தட்டு நழுவல் (Nerve root compressed by the Disc Hernia), இடுப்பு, தொடை, பாதம் வரை தாக்கும் தீவிர நரம்பு வலி (Sciatica) மற்றும் மூட்டுகளைப் பாதிக்கும் முடக்கு வாதம் (Rheumatic arthritis), முழந்தாள் மூட்டுத்தேய்மான வாதம் (Destrutcion of knee cartilage; Synovial fluid damage & Ligament loosening), குதிவாதம், நரம்பு, தசை, மூட்டுக்களின் (Neuro-mascular problems), பிரச்சனைகள், பிரசவத்தின் பின்பும், மாதவிலக்கு ஓய்வு காலத்தில் பின்பும் (Post caesarean & menopause) ஏற்படும் தசை - மூட்டு வலிகள் (Mascular & joint pain), சிறுவர் வாதம் (Juvenile arthritis), பாரிசவாதம் (Paralysis), எலும்பு முறிவின்பின் சீரமைப்பு போன்ற நோய்களுக்கு விசேட சித்த-ஆயுள்வேத சிகிச்சைகள் பெறலாம்.

**சிகிச்சைகளுக்கு அனுமதி பெற தொலைபேசியில் தொடர்பு கொள்ளவும்.**

Dr. R.LAKSHMANA IYER (D A M (cey), D M G (ind)
Regd - (7966,Dep Ayu - 6-3/1/2541)
மங்களபதி சித்த ஆயுள்வேத வைத்தியசாலை
41/5, அரச வீதி (சங்கிலியன் வீதியின் உள்ளே)
நல்லூர் - யாழ்ப்பாணம்,
Tel. 021 205 4066 / 077 872 5251



## அன்புடன் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு...

மீண்டும் ஒரு தேர்தல் அறிவிக்கப்பட்டுள்ள சூழலில், உங்களின் நியாயமான தீர்ப்புக்காக உங்களுடன் மனந்திறந்து சில கருத்துக்களைப் பறிமாறிக்கொள்ள முற்படுகின்றேன்.

1989ஆம் ஆண்டுக்குப் பின்னர் எமது தாயகப் பிரதேசத்தில் இயல்புச் சூழல் முடக்கப்பட்டுக் கிடந்ததையும், அரசியல் தலைமைகள் செயற்பட முடியாமல் இந்த மண்ணைவிட்டு வெளிநாடுகளுக்கும், தென் இலங்கைக்கும் ஓடியதையும், அரச இயந்திரம் இயங்க முடியாமல் போனதையும் உங்களில் பலர் அறிந்திருப்பீர்கள். அவ்வாறான ஓர் இருண்ட சூழலிலேயே துணிச்சலோடு தேசிய நீரோட்டத்தில் நான் கலந்துகொண்டேன்.

அந்தச் சூனியச் சூழலையும், தடைகளையும் எதிர்கொண்டு, எமது தாயகத்தில் ஜனநாயகச் சூழலை ஏற்படுத்துவதற்கும், எமது மக்கள் இயல்புச் சூழலை அனுபவிப்பதற்கும் உயிர் அச்சுறுத்தலுக்கு முகம் கொடுத்தபடி நானே முன்னின்று உழைத்திருந்தேன்.

மக்கள் சேவையை திறம்படச் செய்து முடிப்பதற்காக இரவு பகல் பாராமலும், நேர, காலம் பாராமலும், மழை, வெய்யில் பாராமலும் நான் செயல்பட்டபோது, எனக்கு உங்களின் ஆலோசனைகள் தேவையாக இருந்தன. உங்களின் பங்களிப்பும் தேவையாக இருந்தது. அதற்காக, எந்தவேளையில் நான் உங்களை அழைத்தாலும் நீங்கள் வருகை தந்து மனம் சோராமல் உதவி செய்தீர்கள்.

அரசாங்க உத்தியோகத்தர்கள் தமது பணியைச் செய்தாலும், அதை ஒரு சமூக சேவையாகவும், மனிதாபிமானப் பணியாகவும் நினைத்து மக்களுக்கு செய்ய வேண்டும் என்று நான் உங்களிடம் கோரிக்கை விடுத்ததையும், நீங்கள் மறந்திருக்க மாட்டீர்கள். அத்துடன் நீங்கள் நியாயமாகவும், சுதந்திரமாகவும் செயல்பட உங்களுக்கு நான் பக்கபலமாக இருந்ததையும் நினைவில் கொண்டிருப்பீர்கள் என்றும் நம்புகின்றேன்.
உங்கள் பங்களிப்பும், உதவியும் கிடைக்கப்பெற்றதால்தான், யுத்த இடிபாடுகளாகக் கிடந்த யாழ். குடா நாட்டை மீண்டும் கட்டியெழுப்ப முடிந்தது.

எனது அயராத முயற்சியினால்தான் வடக்கிலும், கிழக்கிலும் பல ஆயிரம் பேருக்கு அரச வேலை வாய்ப்புகளைப் பெற்றுக்கொடுக்கவும் முடிந்தது. அந்த நன்றி உணர்வோடு இன்னும் பலர் இருப்பதையும் அன்போடு ஞாபகத்தில் வைத்திருக்கின்றேன்.எமது மக்கள் எதிர்கொண்ட பல்வேறு பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக நேரகாலம் பாராமல் நான் அரச அதிகாரிகளை அழைத்திருந்தேன் என்பதற்காகவும், மக்கள் முன்வைக்கும் கோரிக்கைகளுக்கு நியாயமான உடனடித் தீர்வு காணப்பட வேண்டும் என்று பிடிவாதமாக கேட்டுக்கொண்டதற்காகவும் உங்களில் சிலர் அதிருப்தியடைந்திருப்பதாலேயே தபால் மூல வாக்குகளில் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி(ஈ.பி.டி.பி)க்கு கணிசமான வாக்குகள் கிடைப்பதில்லை என்று கூறப்படுவதை நான் உண்மையென்று நம்பவில்லை.

எமது மக்களுக்காகவே நான் பாடுபட்டேன். எமது மண்ணுக்காகவே உழைத்தேன். கடந்த மூன்று வருடங்களாக எனக்கு எதிரான சக தமிழ் அரசியல் கட்சிகள் செய்த சதி காரணமாக பாதிக்கப்பட்டவர்கள் எமது மக்களும், அபிவிருத்தியற்று முடங்கிப்போனது எமது தாயகப் பிரதேசமும்தான். இப்பாதிப்பையும், பின்னடைவையும் எமது மக்கள் உணர்ந்து வருவதையும், அதை வெளிப்படுத்தி வருவதையும் நான் புரிந்து கொள்கின்றேன்.
இந்த முடக்கத்திலிருந்து அபிவிருத்தியும், மீள் எழுச்சியும் முழு வீச்சில் மீண்டும் ஆரம்பிக்கப்பட வேண்டும். எதிர்காலம் மீதான நம்பிக்கையை எமது மக்களிடையே மீண்டும் கட்டியெழுப்ப வேண்டும். சமூகச் சீர்கேடுகளை நிறுத்தி, அதனால் பாதிப்புக்குள்ளானவர்களை அதிலிருந்து மீட்டெடுக்க வேண்டும். அதற்காக நீங்களும் எனக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும். நீங்கள் கடந்த காலத்தில் எவ்வாறான தீர்மானம் எடுத்திருந்தாலும் பரவாயில்லை. இம்முறை நியாயத்திற்காக எனது கோரிக்கையை ஏற்று நியாயத் தீர்ப்பை எழுதுவீர்கள் என்று நம்புகின்றேன்.

**முயல்வோம்! வெல்வோம்! உளம்சோரோம்!!**






என்றும் மக்கள் சேவையிலுள்ள
**டக்ளஸ் தேவானந்தா பா. உ**
செயலாளர் நாயகம்
ஈழமக்கள் ஜனநாயக கட்சி (ஈ.பி.டி.பி)

(சி-004)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## தென்னாபிரிக்காவின் வேகப்புயல்கள் போட்டுத்தாக்க
# 187 ஓட்டங்களில் சுருண்டது இந்தியா

தென்னாபிரிக்காவின் ஐவர் அடங்கிய வேகப்பந்து வீச்சு கூட்டணி போட்டுத்தாக்க, இந்தியாவின் துடுப்பாட்ட தளம்பல் தொடர்ந்தது. முதல் இன்னிங்ஸில் 187 ஓட்டங்களுக்கு சுருண்டுபடுத்தது. அணித் தலைவர் ஹோலி, புஜாரா அரைசதமடித்து ஆறுதல் கொடுத்தனர்.

தென்னாபிரிக்காவுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இந்திய அணி, அங்கு மூன்று போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் பங்கேற்கிறது. கேப்டவுன், செஞ்சூரியன் டெஸ்டில் தோல்வியடைந்த இந்திய அணி, 0-2 என ஏற்கெனவே தொடரை இழந்தது.

இந்நிலையில் 3ஆவது டெஸ்ட் ஜொகனஸ்பேர்க்கில் நேற்று ஆரம்பமானது.

**ரகானே வாய்ப்பு**

ஒருவழியாக இந்திய அணியில் ரகானே சேர்க்கப்பட்டார். நடுத்தர வரிசை துடுப்பாட்ட வீரர் ரோகித் சர்மா, சுழற்பந்துவீச்சாளர் அஷ்வீன் நீக்கப்பட்டனர். வேகப்பந்து வீச்சாளர் புவனேஷ்வர் குமார், வாய்ப்பு பெற்றார். தென்னாபிரிக்க அணியில் சுழல் பந்துவீச்சாளர் கேஷவ் மகராஜ்க்கு பதிலாக வேகப்பந்து வீச்சாளர் அன்டில் பெகலுக்வாயோ வாய்ப்புப் பெற்றார்.

நாணயச்சுழற்சியில் வென்ற இந்திய அணி முதலில் துடுப்பாட்டத்தை தேர்வு செய்தது.

**ஹோலி ஆறுதல்**

இந்திய அணிக்கு முரளி விஜய் - லோகேஷ் ராகுல் இணை மோசமான ஆரம்பம் வழங்கியது. பிலாண்டர் 'வேகத்தில்' ராகுல் (0) வெளியேறினார். ரபாடா பந்தில் முரளி விஜய் (8) சரணடைந்தார். இந்திய அணி, 13 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களை இழந்து திணறியது. பின் இணைந்த ஹோலி, புஜாரா இணை படுமந்தமாக ஆடியது. பிலாண்டர் பிடி வாய்ப்பை நழுவவிட்டதால், 11 ஓட்டங்களில் கண்டம் தப்பிய ஹோலி, ரபாடா பந்தை பவுண்டரிக்கு விரட்டி அரைசதமடித்தார். மூன்றாவது விக்கெட்டுக்கு 84 ஓட்டங்கள் சேர்த்திருந்த போது, நிகிடி பந்தில் ஹோலி (54) ஆட்டமிழந்தார்.

**விக்கெட் 'மடமட'**

நீண்ட போராட்டத்திற்கு பின், அணியில் இடம்பிடித்த ரகானே (9), மோர்னே மோர்கல் பந்தில் ஆட்டமிழந்து ஏமாற்றினார். நிதானமாக ஆடிய புஜாரா, டெஸ்ட் அரங்கில் தனது 17ஆவது அரைசதமடித்தார். இவர், 50 ஓட்டங்கள் எடுத்திருந்த போது பெகலுக்வாயோ பந்தில் வெளியேறினார். அடுத்து வந்த பார்த்திவ் படேல் (2), ஹர்திக் பாண்ட்யா (0), மொஹமட் ஷமி (8), இஷாந்த் சர்மா (0) நிலைக்கவில்லை. புவனேஷ்வர் குமார் (30) ஆறுதல் கொடுத்தார்.

முதல் இன்னிங்ஸில் இந்திய அணி 187 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்தது. பும்ரா (0) ஆட்டமிழக்காமல் இருந்தார்.

பந்துவீச்சில் தென்னாபிரிக்க அணி சார்பில் ரபாடா 3, மோர்னே மோர்கல், பிலாண்டர், பெகலுக்வாயோ தலா 2 விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

**புவனேஷ்வர் அசத்தல்**

பின் முதல் இன்னிங்ஸை ஆரம்பித்த தென்னாபிரிக்க அணிக்கு டீன் எல்கர், மார்க்ரம் இணை ஆரம்பம் கொடுத்தது. புவனேஷ்வர் 'வேகத்தில்' மார்க்ரம் (2) வெளியேறினார். முதல் நாள் ஆட்டநேர முடிவில், முதல் இன்னிங்ஸில் தென்னாபிரிகக அணி ஒரு விக்கெட்டை இழந்து 6 ஓட்டங்கள் எடுத்திருந்தது. எல்கர் (4), ரபாடா (0) ஆட்டமிழக்காமல் இருந்தனர். இந்தியா சார்பில் புவனேஷ்வர் ஒரு விக்கெட் வீழ்த்தினார்.

**54 பந்துகள்**

இந்தியாவின் புஜாரா, தனது முதல் ஓட்டத்தை 54ஆவது பந்தில்தான் எடுத்தார். இதன்மூலம் டெஸ்ட் அரங்கில், முதல் ஓட்டத்தை எடுப்பதற்கு அதிக பந்துகளை சந்தித்த இந்திய வீரர்கள் பட்டியலில் 2ஆவது இட்ம் பிடித்தார். முதலிடத்தில் ராஜேஷ் சவுக்ான் (57 பந்து, எதிர் இலங்கை, 1994) உள்ளார்.

கடந்த 2001க்கு பின், 50 அல்லது அதற்கு மேற்பட்ட பந்துகளை எதிர்கொண்டு, தனது முதல் ஓட்டத்தை எடுத்த 2ஆவது சர்வதேச வீரரானார் புஜாரா. கடந்த 2013ல் ஆக்லாந்தில் நடந்த நியூசிலாந்துக்கு எதிரான டெஸ்டில், இங்கிலாந்தின் ஸ்ரூவேர்ட் பிரோட், 61ஆவது பந்தில் முதல் ஓட்டம் எடுத்தார்.

**அதிர்ஷ்ட வாய்ப்பு**

நேற்று, இந்திய துடுப்பாட்ட வீரர்கள் 3 முறை ஆட்டமிழக்கும் வாய்ப்பில் இருந்து அதிர்ஷ்டவசமாக தப்பினர்.

நிகிடி வீசிய 20ஆவது ஓவரின் 3ஆவது பந்து புஜாராவின் துடுப்பில் பட்டுச் சென்றது. இதற்கு தென்னாபிரிக்க வீரர்கள் ஆட்டமிழப்பு' கேட்டனர். ஆனால், நடுவர் ஆட்டமிழப்பு வழங்க மறுத்தார். 'டிவி' ரீப்ளேவில் எல்.பி.டபிள்யு., 'அவுட்' தெளிவாக தெரிந்தது. ஆனால், தென்னாபிரிக்க அணியினர் டி.ஆர்.எஸ்., கேட்காததால், 'டக்அவுட்' வாய்ப்பில் இருந்து தப்பிய புஜாரா, அரைசதமடித்தார்.

ரபாடா வீசிய 20ஆவது ஓவரின் முதல் பந்தை இந்திய அணியின் தலைவர் ஹோலி தூக்கி அடித்தார். 'வைட் மிட்-ஓப்' பகுதியில் களத்தடுப்பு செய்து கொண்டிருந்த பிலாண்டர், பிடியை நழுவவிட்டார். இதனையடுத்து 11 ஓட்டங்களில் கண்டம் தப்பிய ஹோலி, 54 ஓட்டங்கள் எடுத்து கைகொடுத்தார்.

பிலாண்டர் வீசிய 49 ஆவது ஓவரின் 4ஆவது பந்தை ரகானே அடித்தார். அப்போது விக்கெட் காப்பாளர் குயின்டன் டி கொக், பந்தை பிடித்தார். பந்து 'நோபோலாக' வீசப்பட்டது தெரியவர, ஆட்டமிழக்கும் வாய்ப்பில் இருந்து ரகானே தப்பினார்.



**35ஆவது முறை**

ரோகித், அஷ்வின் நீக்கப்பட்டு, ரகானே, புவனேஷ்வர் சேர்க்கப்பட்டதன் மூலம், ஹோலி தலைமையிலான இந்திய டெஸ்ட் 'லெவின்'"அணியில், தொடர்ச்சியாக 35ஆவது முறையாக மாற்றம் செய்யப்பட்டது. இதன்மூலம் டெஸ்ட் அரங்கில், தொடர்ச்சியாக அதிக போட்டிகளில் 'லெவின்' அணியை மாற்றிய தலைவர என்ற சாதனை படைத்தார் ஹோலி. இதற்கு முன், பங்களாதேஷின் தலைவராக இருந்த முஷ்பிகுர் ரஹிம், தொடர்ச்சியாக 34 முறை மாற்றம் செய்திருந்தார்.


## வேலைக்கு ஆட்கள் தேவை

கிளிநொச்சியில் அமைந்துள்ள அகிலா நகைமாடத்துக்கு பல்வேறுபட்ட பணிநிலைகளில் வேலைவாய்ப்பு உண்டு. *(ஆண், பெண் இருபாலாரும் விரும்பத்தக்கது) (கிளிநொச்சி நகரப் பகுதியை அண்மித்தவர்கள் விரும்பத்தக்கது.)*

**வயதெல்லை** :- ஆண்: 35 - 50, பெண்: 21 - 28

மேலதிக தகவல்களுக்கு எம்மை தொடர்புகொள்ளவும்

**021 228 3559, 076 349 0023**

(C-1369)

## விற்பனை முகவர்கள் தேவை

சுசுக்கி மோட்டார் சைக்கிள் கம்பனிக்கு சுன்னாகம், சாவகச்சேரி, புதுக்குடியிருப்பு, முள்ளியவளை, வவுனியா ஆகிய இடங்களுக்கு விற்பனை முகவர்கள் உடன் தேவை.

**தொடர்புகளுக்கு:**

**077 316 6786**

(C-1370)

## திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையம்
## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை
## வெளிவாரிப் பரீட்சைகள்

1. வணிக இரண்டாம் தேர்வு - 2015 (புதிய பாடத்திட்டம் - இறுதிச் சந்தர்ப்பம்)
2. வணிக மூன்றாம் தேர்வு - 2015 (புதிய பாடத்திட்டம்)
3. வணிக நான்காம் தேர்வு - 2015 (புதிய பாடத்திட்டம்)
4. வணிக மாணி - பகுதி - I - 2015 (பழைய பாடத்திட்டம் - மீள் பரீட்சை - இறுதிச் சந்தர்ப்பம்)
5. வணிக மாணி - பகுதி - II - 2015 (பழைய பாடத்திட்டம் - மீள் பரீட்சை)
6. வணிக மாணி - பகுதி - III - 2015 (பழைய பாடத்திட்டம் - மீள் பரீட்சை)

வணிகமாணி புதிய மற்றும் பழைய பாடத்திட்டத்தின் அடிப்படையிலான பரீட்சைப் பெறுபேறுகள் வெளியாகியுள்ளன. மேற்படி கற்கைநெறிக்கான மீள்பரீட்சைகளை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் மிகவிரைவில் நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இப்பரீட்சைக்கு தோற்றத் தகுதியான பரீட்சார்த்திகள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் இயங்கும் மக்கள் வங்கிக் கிளையில் ரூபா.300/= இனைச் செலுத்தியமைக்கான பற்றுச்சீட்டினை திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையத்தில் சமர்ப்பித்து விண்ணப்பப்படிவத்தினைப் பெற்றுக் கொள்ளலாம்.

தபால் மூலம் விண்ணப்பப்படிவத்தினைப் பெற விரும்புவோர் நிதியாளர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் என்ற பெயருக்கு எழுதப்பட்ட ரூபா.300/=க்கான காசுக் கட்டளை/தபாற் கட்டளையை சுயமுகவரியிடப்பட்ட ரூபா.70/= பெறுமதியுடைய முத்திரை ஒட்டப்பட்ட 28 X 20 செ.மீ அளவுடைய தபால் உறையுடன் இணைத்து, பிரதிப் பதிவாளர், **திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், திருநெல்வேலி** என்ற முகவரிக்கு அனுப்புதல் வேண்டும்.

மேற்படி பரீட்சைகளுக்கான விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்வதற்கான இறுதித் திகதி 09.02.2018 (வெள்ளிக்கிழமை) ஆகும். பரீட்சைகள் நடைபெறும் திகதி மற்றும் விபரங்கள் பின்னர் பத்திரிகைகளில் விளம்பரப்படுத்தப்படும்.

**பட்டச்சான்றிதழ் பெற்றுக்கொள்ளல்**

11.09.2016ம் திகதிக்கு முன்னரான பட்டம் செல்லுபடியாகும் திகதியினை உடைய வெளிவாரி பட்டதாரிகளுக்கான பட்டச்சான்றிதழ்கள் வழங்கப்படுகின்றன. மாணவர் பதிவேட்டுடன் அலுவலக நேரத்தில் நேரடியாக சமுகமளித்து பட்டச் சான்றிதழ்களை பெற்றுகொள்ளமுடியும்.

**பெறுபேற்று அறிக்கை (Statement) பெற்றுக்கொள்ளல்**

கலைமாணி பட்டக்கற்கைநெறிக்குரிய 2013ம் ஆண்டுக்குரிய பரீட்சைகளில் சித்தியடைந்து பட்டத்தினை பூர்த்தி செய்த வெளிவாரி மாணவர்களுக்கான பெறுபேற்று அறிக்கைகள் வழங்கப்படுகின்றன. மாணவர் பதிவேட்டுடன் அலுவலக நேரத்தில் நேரடியாக சமுகமளித்து விண்ணப்பப்படிவங்களை சமர்ப்பிப்பதன் மூலம் பெறுபேற்று அறிக்கையினை பெற்றுக் கொள்ளலாம்.

மேலதிக விபரங்களுக்கு 021-222-3612 என்ற அலுவலக தொலைபேசி எண்ணுடன் தொடர்பு கொள்ளலாம்.

பதிவாளர்
24.01.2018 (C-1371)

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
## விஞ்ஞான பீடம்

**விஞ்ஞானத்தில் பொதுப்பட்டத் தேர்வு - 2016 நிலை 1G, 2G, 3G**
**கணனி விஞ்ஞான பட்டத் தேர்வு - 2016 நிலை 1S, 2S, 3S, 4S**
**விஞ்ஞானத்தில் சிறப்புப் பட்டத்தேர்வு - 2016 நிலை 3M, 4M**

**இரண்டாம் அரையாண்டு கற்கைநெறி இறுதித் தேர்வு**

இரண்டாம் அரையாண்டில் கற்பிக்கப்பட்ட கற்கைநெறி அலகுகளுக்கான கற்கைநெறி இறுதித்தேர்வுகள் (End of Course Examinations) பங்குனி 2018 இல் ஆரம்பமாகும்.

இவ்வலகுகளுக்கான கற்கைநெறி இறுதித்தேர்வில் மீள் பரீட்சார்த்தியாகத் தோற்ற விரும்பும் மாணவர்கள் பூரணப்படுத்திய தேர்வு அனுமதிப்படிவங்களை தேர்வுக்கான கட்டணம் செலுத்திய பற்றுச்சீட்டுடன் 2018 மாசி 2ஆம் திகதிக்கு முன்னர் விஞ்ஞான பீடாதிபதி அலுவலகத்தில் சமர்ப்பிக்குமாறு வேண்டப்படுகின்றனர்.

22.01.2018 (C-1372) பதிவாளர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனாதிபதியும் பிரதமரும் இணைந்து

# புதிய அரசியலமைப்பு உருவாக்க நடைமுறைகளை வெற்றிகரமான ஒரு முடிபுக்கு கொண்டுவர வேண்டும்



## சிங்கப்பூர் பிரதமரிடம் எதிர்க்கட்சித் தலைவர் சம்பந்தன் சுட்டிக்காட்டு

(கொழும்பு)

புதிய அரசியல் யாப்பு உருவாக்கம் தொடர்பிலான தற்போதைய நிலைமை குறித்தும் இந்த நடைமுறைகளை வெற்றிகரமான ஒரு முடிவுக்குக் கொண்டு வருவதற்கு நாட்டின் ஜனாதிபதியும் பிரதமரும் இணைந்து செயற்பட வேண்டும் எனவும் எதிர்க்கட்சித்தலைவரும் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் தலைவருமான இரா.சம்பந்தன் சிங்கப்பூர் பிரதமர் லீ ஹிசேயின் லூங்கிடம் வலியுறுத்தியுள்ளார்.

எதிர்க்கட்சித்தலைவர் சம்பந்தனுக்கும் சிங்கப்பூர் பிரதமர் லீ ஹிசேயின் லூங்கிற்கும் இடையே நேற்று நடைபெற்ற சந்திப்பின்போதே அவர் இவ்வாறு வலியுறுத்தியுள்ளார்.

இதன்போது புதிய அரசியல் யாப்பு உருவாக்கம் தொடர்பிலான தற்போதைய நிலைமை குறித்து சிங்கப்பூர் பிரதமரை சம்பந்தன் தெளிவுபடுத்தினார்.

இந்த நடைமுறைகளை வெற்றிகரமான ஒரு முடிவுக்குக் கொண்டு வருவதற்கு ஜனாதிபதியும் பிரதமரும் இணைந்து செயற்பட வேண்டியதன் அவசியத்தைச் சுட்டிக்காட்டிய சம்பந்தன் புதிய அரசியலமைப்புத் தொடர்பில் சிங்கள மக்கள் மத்தியில் பரப்பப்படும் பிழையான, தேவையற்ற அச்சங்களை நீக்கு முகமாக ஜனாதிபதியும் பிரதமரும் சிங்கள மக்கள் மத்தியில் புதிய அரசியல் யாப்புத் தொடர்பில் தெளிவூட்டல்களை மேற்கொள்ள வேண்டியதன் அவசியத்தையும் வலியுறுத்தினார்.

தற்போது மாகாண சபைகளுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்கள் போதுமானதல்ல என்பதையும் சம்பந்தன் சிங்கப்பூர் பிரதமருக்கு எடுத்துக் கூறினார்.

வடக்குக் கிழக்கில் வாழும் தமிழ் மக்கள் ஒருமித்த, பிரிக்க முடியாத, பிரிவுபடாத நாட்டிற்குள் தீர்வொன்றை விரும்புகிறார்கள். ஆகவே, புதிய அரசியல் யாப்பானது தமிழ் மக்களின் நீண்டகால அபிலாஷைகளை நிறைவேற்றுகின்ற ஒன்றாக அமைய வேண்டுமெனவும் வலியுறுத்தினார். போலியான ஒரு தீர்வை நாம் எப்போதும் ஏற்கப் போவதில்லை எனவும் மக்கள் தமது நாளாந்த நடவடிக்கைகள் தொடர்பான விடயங்களில் தங்களது அதிகாரங்களைப் பாவிக்கக் கூடிய ஓர் உண்மையான அதிகாரப்பகிர்வு ஏற்பாட்டினையே நாம் வேண்டி நிற்கிறோம் என்றும் சம்பந்தன் தெரிவித்தார்.

இந்தப் பிரச்சினை தொடர்ந்தும் தீர்க்கப்படாமல் இருக்க முடியாதெனவும் இந்த வருடத்திற்குள் புதிய அரசியல் யாப்பு ஏற்படுத்தப்பட வேண்டுமெனவும் தெரிவித்தார்.

மேலும், இந்நாடானது கடந்த காலங்களில் துர்அதிர்ஷ்டவசமாக பிழையான பாதையில் பயணித்துள்ளது. அந்நிலைமைகளைச் சரிசெய்வதற்கு இதுவொரு நல்ல தருணம் எனவும் எடுத்துக் கூறினார். (இ-7)

# பொலநறுவையில் மர்மநோய்

## 150 பேர் பாதிப்பு

(கொழும்பு)

பொலநறுவை - புலதிசிபுர கல்வியியற் கல்லூரியின் மாணவர்கள் திடீரென்று மர்ம நோய் ஒன்றினால் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

அங்கு பணியாற்றும் ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்களில் சிலர் உட்பட மர்ம நோயால் பீடிக்கப்பட்டு 150 பேரளவில் சிகிச்சை பெற்று வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இவர்கள் அனைவரும் காய்ச்சல் மற்றும் வயிற்றோட்டம் நோயினால் பாதிக்கப்பட்டுள்ளதுடன், நோய்க்கான காரணம் இதுவரை கண்டறியப்படவில்லை.

இதேவேளை, பாதிக்கப்பட்ட அனைவரும் பொலநறுவை பொது வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருவதாகவும் தெரியவருகிறது. (இ-7)

## திட்டம் போட்டுத் திருடும் கூட்டம்

# வயோதிபப் பெண்ணின் தங்கச் சங்கிலி அறுப்பு

(கரணவாய்)

சமுர்த்தி உத்தியோகத்தர்கள் வேடம் போட்ட ஆசாமிகள் வயோதிப மாதுவின் தங்கச் சங்கிலியினை அறுத்துச் சென்றுள்ளனர்.

தும்பளை மணியகாரன் சந்திப் பகுதியிலுள்ள வீட்டில் கடந்த செவ்வாய்க்கிழமை காலை இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது. இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது.

மேற்படி வீட்டிற்குச் சென்றவர்கள் தாம் சமுர்த்தி உத்தியோகத்தர்கள் எனவும் உங்களது வங்கிப் புத்தகத்தை பதிய வேண்டும். வங்கிப் புத்தகத்தைத் தருமாறு கோரி அதனைப் பெற்று பதிவது போன்று பாசாங்கு செய்து விட்டு வயோதிப மாதுவின் கழுத்தில் இருந்த இரண்டு பவுண் தங்கச் சங்கிலியை அறுத்துக் கொண்டு தப்பியோடியுள்ளனர். இது தொடர்பில் பருத்தித்துறைப் பொலிஸில் செய்யப்பட்ட முறைப்பாட்டினை அடுத்து பொலிஸார் அப் பகுதியல் சீ.சீ.ரி.வி கமராவின் உதவியுடன் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (இ-60)

# பேரறிவை விடுதலை செய்யக்கூடாது



## மத்திய அரசு மறுப்பு

(டில்லி)

முன்னாள் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் சிறையிலுள்ள பேரறிவாளனை விடுதலை செய்ய மத்திய அரசு எதிர்ப்புத் தெரிவித்துள்ளது.

ராஜீவ் காந்தியை கொல்வதற்கு பயன்படுத்தப்பட்ட வெடிகுண்டு பற்றிய விசாரணை தொடர்பாக பேரறிவாளன் தாக்கல் செய்த மனு மீதான விசாரணை உச்ச நீதிமன்றில் நடைபெற்று வருகிறது.

ஒப்புதல் வாக்குமூலத்தில் சில தகவல்கள் விடுபட்டிருப்பதால் தண்டனையை இரத்துச் செய்யக் கோரி பேரறிவாளன் தொடர்ந்த இடைக்கால மனு மீது உச்ச நீதிமன்றில் விசாரணை நடைபெற்று வருகிறது.

குற்றம் நிரூபிக்கப்படும் வரை தம்மை விடுதலை செய்ய பேரறிவாளன் வழக்குத் தொடர்ந்திருந்தார். உச்ச நீதிமன்றத்தில் சி.பி.ஐ. தாக்கல் செய்த பதில் மனுவில் விடுதலை செய்ய எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் ராஜீவ் காந்தி கொலை தொடர்பாக பேரறிவாளன் தொடர்ந்து மனு பெப்ரவரி 21 ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டது. (இ-8)

**மீனம்**: நாள், குடும்பத்திற்குத் தேவையான பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள், பொதுநல ஈடுபட்டில் அக்கறை காட்டுவீர்கள்.

**மேடம்**: நலலவர்களை சந்தித்து நலம் காணும் நாள், திட்டமிட்ட காரியமொன்றில் திடீரென மாற்றம் செய்வீர்கள், வேலைச்சுமை கூடும் நாள், ஆரோக்கியத்தில் கவனம் தேவை.

**இடபம்**: சிந்தித்துச் செயற்பட வேண்டிய நாள், பொறுப்பாக வேலைகளைச் செய்தாலும் ஏதாவது பழிச்சொல்லுக்கு ஆட்கொள்ள நேரிடலாம், சுப செலவுகள் அதிகரிக்கும்.

**மிதுனம்**: பெரிய மனிதர்களின் தொடர்புகள் கிடைக்கும், கலகலப்பான தகவல்கள் வந்து சேரலாம், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், கௌரவமான நாள்.

**கும்பம்**: வேலையில் சிறு மன உளைச்சல் ஏற்படலாம், உடன் பிறப்புகள் உங்கள் குண மறிந்து நடந்து கொள்வர், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்.

| | | | |
|---|---|---|---|
| | சந் | | |
| | இராசிபலன் கிரகநிலை | | ராகு |
| சூரி, சுக் கேது, புத | சந்திராஷ்டமம் சுவாதி | | |
| சனி | செவ் | குரு | |

**25.01.2018**

தை 12, வியாழக்கிழமை

சூரிய உதயம் காலை 6.35 மணிக்கு

அட்டமி முற்பகல் 11.03 மணிவரை

பரணி பின்னிரவு 3.43 மணிவரை

சுபநேரம் 8.06-9.36 மணிவரை

இராகுகாலம் 2.06-3.36 மணிவரை

அட்டமி நவமி

குறிப்பு: சுவாதி நட்சத்திரத்தில் பிறந்தவர்கள் இன்று விழிப்புடன் இருக்க வேண்டிய வேண்டிய நாள்

வளவன்

**கடகம்**: கண்ணியம் மிக்க ஒருவரின் சந்திப்பு இடம்பெறலாம், தலைமைப் பொறுப்புகள் உங்களைத் தேடி வரலாம், நண்பர்கள் மத்தியில் உங்களின் செல்வாக்கு மேலோங்கும்.

**மகரம்**: இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள், பெற்றோர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், பித்த சம்பந்தமான ரோக பயமுண்டு.

**சிம்மம்**: சாமர்த்தியமான பேச்சினால் சாதனை படைக்கும் நாள், மறைமுகப் போட்டிகள் அகன்று வியாபார விருத்தியுண்டு, கொடுக்கல்-வாங்கல்கள் ஒழுங்காகும்.

**தனுசு**: எதிர்பார்ப்புகள் நிறைவேறி ஏற்றம் பெறுவீர்கள், மனதில் உற்சாகமும் மகிழ்ச்சியும் அதிகரிக்கும், கொடுத்த வாக்கை காப்பாற்றி மகிழ்வீர்கள்.

**விருச்சிகம்**: அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர், விருந்துகளில் கலந்து கொள்ள அழைப்புகள் வந்து சேரலாம், தொழில் முன்னேற்றமுண்டு.

**துலாம்**: நண்பர்கள் மூலம் நன்மைகள் நடைபெறலாம், சென்ற இடத்தில் செல்வாக்கு மேலோங்கும், பொருளாதார நிலையில் முன்னேற்றம் ஏற்படலாம், போசன சுகமுண்டு.

**கன்னி**: மனதில் இனம்புரியாத குழப்பங்கள் தோன்றி மறையும், மற்றவர்களை விமர்ப்பதை தவிர்ப்பது நல்லது, பிரயாண பயமுண்டு, விரயங்கள் கூடும் நாள்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# டக்ளஸ் எம்.பியின் தலையீட்டால் காணி சுவீகரிப்பு இடைநிறுத்தம்

(யாழ்ப்பாணம்)

கடற்படையினரின் பாதுகாப்பு மற்றும் அவதானிப்பு மையம் அமைப்பதற்கெனக் கூறப்பட்டு, ஊர்காவற்றுறை, பருத்தியடைப்பு பகுதியிலுள்ள தனியாருக்குச் சொந்தமான காணி, நில அளவைத் திணைக்களத்தினால் இன்று அளவீடு செய்யப்படவிருந்த நிலையில் மேற்படி விடயம் தொடர்பில் காணி உரிமையாளர் உட்பட ஊர் பொதுமக்கள் நாடாளுமன்ற உறுப்பினர் டக்ளஸ் தேவானந்தாவின் அவதானத்திற்குக் கொண்டு வந்ததையடுத்து, காணி அமைச்சர் மற்றும் நில அளவையாளர் நாயகம் ஆகியோருடன் தொடர்பு கொண்ட டக்ளஸ் தேவானந்தா நில அளவீட்டு செயற்பாட்டினை இடைநிறுத்தியுள்ளார்.

எமது மக்களது காணி, நிலங்களில் பல படையினரிடமிருந்து இன்னமும் விடுவிக்கப்படாதுள்ள நிலையில், எமது மக்களுக்குச் சொந்தமான மேலும் காணிகளை படையினரின் பல்வேறு தேவைகளுக்கு என சுவீகரிப்பது நியாயமற்ற செயற்பாடாகும் என்பதை சுட்டிக்காட்டியுள்ள டக்ளஸ் தேவானந்தா மேற்படி காணி விடயம் தொடர்பில் ஆராய்ந்து பார்த்து, அது குறித்து ஒரு தீர்மானத்திற்கு வரும் வரையில் இக் காணி அளவீட்டை மேற்கொள்ளக் கூடாது என வலியுறுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# கற்றல் உபகரணங்கள் வழங்கல்



(கரணவாய்)

முன்னாள் இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரனின் பிறந்த தினத்தை முன்னிட்டு சந்நிதியான் ஆச்சிரமத்தினால் வறுமைக்கோட்டிற்குட்பட்ட 90 மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.

தொண்டைமானாறு சந்நிதி ஆச்சிரமத்தின் மோகனதாஸ் சுவாமிகள் தலைமையில் அண்மையில் நடைபெற்ற இந்நிகழ்வில் வறுமைக் கோட்டிற்குட்பட்ட 90 மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டதுடன் அன்னதானமும் வழங்கப்பட்டது. (இ-19-60)

# சட்டவிரோதமாக பெண் கைது! விசாரணைக்கு நீதிபதி உத்தரவு

(யாழ்ப்பாணம்)

சட்டவிரோதமான முறையில் கைது செய்தமை தொடர்பில் உரிய விசாரணை மேற்கொள்ளுமாறு பருத்தித்துறை மாவட்ட நீதிபதி பெருமாள் சிவகுமார் காங்கேசன்துறை பிராந்திய பொலிஸ் அத்தியட்சகருக்கு உத்தரவிட்டுள்ளார்.

பருத்தித்துறைப்பொலிஸார் ஊடாக நெல்லியடிப் பொலிஸாருக்கு அனுப்பப்பட்ட பிடிவிறாந்துக்கு அமைவாக பட்டியோடைப் பகுதியைச் சேர்ந்த பெண் ஒருவர் கடந்த 20.01.2018 அன்று கைது செய்யப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டார்.

அவ்வழக்கு 22.01.2018 அன்று பருத்தித்துறை நீதிமன்றில் எடுத்துக் கொள்ளப்பட்டபோது தாபரிப்பு வழக்கில் வழங்காளியான பெண்ணையே கைது செய்வதற்காக பருத்தித்துறைப் பொலிஸாரால் நெல்லியடிப் பொலிஸாருக்கு பிடியாணை பிறப்பிக்கப்பட்ட கட்டளை அனுப்பப், பட்டமையும் அதனைத் தொடர்ந்து நெல்லியடிப் பொலிஸார் அவரைக் கைது செய்ததும் தெரியவந்தது.

இதனையடுத்து சட்டவிரோதமான முறையில் கைது செய்தமை தொடர்பில் உரிய விசாரணை மேற்கொள்ளுமாறு பருத்தித்துறை மாவட்ட நீதிபதி பெருமாள் சிவகுமார் காங்கேசன்துறை பிராந்திய பொலிஸ் அத்தியட்சகருக்கு உத்தரவிட்டார்.

இதேவேளை குடத்தனைப் பகுதியில் மாடு திருடப்பட்டமை தொடர்பில் முறைப்பாடு செய்த குடும்பப் பெண் ஒருவரை பருத்தித்துறைப் பொலிஸார் பிடிவிறாந்தில் கைது செய்யப்பட்ட சம்பவம்ஒரு வருடத்திற்கு முன்னர் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது. (இ-60)

# தொழிற்பயிற்சி நெறிக்கான நேர்முகப் பரீட்சை யாழில்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் வலய கல்வி அலுவலக முறைசாராக் கல்விப் பிரிவின் ஒழுங்குபடுத்தலில் தொழிற் பயிற்சி தொடர்பான செயற்றிட்டமானது வடமாகாணக் கல்வித் திணைக்களத்தின் முறைசாராக் கல்விப்பிரிவுடன் இணைந்து TEC Vision Intrenational Training College (Pvt) Ltd நிறுவனத்தினால் நடத்தப்படவுள்ள வருமானம் தரும் கற்கை நெறியானது யா/உரும்பிராய் இந்துக்கல்லூரியில் 10 நாட்கள் (19.02.2018 தொடக்கம் 28.02.2018 வரை) சர்வதேச உள்நாட்டு வளவாளர்களால் முழுவதும் இலவசப் பயிற்சி நெறியாக மூலப் பொருட்கள், இயந்திர உபகரணங்கள் வழங்கப்பட்டு நடைபெற்று அவ் உற்பத்தி பொருட்களை ஐரோப்பிய நாடுகளில் சந்தைப்படுத்தி வருமானம் பெறும் வாய்ப்பு ஏற்படுத்தப்படவுள்ளது.

இப்பயிற்சி நெறியில் இணைத்துக் கொள்வதற்கான நேர்முகப் பரீட்சையானது யா/உரும்பிராய் இந்துக் கல்லூரியில் 29.01.2018 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9 மணிக்கு வடமாகாண கல்வித்திணைக்கள முறைசாராக் கல்விப்பிரிவினரால் நடைபெறவுள்ளது.

அன்றைய தினம் நேர்முகப்பரீட்சைக்கு தோற்றுபவர்கள் மட்டும் இப்பயிற்சி தொழிலில் இணைத்துக் கொள்ளப்படவுள்ளனர் என யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் என்.தெய்வேந்திரராஜா அறிவித்துள்ளார்.

பயிற்சிநெறிகள்: ஆயுர்வேத மூலிகைகள் கொண்டு உற்பத்திப் பொருட்கள். (Aurvedic Herbel Product), மட்பாண்டக் கைத்தொழில் (Ceramic Industries), தென்னந்தும்புக் கைத்தொழில் (Coconut Coir Work Industries),தோற்பொருள் உற்பத்திகள் (Lather work Industries), கடற்சிப்பிகள், பேப்பர், இரத்தினக் கற் கழிவுகளிலிருந்து புத்தாக்கப் பொருள் உற்பத்திகள் (Sea shell, Paper, Creational and waste gemdust Products.

இப் பயிற்சி நெறியில் பின்வருவோர் இணைத்துக் கொள்ளப்படுவர்.

பாடசாலையை விட்டு விலகிய 16 வயதிற்கு மேற்பட்டோர், ஒழுங்கான வரவு வீதத்தினைக் கொண்ட மாணவர்களின் பெற்றோர்கள், பொருளாதாரப் பிரச்சினையை எதிர்நோக்கும் பிள்ளைகளின் பெற்றோர்கள், மாற்று ஆற்றல் கொண்ட இடை விலகியோர், கற்று தொழில் வாய்ப்புப்பெற முடியாமல் உள்ள இளைஞர்கள், யுவதிகள் எனவும் அவர் அறிவித்துள்ளார். (இ)

# இல்ல மெய்வல்லுநர் போட்டி

யாழ்.நீர்வேலி றோ.க.த.க. பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை 26 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 1.30 மணியளவில் பாடசாலை மைதானத்தில் அதிபர்.சி.தர்மரத்தினம் தலைமையில் இடம்பெறும்.

இதில் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட செயலக மேலதிக அரசாங்க அதிபர் (காணி) சு.முரளீதரன், சிறப்பு விருந்தினர்களாக பாடசாலையின் பழைய மாணவனும், வலிகாம கல்வி வலய ஆங்கில உதவிக்கல் விப்பணிப்பாளர் சு.கலாதீ பன்,யாழ்.கல்வி வலய ஆங்கில ஆசிரிய ஆலோசகர் சு.செல்வரட்ணம், கௌரவ விருந்தினராக பாடசாலையின் பழைய மாணவன் (பிரான்ஸ்) நா.ஆனந்தராஜா ஆகியோர் கலந்து கொள்வர். (இ-8)

❖❖❖❖❖❖❖❖❖❖

(யாழ்ப்பாணம்)

கரவெட்டி கரணவாய் தாமோதர வித்தியாலயத்தின் இல்லமெய்வல்லுநர் போட்டி நாளை 26 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு வித்தியாலயத்தில் அதிபர் ஆனந்தராஜா விமலராஜா தலைமையில் இடம்பெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக மருதங்கேணி பிரதேச வைத்திய சாலை அதிகாரி கலாநிதி தாமோதரம்பிள்ளை உமாபதிசிவம், கௌரவ விருந்தினராக வித்தியாலயத்தின் ஓய்வுநிலை ஆசிரியர் திருமதி திருநாவுக்கரசு சின்னம்மா ஆகியோர் கலந்து கொள்வர். (இ-7)

❖❖❖❖❖❖❖❖❖❖

யாழ்.கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் திறனாய்வு இன்று வியாழக்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் நவரட்ணராஜா விளையாட்டு மைதானத்தில் கல்லூரி அதிபர் ச.வேலழகன் தலைமையில் இடம்பெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.வலயக்கல்விப் பணிப்பாளர் ந.தெய்வேந்திரராஜா,சிறப்பு விருந்தினர்களாக கல்லூரியின் பழைய மாணவர்,வலிகாம கல்வி வலய தமிழ் உதவிக் கல்விப்பணிப்பாளர் க.சந்திரலிங்கம், கூடைப்பந்தாட்ட பயிற்றுநர், இலங்கை இராணுவ கூடைப்பந்தாட்ட வீரர் து.ரட்சகன்,கௌரவ விருந்தினர்களாக ஓய்வு நிலை அதிபரும் பழைய மாணவர் சங்க உபதலைவருமான க.விநாயகலிங்கம், பருத்தித்துறை மாவட்ட சாரண ஆணையாளரும் முன்னாள் ஆசிரியருமான வே.சண்முகலிங்கம், பரிசில் வழங்குநராக யாழ்.உடுப்பிட்டி மகளிர் கல்லூரி ஆசிரியர்பா.தெய்வேந்திரராஜா ஆகியோர்கலந்து கொள்வர். (இ-8)

# 'கந்தபுராணம்' விளக்கவுரை

(யாழ்ப்பாணம்)

யாழ்.சின்மயாமிஷன் வதிவிட ஆச்சாரியாரால் வாரந்தோறும் வெள்ளிக் கிழமைகளில் "கந்தபுராணம்" விளக்கவுரை மாலை 6.30 மணிமுதல்7.30 மணிவரை இல.700, பருத்தித்துறை வீதி, நல்லூரில் அமைந்துள்ள "ஞானவேல்" ஆச்சிரமத்தில் நடைபெறுகின்றது.

இதில் நாளை 26ஆம் திகதி வெள்ளிக்கிழமை "ஆறுமுகப் பெருமானின் அவதாரம்" என்ற தலைப்பில் விரிவுரை இடம்பெறும். (இ-7)

# அலங்கார உற்சவம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மத்திய பேருந்து நிலையத்திற்கு அருகிலுள்ள ஸ்ரீஞானவைரவ சுவாமி ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் நாளை வெள்ளிக் கிழமை காலை 7 மணியளவில் விசேட அபிஷேகத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 10 நாட்கள் இடம்பெறும். (இ-10)




# வருடாந்த விளையாட்டு விழா

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை மகாஜனாக்கல்லூரியின் வருடாந்த விளையாட்டு விழா இன்று வியாழக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு கல்லூரி அதிபர் ம.மணிசேகரம் தலைமையில் இடம்பெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண கல்வித்திணைக்களத்தின் உடற் கல்வி உதவிக்கல்விப்பணிப்பாளர் க.சத்தியபாலன், சிறப்பு விருந்தினராக ஐக்கிய இராச்சிய பழைய மாணவர் சங்க உறுப்பினர்களான விமலதாசன் தம்பதியர், கௌரவ விருந்தினர்களாக தென்மராட்சி வலய பிரதிக்கல்விப் பணிப்பாளர் அ.பிறேமதாஸ், யாழ்ரன் கல்லூரி ஆசிரியர் வீரவதனன் ஆகியோர் கலந்து கொள்வர். (இ-7-105)

# யாழ். மாநகர சபையின் வரியிறுப்பாளர்கள் 10 வீதக் கழிவுடன் ஆதன வரியைச் செலுத்தலாம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகர சபையின் வரியிறுப்பாளர்கள் 2018 ஆம் ஆண்டிற்கான ஆதன வரியினை 10 வீதக்கழிவுடன் இம்மாதம் 31ஆம்திகதி வரை செலுத்தலாம் என யாழ். மாந [illegible]

இதற்கமைய வரியினை செலுத்துவதற்கேதுவாக வார விடுமுறை நாட்களான எதிர் வரும் 27,28ஆகிய திகதிகளிலும் பொதுவிடுமுறை நாளான எதிர்வரும் 31ஆம் திகதியும் அலுவலக செயற்பாடுகள் இடம் [illegible] மேலும்அறி [illegible] (இ-7-10)

# தொழில்நுட்பக் கற்கை நெறிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

(யாழ்ப்பாணம்)

தேசிய பயிலுநர் கைத்தொழிற் பயிற்சி அதிகார சபையின் கீழ் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்தில் (ICTT-NVQ Level 4) சான்றிதழைப் பெறுவதற்கான இலவசப் பயிற்சி நெறிக்கு யாழ்ப்பாணம், மானிப்பாய் பயிற்சி நிலையங்களிற்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

கல்வித்தகைமை, க.பொ.த.(சா/த)இல் கணிதம்-C, ஆங்கிலம்-C உள்ளடங்கலாக 6 பாடங்களில் சித்தி. அல்லது கணிதம்-S, ஆங்கிலம்-S, உள்ளடங்கலாக 6 பாடங்களில் சித்தியும் க.பொ.த.(உ/த) இல்2 பாடங்களில்சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

அத்துடன், விண்ணப்ப முடிவுத் திகதியன்று 25 வயதிற்கு உட்பட்டவராகவும் இருத்தல் வேண்டும்.

தகுதி உடையவர்கள் முழுப்பெயர், முகவரி, பிறந்த திகதி, தேசிய அடையாள அட்டை இலக்கம், கல்வித் தகைமைகள், தொலைபேசி இலக்கம், பயில விரும்பும் பயிற்சி நிலையம் என்பவற்றைக் குறிப்பிட்டு சுயமாகத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவத்தை மாவட்ட அலுவலர் NAITA, இல.44, சோமசுந்தரம் வீதி, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு 10.02.2018 இற்கு முன்னர்அனுப்பிவைக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

அத்துடன் காகித உறையின் இடது பக்க மேல் மூலையில் தகவல் தொடர்பாடல் கற்கைநெறி (ICTT) க்கான விண்ணப்பம் என தவறாது குறிப்பிட வேண்டும் என யாழ் மாவட்ட அலுவலர் கி.கிருஷ்ணபாலன் அறிவித்துள்ளார். (இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கம்பவாரிதி இ.ஜெயராஜுக்கு வலம்புரி ஆசிரியரின் பதில்

மரியாதைக்குரிய கம்பவாரிதி இவற்றை அறியாமல் இருந்திருக்க மாட்டார் என்பது என் திடமான நம்பிக்கை.

இந்த நாட்டின் கௌரவமான, நேர்மையான, ஆத்மீகத்தின் வழிநின்று சிந்திக்கின்ற நீதியரசர் விக்னேஸ்வரனை அழைத்து வந்து விட்டு தங்களின் கூத்துக்கும் இனத்துரோகத்திற்கும் சர்வதேச விசாரணை நடந்து விட்டது என்று பொய் உரைக்கும் முதலமைச்சர் விக்னேஸ்வரன் ஆதரவு வழங்க வேண்டும் என்று தமிழரசுக் கட்சியினர் நினைப்பது சரியா? என்பது தான் எங்கள் தாழ்மையான கேள்வி.

பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரனை எதிர்த்தால் தங்கள் பதவிக்கு ஆபத்து வரும். அடுத்த தேர்தலில் ஆசனம் கிடைக்காமல் போகும் என்ற ஒரே காரணத்திற்காக பயந்து நடிக்கின்ற அநீதியாளர்களை கண்டித்தும் விமர்சித்தும் எழுத வேண்டிய சூழ்நிலை ஏற்படுகிறது.

குறிப்பாக தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா அவர்கள் தன் கட்சித் தலைமையை சரிவரச் செய்யவில்லை என்பதும் அந்தக் கட்சியின் செயலாளர் துரைராஜசிங்கம் தமிழ் மக்களின் நிலையறியாதவராக செயற்படுவதும் பட்டவர்த்தனமாக தெரிகிறது.

கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தர் ஐயாவின் முதுமையும் உடல் இயலாமைத் தன்மையும் காரணமாக சுமந்திரனுடன் சேர்ந்து போவதுதான் ஒரே வழி என்று நினைப்பதுமே இங்கு நடக்கின்ற அத்தனை குழப்பங்களுக்கும் காரணம் எனலாம்.

ஒரு தவறு செய்தால் அதைத் தெரிந்து செய்தால் என்ற கட்டுரையில் சுமந்திரனைப் பற்றித் தாங்கள் எழுதிய உண்மையான விடயங்களை, தமிழரசுக்கட்சிக்குள் இருக்கக்கூடிய ஒருவர் எழுந்து நின்று எடுத்துரைத்திருந்தால் இன்று கூட்டமைப்பின் அரசியல் பயணம் தமிழ் மக்களுக்கு மிகப் பெரும் பெறுமதியை பெற்றுக் கொடுத்திருக்கும்.

துரியோதனன் சபையில் எழுந்து நின்று துரியோதனா நீ செய்வது தவறு என்றுரைத்து வில் முறித்த விதுரன் போன்ற நேர்மைத்திறன் மிக்கவர்களின் பஞ்சம் எங்கள் இனத்தை வேரறுக்கின்றது.

விடுதலைப் புலிகளுக்குப் பின்னர் தமிழ் மக்களின் அரசியல் தலைமையை ஏற்றுக் கொண்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமிழ் இனத்தின் உரிமை சார் விடயங்களிலும் அபிவிருத்தித் திட்டங்களிலும் அதிகூடிய கவனம் செலுத்தி இருக்க வேண்டும்.

ஆனால் அதனை அவர்கள் செய்யத் தவறினர்.

சிறைகளில் வாடும் தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலையில் கூட போலித்தனமாக நடந்து




கொண்டனர்.

எங்கள் அரசியல் தலைவர்கள் எங்களின் விடுதலையில் கவனம் செலுத்துவர் என்று தமிழ் அரசியல் கைதிகள் நம்பியிருக்க, இவர்களோ அரசாங்கத்துடன் சேர்ந்து தங்களின் நலன்களை கவனிப்பதிலேயே காலம் கழித்தனர்.

இவற்றை எல்லாம் பட்டியல் படுத்தும் போது முதலமைச்சர் விக்னேஸ்வரனின் தலைமைத்துவப் பண்பு தொடர்பில் கேள்வி எழுப்பிய எனக்கு, நீங்கள் வேறு ஏதோவெல்லாம் சொல்கிறீர்கள் என்று கூட நீங்கள் நினைக்கலாம்.

ஆனால் இதற்கும் அதற்கும் தொடர்பு உண்டு.

ஒரு தவறு செய்தால் அதைத் தெரிந்து செய்தால்... என்று நீங்கள் எழுதிய கட்டுரையில் பாராளுமன்ற உறுப்பினர் சுமந்தி ரனின் சர்வா திகாரப் போக்கை துலாம்பரப் படுத்தியிருந்தீர்கள்.

இவ்வாறு சுமந்திரனின் சர்வாதிகாரப் போக்கை நீங்கள் வெளிப்படையாகக் கண்டிப்பதற்கும் அவரின் செயற்பாட்டில் இருக்கக்கூடிய முன்னுக்குப் பின் முரணான போக்குகளை தமிழ் மக்கள் இனங்காண்பதற்கும் வடக்கின் முதலமைச்சரின் துணிச்சல் மிக்க உரைகளும் செயற்பாடுகளுமே காரணம் என்பதை எவரும் மறுத்து விட முடியாது.

இதை நாம் கூறும் போது என்ன இது என்று நீங்கள் விழிகளை உயர்த்திக் கொள்ளலாம். ஆனால் உண்மை அதுதான்.

மரியாதைக்குரிய கம்பவாரிதி அவர்களே!

வடக்கின் முதலமைச்சராக இருக்கின்ற நீதியரசர் விக்னேஸ்வரன் அவர்கள் கூட்டமைப்புடன் சேர்ந்து அவர்கள் சொல்வதெல்லாம் சரி என்று ஒத்து ஓடி இருந்தால் முதலமைச்சர் பதவியில் அவர் நிம்மதியாக இருந்திருக்கலாம். ஆனால் நாங்கள் நடுத்தெருவில் நின்றிருப்போம்.

ஆக, விக்னேஸ்வரன் என்றொரு தலைவன் வடக்கு மக்களுக்குக் கிடைத்ததால் தான் கூட்டமைப்பின் துரோகத்தனங்களில் நடந்தவை போக எஞ்சியவை தடுக்கப்பட்டன என்பதைச் சத்தியம் செய்வேன்.

இதற்காக முதலமைச்சர் விக்னேஸ்வரன் அவர்கள் உடல், உள ரீதியில் பட்ட அவஸ்தைகள் கொஞ்சமல்ல.

ஒருபுறம் கூட்டமைப்பின் முக்கிய பாராளுமன்ற உறுப்பினரின் கையாட்கள் மாகாண சபையைக் குழப்ப; மறுபுறத்தில் எப்படியும் வடக்கில் முதலமைச்சராகி விட வேண்டும் என்ற ஆசையில் அவைத் தலைவர் பதவியில் இருக்கும் சீ.வீ.கே.சிவஞானம் அவர்கள் முதலமைச்சருக்கு எதிராகச் செயற்பட; வடக்கு மாகாண சபையை எப்படி நடத்துவது என்பதை நீங்கள் தான் சொல்ல வேண்டும்.

ஆனால் என்னைப் பொறுத்த வரை கூட்டமைப்பை அதிலும் குறிப்பாக எம்.ஏ.சுமந்திரனை எதிர்த்து; சில ஊடகங்களின் திட்டமிட்ட எதிர்ப் பிரசாரத்தை முறியடித்து; கூட இருந்து குழிபறிக்கும் குறிப்பிட்ட மாகாண சபை உறுப்பினர்களைக் கட்டுப்படுத்தி வடக்கு மாகாண சபையின் முதலமைச்சராக சி.வி.விக்னேஸ்வரன் இருக்கிறார் என்றால் அவரின் தலைமைத்துவம் வேறு யாருக்குள என்பேன். இதனைத் தாங்கள் ஏற்பீர்கள் என்றும் நம்புகிறேன்.

மரியாதைக்குரிய கம்பவாரிதி அவர்களே!

வடக்கு மாகாண சபையில் எந்தத் தீர்மானத்தை முதலமைச்சர் கொண்டு வந்தாலும் அதனை முறியடிக்க வேண்டும் என்பதில் அவைத் தலைவர் தீவிரமாக இருந்தார்.

ஏன்? மாகாண சபையில் சிலர் இரகசிய விடயங்களையும் ஆவணங்களையும் வடக்கின் ஆளுநராக இருந்தவரிடம் சிலர் ஒப்படைத்த சம்பவங்களும் உண்டு. இவற்றை நீங்கள் அறிந்திருக்க நியாயம் இல்லை என்பதும் உண்மை.

எதுவாயினும் வடக்கு மாகாண சபையில் கொண்டு வரப்படும் வரவு- செலவுத் திட்டத்தை நிறைவேற்றுவதில் கூட கூட்டமைப்பின் உறுப்பினர்கள் பின்னடித்தனர்.

வரவு- செலவுத்திட்டத்தை தோற்கடிப்பதன் மூலம் முதலமைச்சர் விக்னேஸ்வரனுக்கு கேடு செய்ய முடியும் என்பதே அவர்களின் நோக்கமாக இருந்தது.

இதுவிடயத்தில் ஒன்றை மட்டும் நான் கேட்க விரும்புகிறேன்.

ஜனாதிபதி மைத்திரியின் அரசாங்கத்தின் வரவு- செலவுத் திட்டத்தை எதிர்க்கட்சியாக நின்று ஆதரிக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முதலமைச்சர் விக்னேஸ்வரனின் வரவு-செலவுத் திட்டத்தை ஆளும் கட்சியாக நின்று எதிர்ப்பது ஏன்? என்பதுதான் அந்தக் கேள்வி.

(நாளை தொடரும்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# 67 இலட்சத்து 90 ஆயிரத்து 358 ரூபா

## கிராம மக்களின் பொதுநலன் அபிவிருத்திப்பணிக்கு

## முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றினால் வழங்கல்

### மாந்தை கிழக்கு பிரதேச சபை செயலாளர் தெரிவிப்பு

(மல்லாவி )

**முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றத்தின் ஊடாக மாந்தை கிழக்கு பிரதேச சபைக்குட்பட்ட கிராம மக்களின் பொது நலன் சார்ந்த அபிவிருத்தி பணிகளுக்கு பயன்படுத்துவதற்காக கடந்த 2016, 2017 ஆகிய ஆண்டுகளுக்குரிய நிதி வரவாக 67 இலட்சத்து 90 ஆயிரத்து 358 ரூபா 38 சதம் பணம் கிடைக்கப் பெற்றுள்ளதாக மாந்தை கிழக்கு பிரதேச சபையின் செயலாளர் பாஸ்கரமூர்த்தி- சிவபாலராஜா தெரிவித்துள்ளார்.**

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

மாந்தை கிழக்கு பிரதேச சபைக்குட்பட்ட பகுதிகளில் வாழும் மக்களில் சிலர் சட்ட விரோதமான செயல்களில் ஈடுபடும் போது, அவர்களைப் பொலிஸார் கைது செய்து முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தும் போது சந்தேக நபர்கள் தமது குற்றத்தை நீதிபதி முன்பாக ஏற்றுக் கொண்டதை அடுத்து அவர்களுக்கு நீதிபதியினால் தண்டப்பணம் விதிக்கப்பட்டு வருகின்றது.

இந் நிலையில் இவ்வாறு அவர்களிடம் அறவிடப்படும் தண்டப் பணத்தில் இருந்து ஒரு பகுதி பணத்தை அவர்கள் வாழும் பிரதேச சபைக்கு உட்பட்ட பகுதிகளில் பொது வேலைத் திட்டங்களுக்குப் பயன்படுத்தும் வகையில் முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றத்தினால் வழங்கப்பட்டு வருகின்றது.

இதற்கமைய, கடந்த 2016 ஆம் ஆண்டுக்கான வரவாக 60 இலட்சத்து 53 ஆயிரத்து 75 ரூபா 4 சதம் கிடைக்கப் பெற்றுள்ளது. இந் நிலையில்,

கடந்த 2017 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 17 ஆயிரம் ரூபாவும், பெப்ரவரி மாதம் 11 ஆயிரத்து 200 ரூபாவும், மார்ச் மாதம் ஒரு இலட்சத்து 41 ஆயிரத்து 750 ரூபாவும், ஏப்ரல் மாதம் 4 இலட்சத்து 5 ஆயிரம் ரூபாவும், மே மாதம் 10 ஆயிரம் ரூபாவும், ஜூன் மாதம் ஆயிரத்து 500 ரூபாவும், செப்டெம்பர் மாதம் ஒரு இலட்சத்து 27 ஆயிரத்து 500 ரூபாவும், ஒக்டோபர் மாதம் 13 ஆயிரத்து 335 ரூபா 34 சதமுமாக மொத்தம் 7 இலட்சத்து 27 ஆயிரத்து 283 ரூபா 34 சதம் 8 மாதங்களுக்கான வரவாக கிடைக்கப் பெற்றுள்ளதாக மாந்தை கிழக்கு பிரதேச சபையின் செயலாளர் பாஸ்கரமூர்த்தி சிவபாலராஜா தெரிவித்துள்ளார். (2-15)

## பயிரழிவு காப்புறுதி செய்த விவசாயிகளுக்கு மட்டும் இழப்பீட்டுத் தொகை வழங்கப்படும்

### ஒட்டுசுட்டான் கமநல சேவை அபிவிருத்தி உத்தியோகத்தர் தெரிவிப்பு

(மல்லாவி )

ஒட்டுசுட்டான் கமநல சேவை நிலையப்பிரிவில் முத்தையன்கட்டு கமக்கார அமைப்புக்குட்பட்ட பகுதிகளில் 2017 - 2018 ஆம் ஆண்டு காலபோகத்தின் போது யானைகளின் தாக்குதல் காரணமாக முற்று முழுதாக 20, ஏக்கர் நெற்ச் செய்கை அழிவடைந்துள்ள நிலையில் 06, ஏக்கர் அழிவுக்கு மட்டுமே காப்புறுதி நட்டஈடு வழங்கப்படவுள்ளதாக ஒட்டுசுட்டான் கமநல சேவை நிலையத்தின் கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர் ம. சற்குணநேசன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஒட்டுசுட்டான் கமநல சேவைநிலையப் பிரிவில் முத்தையன்கட்டு பெரிய நீர்பாசனக் குளத்தின் கீழ் காலபோக நெற்ச் செய்கையை மேற்கொண்ட விவசாயிகளின் நெற்பயிர்களை யானைக் கூட்டம் உள்நுழைந்து நாசமாக்கியதால் சுமார் 20 ஏக்கர் அளவில் முற்றாக அழிவடைந்துள்ளது.

இதில் 06, ஏக்கரில் நெல் பயிரிட்டுள்ள விவசாயிகள் மட்டும் காப்புறுதி செய்துள்ளமைக்கு அமைவாக அவர்களுக்கு காப்புறுதி சபையின் ஊடாக பயிரழிவுக்கான இழப்பீட்டுத் தொகையை வழங்குவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப் பட்டுள்ளன.

மிகுதியாக இருக்கும் விவசாயிகளின் 14, ஏக்கர் நெற்ச் செய்கைக்கும் காப்புறுதி செய்யப்பட வில்லை இதனால் பயிரழிவுக்கு இழப்பீட்டுப் பணம் பெற முடியாத அவல நிலையில் விவசாயிகள் உள்ளனர்.

இதனால் பல இலட்சம் ரூபா நட்டத்தை விவசாயிகள் ஏதிர் நோக்கியுள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்ட கமநல அபிவிருத்தித் திணைக்களத்திற்கு தகவல்களை அனுப்பிவைக் கப்பட்டுள்ளதாகவும் அவர் இது தொடர்பில் மேலும் தெரிவித்துள்ளார். (2-15)




## மீள்குடியேற 720 குடும்பங்கள் பதிவு

(கண்டாவளை)

கிளிநெச்சி மாவட்டத்தில் தமது சொந்த இடங்களில் மீள்குடியேற அனுமதிக்குமாறு 720 வரையான குடும்பங்கள் பதிவுகளை மேற்கொண்டுள்ளதாக மாவட்ட செயலகப் புள்ளி விபரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தின் கரைச்சி, கண்டாவளை, பச்சிலைப்பள்ளி, பூநகரி ஆகிய பிரதேச செயலர் பிரிவுகளிலும் 43 ஆயிரத்து 720 குடும்பங்கள் மீள்குடியேறியுள்ள நிலையில் மேற்படி நான்கு பிரதேச செயலர் பிரிவுகளிலும் 720 குடும்பங்கள் மீள் குடியேறுவதற்காக தமது பதிவுகளை மேற்கொண்டுள்ளனர்.

அதாவது கரைச்சிப் பிரதேசத்தில் 125 குடும்பங்களும் கண்டாவளைப் பிரதேசத்தில் 16 குடும்பங்களும் பூநகரிப் பிரதேசத்தில் 346 குடும்பங்களும் பச்சிலைப்பள்ளி பிரதேசத்தில் 233 குடும்பங்களும் என மொத்தமாக 720 குடும்பங்களைச் சேர்ந்த 2 ஆயிரத்து 509 பேர் தமது சொந்த இடங்களில் மீள்குடியேற்றுமாறு கோரி தமது பதிவுகளை மேற்கொண்டுள்ளனர்.

குறிப்பாக பூநகரி பிரதேசத்திற்கு உட்பட்ட இரணைதீவு விடுவிக்கப் படாமை, பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர் பிரிவின் கீழ் உள்ள முகமாலை பகுதியில் வெடி பொருள் அகற்றுவதில் உள்ள தாமதம் என்பவற்றால் அதிகளவான குடும்பங்களும் ஏனைய படையினர் வசமுள்ள காணிகளால் குறிப்பிட்ட சில குடும்பங்களும் மீள்குடியேற முடியாத நிலை காணப்படுகின்றது. (2-315)

## 324 ஆவது நாளாகவும் தொடர்கிறது

## முல்லையில் உறவினர்களின் போராட்டம்



(பனிக்கன்குளம்)

வலிந்து காணாமலாக்கப்பட்டோரின் உறவினர்கள் முல்லைத்தீவில் கடந்த மார்ச் மாதம் 8 ஆம் திகதி ஆரம்பித்த போராட்டம் இன்று முல்லைத்தீவு மாவட்ட செயலகம் முன்பாக 324 ஆவது நாளாக தொடர்ந்து வருகிறது.

இறுதிக்கட்ட யுத்தத்தின் போது சரணடைந்த, இராணுவத்திடம் கையளித்த, கைது செய்யப்பட்டு மற்றும் யுத்த காலத்தில் கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் தமது உறவுகள் தொடர்பில் உரிய தீர்வை முன்னெடுக்குமாறு வலியுறுத்தி தொடர் கவனயீர்ப்பு போராட்டத்தை முன்னெடுத்துள்ளனர்.

தமக்கான நீதியான தீர்வு கிடைக்கும் வரை தமது போராட்டம் தொடரும் என மக்கள் தெரிவிக்கின்றனர். (2-281)

## வடிகானுக்கு மூடியிடுங்கள்

### பொதுமக்கள் கோரிக்கை



(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு நகர்ப்பகுதியில் புதுக்குடியிருப்பு - பரந்தன் வீதியில் அமைக்கப்பட்டுள்ள வடிகான்களுக்கு மூடியிட்டு தருமாறு வர்த்தகர்கள் மற்றும் மக்கள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் கோரிக்கை விடுக்கின்றனர்

குறித்த வீதியின் அருகில் நீர் வடிந்தோடுவதற்க்காக அமைக்கப்பட்டுள்ள வடிகானுக்கு மேல் மூடிகள் போடப்படாததன் காரணமாக குறித்த பகுதியால் அப்பகுதியில் உள்ள வர்த்தக நிலையங்களுக்கு செல்ல முடியாத நிலை காணப்படுகின்றது.

இரவு நேரங்களில் குறித்த வடிகானுக்குள் தவறி விழுந்து விபத்துக்கள் இடம் பெற ஏதுவாக இருப்பதால் குறித்த வடிகானுக்கு மூடியிட சம்மந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென மக்கள் தெரிவிக்கின்றனர்

அத்தோடு குறித்த கான் மூடப்படாததால் வர்த்தக நிலையங்களுக்கு வருகை தருபவர்களும் வேறு கடைகளுக்கு செல்வதாக வர்த்தகர்கள் தெரிவிக்கின்றனர் எனவே குறித்த வடிகானுக்கு மேல் உடனடியாக மூடியிட்டு உதவுமாறு சம்மந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்குமாறு மக்கள் மற்றும் வர்த்தகர்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (2-281)

## மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள்





(குருமன்காடு)

முல்லைத்தீவில் இரு பாடசாலைகளைச்சேர்ந்த மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கி வைக்கப்படடுள்ளன.

வன்னி மண் நற்பணி மன்றத்தின் ஏற்பாட்டில் மு/முல்லைத்தீவு ஒலுமடு ம.வி .. வன்னி விளாங்குளம் மகாவித்தியாலய மாணவர்களுக்கு புத்தகபை மற்றும் பாடசாலை உபகரணங்கள் நேற்று முன்தினம் வழங்கி வைக்கப் பட்டன.

சுவிஸ் நாட்டைச் சேர்ந்த விச்சு விஷ்ணு என்பவரின் நிதி அனுசரணையுடன் வன்னி மண் நற்பணி மன்ற உறுப்பினர் ந.பரணிதரனினால் உதவிகள் வழங்கி வைக்கப்பட்டது. யுத்தம் காரணமாக பாதிப்படைந்த முல்லைத்தீவு மாவட்டத்திற்குட்பட்ட குறித்த பாடசாலை களில் கல்விகற்கும் வறுமைக் கோட்டிற்குட்பட்ட மாணவர்களுக்கே இந்த உதவிகள் வழங்கப்பட்டன. (2-250)

## யானைகள் அட்டகாசம் பயிர்ச்செய்கைகள் அழிப்பு

(கண்டாவளை)

முல்லைத்தீவு தென்னியங்குளம் பகுதியில் தொடரும் காட்டுயானைகளின் அட்டகாசத்தால் அன்றாடம் அச்சத்துடன் ஒவ்வொரு இரவுகளையும் கழிக்க வேண்டியுள்ளதாக இப்பகுதி மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

தென்னியன்குளம் பகுதியில் வாழும் 90 வீதமான குடும்பங்கள் விவசாயத்தையே வாழ்வாதாரத் தொழிலாக கொண்டு வாழ்ந்துவருகின்றன.

இந்நிலையில் இக்கிராமத்தில் தினமும் யானைகளின் தொல்லை அதிகரித்துக் காணப்படுவதுடன் காட்டு யானைகளால் பயிர்செய்கைகள் மற்றும் பயன்தரு மரங்கள் அழிக்கப்பட்டுவருகின்றன.

இவ்வாறு காட்டு யானைத் தாக்கம் காரணமாக வாழ்வாதாரத் தேவைகளுக்காக மேற்கொள்ளப்படும் பயிர்செய்கைகள் மற்றும் பயன்தரு மரங்களையும் அழித்து வருவதுடன் இரவு வேளைகளில் ஊர் மனைக்குள் புகுந்து காட்டு யானைகள் வீடுகளுக்கு அருகில்வந்து அட்டகாசம்செய்கின்றன.

இவ்வாறு அச்சத்துடன் ஒவ்வொரு இரவுகளையும் கழிக்க வேண்டியுள்ளதாகவும் இப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர். (2-315)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நான்கு இலட்சம் ரூபா பெறுமதியான முதிரை மரக்குற்றிகள் கைப்பற்று

## நேற்று அதிகாலை வேளை சம்பவம்



(பரந்தன்)

சட்டவிரோதமாக கடத்தப்பட்ட பெறுமதி வாய்ந்த முதிரை மரக் குற்றிகள் கிளிநொச்சி பொலிஸாரினால் கைப்பற்றப்பட்டுள்ளன.

கிளிநொச்சி உதயநகர் பகுதியில் உள்ள மரக்காலை ஒன்றுக்கு கடத்தப்பட்ட நிலையில் கிளிநொச்சி முல்லைத்தீவு பிரதி பொலிஸ் அதிபரின் விசேட அணியினரால் மேற்குறித்த மரக்குற்றிகள் நேற்று அதிகாலை 3 மணியளவில் கைப் பற்றப்பட்டுள்ளன.

கிளிநொச்சி பகுதிகளிலுள்ள காடுகளில் பெறுமதியான முதிரை மரங்கள் சட்டவிரோதமான முறையில் வெட்டப்பட்டு நகருக்கு கடத்தப்பட்டு வருகின்றமை தொடர்ச்சியாக பல தரப்பட்டவர்களாலும் தெரிவிக்கப்பட்டு வருகின்ற நிலையில் மேற்படி மரக்குற்றிகள் கைப்பற்றப்பட்டுள்ளது.

கைப்பற்றபட்ட மரக்குற்றிகளின் பெறுமதி சுமார் நான்கு இலட்சத்திற்கும் மேற்பட்டதாக இருக்கும் என கிளிநொச்சி பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை கிளிநொச்சி சாந்தபுரம் பகுதியில் இரண்டு டிப்பர் வாகனங்கள் சட்டவிரோதமான மணல் ஏற்றிய நிலையிலும் பொலிஸாரினால் கைப்பற்றப்பட்டுள்ளன. (2-312)

# கொட்டாஞ்சேனை லயன்ஸ் கழகம் 300 பேருக்கு உதவிப்பொருட்கள் வழங்கல்



(பனிக்கன்குளம்)

கிளிநொச்சி லயன்ஸ் கழகத்தின் ஏற்பாட்டில் கொட்டாஞ்சேனை லயன்ஸ் கழகத்தினால் கிளிநொச்சி மாவட்டத்தின் புதுமுறிப்பு, ஊற்றுப் புலம், கோணாவில் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த உதவி தேவைப் படும் 300 பேருக்கு உதவிப் பொருட்கள் வழங்கப்பட்டுள்ளன.

மேற்படி லயன்ஸ் கழகத்தினரால் கிளிநொச்சி மாவட்டத்தில் பாதிக்கப்பட்ட நிலையில் உதவி தேவைப்படும் 300 பேருக்கு கடந்த 20 ஆம் திகதி பிற்பகல் 12.30 மணியளவில் கிளி/புதுமுறிப்பு விக்னேஸ்வரா வித்தியாலயத்தில் வைத்து உதவிப் பொருட்கள் வழங்கப்பட்டுள்ளன.

இதில் பெண் பிள்ளைகளுக்கான ஆடைகள், மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள், தாய்மாருக்கான சேலைகள், உலருணவுப் பொதிகள் என்பன வழங்கப் பட்டுள்ளன.

மேற்படி உதவிப் பொருட்களைக் கையளிக்கும் நிகழ்வில் கொட்டாஞ்சேனை கொட்டகேனா லயன்ஸ் கழகத்தினர் மற்றும் கிளிநொச்சி லயன்ஸ் கழகத்தினர் ஆகியோருடன் பாடசாலையின் அதிபர் ஆசிரியர்கள் ஆகியோர் இணைந்து உதவிப் பொருட்களை வழங்கி வைத்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (2-281)

## ப.நோ. கூட்டுறவு சங்கங்களின்

# அரிசி ஆலைகளை இயக்கி இலாபத்தை பெற முடியவில்லை

## சங்க நிர்வாகங்கள் தெரிவிப்பு

(கண்டாவளை)

மன்னார் மாவட்டத்தில் பல நோக்குக் கூட்டுறவுச்சங்கங்களுக்கு பல அரிசியாலைகள் உள்ள போதும் அதனை இயங்கி இலாபத்தை எட்ட முடியாதுள்ளதாக சங்க நிர்வாகங்கள் தெரிவித்துள்ளன.

மன்னார் மாவட்டத்தின் நானாட்டான் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் மாந்தை மேற்கு பல நோக்குக் கூட்டுறவுச்சங்கம் என்பவற்றுக்கு அரிசியாலைகள் உள்ளன.

இவை அனைத்தும் இலாபத்தில் இயங்க முடியாத நிலையில் காணப்படுகின்றன என சங்க நிர்வாகங்கள் தெரிவித்துள்ளன.

அதாவது தனியார் அரிசியாலைகளுடன் போட்டிபோட்டு நெல்லைக் கொள்வனவு செய்து அரிசி யாக்கி விற்பனை செய்வது மிகவும் கடினமாகவுள்ளது என்றும் தெரிவித்துள்ள மேற்படி சங்கங்கள் கடந்த இரண்டு வருடங்களாக அரசாங்க அதிபரினால் வழங்கப்படும் நெல் கொள்வனவுக்கான முற்பணம் கிடைக்கவில்லை என தெரிவிக்கப்படுகின்றது.

காரணம் எமது மாவட்டத்தில் உள்ள பல கூட்டுறவுச்சங்கங்கள் நிதியை பெற்று அதனைத் திரும்பிச் செலுத்தாமையினால் குறித்த சங்கங்களுக்கான நிதி கிடைக்கவில்லை.

மாந்தை மேற்கு, மாந்தை வடக்கு,நானாட்டான் ஆகிய மூன்று பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களும் விவசாயப்பகுதிகளில் இருப்பதனாலும் விவசாயிகளிடமிருந்து நெல்லைக் கொள்வனவு செய்யக்கூடிய களஞ்சியசாலைகள் போதியளவில் உள்ளன என்பதும் குறிப்பிடத்தக்கது. (2-315)





## நடக்க முடியாது சிரமப்பட்ட இளைஞனுக்கு உதவி

(பனிக்கன்குளம்)

வவுனியா விநாயபுரத்தில் தந்தையினையிழந்து தாயின் அரவணைப்பில் வாழ்ந்து வரும் 34 வயதுடைய இளைஞன் ஒருவர் திடீரென ஏற்பட்ட நோயினால் நடக்க முடியாது மிகச் சிரமப்பட்டார். தனக்கு உதவி செய்யுமாறு தமிழ் விருட்சம் அமைப்பின் தலைவரிடம் விடுத்த வேண்டுகோளிக்கிணாங்க அவுஸ்திரேலியாவில் வாழ்ந்து வரும் ரமேஸினால் சக்கர நாற்காலி மற்றும் ஆடைகள் வழங்கி வைக்கப்பட்டன. இப் பொருட்களை தமிழ் விருட்சம் அமைப்பின் தலைவர் சந்திரகுமார் கண்ணன் மற்றும் செயலாளர் மாணிக்கம் ஜெகன் கடந்த 22ஆம் திகதி நேரில் சென்று வழங்கி வைத்தனர். (2-281)

## ஊரியான் குளத்தை ஆழப்படுத்தி புனரமையுங்கள்

(கண்டாவளை)

கிளிநொச்சி ஊரியான் குளத்தை ஆழப்படுத்தி புனரமைத்துத் தருமாறு இப்பகுதி விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.

கிளிநொச்சி கண்டாவளைப் பிரதேச செயலர் பிரிவின் கீழ் ஊரியான் குளம் கடந்த 2003ஆம் ஆண்டு நியாப் திட்டதின் கீழ் புனரமைக்கப்பட்டதன் பின்னர் இதுவரை புனரமைக்கப்படாது காணப்படுகின்றது.

இதனால் தற்போது குளத்தில் மண் நிரம்பி நீர் குறைவடைந்த நிலையில் காணப்படுகின்றது. இதனால் வரட்சிக் காலத்தில் கால்நடைகளும் ஏனைய காட்டு விலங்குகளும் நீர் தேடி அலைந்து திரிகின்றன.

எனவே குறித்த குளத்தை ஆழப்படுத்தி புனரமைத்துத் தருமாறு இப்பகுதி விவசாயிகள், பொது மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (2-315)

# கண்டாவளை பிரதேச செயலகத்திற்கான புதிய கட்டடம் மிக விரைவில் திறக்கப்படும்

(கண்டாவளை)

கிளிநொச்சி கண்டாவளைப் பிரதேச செயலகத்திற்கான புதிய கட்டடம் மிக விரைவில் திறந்து வைக்கப்படவுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தின் கரைச்சி,கண்டாவளை, பூநகரி, பச்சிலைப்பள்ளி ஆகிய நான்கு பிரதேச செயலர் பிரிவுகளிலும் பூநகரி, கண்டாவளை ஆகிய இரு பிரதேச செயலர் பிரிவுகளும் நிரந்தரமான கட்டடங்கள் இல்லாத நிலையில் தற்காலிக இடங்களில் பல் வேறு சிரமங்களுக்கு மத்தியில் இயங்கி வந்த நிலையில் பூநகரி பிரதேச செயலகத்திற்கான புதிய கட்டடம் அமைக்கப்பட்டு கடந்தாண்டு திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் கண்டாவளைப்பிரதேச செயலகத்தின் புதிய கட்டடத்திற்கான நிதியொதுக்கீடுகள் கடந்த 2010ஆம் ஆண்டிற்குப் பின்னர் இரண்டு முறை கிடைத்த போதும் அதற்கான இடத்தெரிவில் ஏற்பட்ட இழுபறி காரணமாக இரண்டு தடவையும் நிதி திரும்பிச் சென்றுள்ளது.

இதனையடுத்து கண்டாவளைப் பிரதேச செயலகத்திற்கான இடம் புளியம்பொக்கணைச் சந்தியில் தெரிவு செய்யப்பட்டு கட்டுமானப்பணிகள் துரித கதியில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

மாற்றுத்திறனாளிகள் தமக்கு தேவையான பிரிவுகளில் உதவிகளைப் பெறக்கூடிய வகையில் மாற்றுத்திறனாளிகளுக்கான வழிகளும் அமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (2-315)

## மஹோற்சவம்

(வவுனியா)

அருள்மிகு வவுனியா ஸ்ரீ கந்த சுவாமி கோவில் மஹோற்சவம் கடந்த 22ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 10 தினங்கள் திருவிழா நடைபெறும்.

இதில் எதிர்வரும் 29ஆம் திகதி திங்கட்கிழமை சப்பறத் திருவிழாவும் மறுநாள் 30ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு தேர்த் திருவிழாவும் நடைபெறும்.

எதிர்வரும் 31ஆம் திகதி புதன் கிழமை தீர்த்தத்திருவிழா காலை 9 மணிக்கு நடைபெறுமென ஆலய நிர்வாகத்தினர் அறிவித்துள்ளனர். (2)

# கணித விஞ்ஞான வினாவிடை போட்டி அறிவியல் நகரில் 27இல்

E week ஐ முன்னிட்டு யாழ். பல்கலைக்கழக கிளிநொச்சி வளாக பொறியியற்பீட மாணவர்கள் நடத்திய தமிழ்மொழி கணித விஞ்ஞான வினா விடைப் போட்டி (Q-fiesta) இன் முதலாம் இரண்டாம் கட்ட வினாவிடைப் போட்டியானது வவுனியா,மன்னார்,திருகோணமலை, யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் நிகழ்ந்தது.


இந்நிலையில் யாழ்.பல்கலைக் கழகம் கிளிநொச்சி வளாகத்தில் நிகழும் இறுதிக்கட்டப் போட்டிக்கு திருகோணமலையிலிருந்து ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரியும் ஸ்ரீ சண்முக இந்து மகளிர் கல்லூரியும் மன்னாரிலிருந்து மன்/சித்தி விநாயகர் இந்துக் கல்லூரியும் மன்/புனித சவேரியர் பெண்கள் தேசிய பாடசாலையும் முல்லைத்தீவிலிருந்து மு/குமுழமுனை மகா வித்தியாலயமும் மு/யோகபுரம் மகா வித்தியாலயமும் வவுனியாவிலிருந்து வவு/தமிழ் மத்திய மகாவித்தியாலயமும் வவு/இறம்பைக்குளம் பெண்கள் மகா வித்தியாலயமும் யாழ்ப்பாணத்திலிருந்து யாழ். இந்துக் கல்லூரியும் யாழ் ஹாட்லிக் கல்லூரியும் கிளிநொச்சியிலிருந்து கிளி/கிளிநொச்சி மகா வித்தியாலயமும் கிளி/சென்.தெரேசா பெண்கள் கல்லூரியும் தெரிவாகியுள்ளன.

இறுதிக்கட்ட போட்டியானது எதிர்வரும் 27ஆம் திகதி சனிக்கிழமை நடத்தப்படவுள்ளது என ஏற்பாட்டாளர்கள் தெரிவிக்கின்றனர். (2-312)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலைத்தரிசனம்





# ஆர்மோனிய வித்துவான் ஜோ.சத்தியசீலன் அவர்களுடனான சந்திப்பு

இவர் தனது தந்தையாரான ஆர்மோனிய வித்துவான் ஜோர்ஜை குருவாகக் கொண்டு எட்டு வயதில் கலைத்துறைக்குள் பிரவேசித்தார். இவர் சமூக நாடகங்கள், வரலாற்று நாடகங்கள், இசை நாடகங்கள், தெருவெளி நாடகங்கள், கிறிஸ்தவ நாடகங்கள் என ஆறாயிரத்திற்கு மேற்பட்ட மேடைகளில் இசையை வழங்கியுள் ளார். இவர் ஆர்மோ னியம், மிருதங்கம், மத்தளம், எக்கோடியன் ஆகிய இசைக்கருவி களை வாசிப்பதோடு வாய்ப்பாட்டினும் சிறந்து விளங்குகின்றார். பல் துறைகளில் அதி சிறப்புப் பெற்றிருந்தாலும் தற்பெருமை கொள்ளாத கலைஞராகவும் விருதுகள், கௌரவிப்புக்களை விரும்பாதவராகவும் உள்ளார். 1975 ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் யாழ்.சீலன் இசைக் குழுவை ஆரம்பித்து செயற்பட்டு வந்தார். 1949 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 9 ஆம் திகதி புதுக் குடியிருப்பில் பிறந்தார். ஆர்மோனிய வித்து வான் ஜோ.சத்தியசீலன் தன் கலைப் பணி பற்றி மனந்திறந்து கூறியவை வலம்புரியில் பிரசுரமாகிறது.

◆ தங்களின் தந்தையைக் குருவாகக் கொண்டு ஆர்மோனியத்தைப் பயின்றீர்கள். எட்டு வயதில் ஆரம்ப மான தங்களின் கலைப் பிரவேசம் பற்றிக் கூறுங்கள்...?

எனது தந்தையார் ஓர் ஆர்மோனிய வித்துவான். அவர் வீட்டில் வாசிக்கும் போது கவனமாகக் கேட்டுக் கொண்டிருப்பேன். ஆர்மோனியத்தை நானும் அப்பா மாதிரி வாசிக்க வேண்டுமென்ற ஆவல் ஏற்பட்டது. அப்பா அடிக்கடி கூறுவார் நீ நன்றாகப் படிக்க வேண்டும். படிக்கிற வயதில் ஆர்மோனி யத்தைக் கற்று படிப்பில் நாட்டத்தைக் குறை க்கக் கூடாது என்பார். நானும் அப்பா இல் லாத சமயத்தில் ஆர்மோனியத்தை எடுத்து வாசித்துப் பழகினேன். புதுக்குடியிருப்பு றோ.க.வித்தியாலயத்தில் தரம் எட்டில் கல்வி கற்றுக் கொண்டிருந்த போது ஒருமுறை பாடசாலை முடிந்த பின்னர் வீட்டிற்கு வந்து அம்மாவிடம் அப்பாவின் ஆர்மோனியம் எங்கே என்றேன். அம்மா அலுமாரிக்குள் இருக்கிறது என்றார். நானும் ஆர் மோனி யத்தைத் தூக்கிக் கொண்டு அயற் காணி யின் பற்றைக்குள் ஓலைப்பாயை விரித்து விட்டு வாசித்துக் கொண்டிருந்தேன். வெளி யூருக்குப் போன தந்தை வீட்டிற்கு வந்து அலுமாரியைப் பார்த்துவிட்டு ஆர்மோனியம் எங்கே என வினவுகின்றார். அம்மா நான் எடுத்துக் கொண்டு போனதைக் கூறத் தந்தையார் என்னிடம் வந்து நானல்லோ சொன்னனான் படிக்கிற வயதில் படிக்க வேண்டுமென்று கூறி அடித்துவிட்டு முழங்காலில் இருத்தி நெற்றியில் கல்லு வைத்து தண்டனை தந்தார். இதனை அறிந்த அம்மம்மா நெற்றியில் கல்லை எடுத்து விட்டு முழங்காலில் இருந்த என்னை எழுப்பி விட்டார். அதன் பின்னர் சிறிது காலம் மட்டும் வாசிக்க முற்படா மல் தந்தையின் வாசிப்பை அவதானித் துக் கற்று வந்தேன். எனது 25 வயதில் தந்தை யின் ஆர்மோனியத்தைத் தோளில் ஐந்து கிலோ மீற்றர் காவிச் சென்று பின்னர் பேருந் தில் ஏறி யாழ்ப்பாணம் அரியாலை வந்தேன். இங்கு எனது சகோதரி கேட்டா, அண்ணா கலைமகள் சனசமூக நிலையத்தில் நாடக நிகழ்வு இருக்குது ஆர் மோனியம் வசிக்கச் சொல்லி அங்கு. அந் நாடகத்திற்கு வாசித்து அப்படியே கலையுலகில் கால் பதித்தேன். எனது தந்தை யாரைக் குருவாகக் கொண்டு கேள்வி ஞானத்தால் வளர்ந்து ஆறாயிரம் நிகழ்வுகளுக்கு மேல் ஆர்மோனியத்தை வாசித்துள்ளேன்.

◆ இன்று ஆர்மோனியத்தின் பயன்பாடு குறைந்து, நவீன இசைக் கருவிகளின் பயன்பாடு அதிகரித்துள்ளதாகக் கூறு கிறார்கள் இதுபற்றி...?

செவிவழி புகுந்து இதய நாடிகளைத் தடவி உயிரினங்களை இசைய வைக்கின்ற பொழுது இனிய ஒலிகள் இசையென்ற பெயரைப் பெறுகின்றன. இவ்வொலிகள் செவியை மட்டும் எட்டி உள்ளத்தைக் கவராது நின்றுவிடின் அவை ஓசை என அழைக் கப்படுமேயன்றி இசை என்று பெயர் பெறுவதில்லை. இசை என்பது இதயத் தைத் தொடுவதோடு அதனை ஈர்க்கவும் வல்லதாக அமைய வேண்டும். ஆரம்ப காலங்களில் இசை நாடகம், சமூக நாடகம், கிறிஸ்தவ நாடகம் என்பவற்றிற்கு ஆர்மோனியத்தின் பயன்பாடு அதிகமாக இருந்தது. அதனைப் பலரும் விரும்பினர். இன்று தமிழ்த்தினப் போட்டிகளில்கூட ஆர்மோனியத்தைப் பயன் படுத்துவதைக் குறைத்து விட்டார்கள். கலா சாரத் திணை க்களத்தினால் ஆர்மோனியம், மிருதங்கம் போன்ற பல இசைக் கருவி களை வழங்கியிருந்தும் அவற்றினைப் பெற்றுக் கொண்ட பல மன்றங்கள் பயன்படுத்தாது மூலையில் வெறுமனே கிடக்கின்றன. உழவுப்பாட்டு, ஓடப்பாட்டு, பூசாரிப் பாட்டு, ஊஞ்சல் பாட்டு, புதிர்ப்பாட்டு, பழமொழிப்பாட்டு, கோமா ளிப்பாட்டு, ஏற்றப்பாட்டு, காவடிப்பாட்டு, தலாட்டுப்பாட்டு, வைகறைப் பாட்டு, குறத்தியர் பாட்டு, பிள்ளைப்பாட்டு, காதல் பாட்டு இவை போன்ற பல நாடோடிப் பாடல்களுக்கு ஆர்மோனியத்தின் பயன்பாடு உயர்வாக இருந்தது. இன்று இளம் சமூகம் ஆர்மோனிய இசையை பெரிதும் விரும்புகிறார்கள் இல்லை. அவர்கள் எதையும் முயற்சியின்றி இலகுவாகப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்ற மன நிலைகளில் உள்ளார்கள்.

◆ தாங்கள் மிருதங்கம், மத்தளம் ஆகிய இரு தோற்கருவிகளையும் வாசிப்பீர்கள். இந்த இரண்டு பெயர்களும் எப்படித் தோற்றம் பெற்றன?

நான் மிருதங்கம், மத்தளம் இரண்டையும் நாவாந்துறை இராசலிங்கம் மாஸ்டரிடம் ஒரு வருடம் பயின்றேன்.

மிருத் என்பது மண். அங்கம் என்பது உறுப்பு.

மிருத் +அங்கம் என்பது மண்ணாலாகிய உடல் என்பதே பொருள். மத்து மத்து என்று ஒலிப்பதனால் மத்தளம். (மத்து+தளம்) என்ற பெயராயிற்று. இதற்கு உதாரணமாக சல்சல் என்று ஒலிப்பது சல்லரி. கஞ்கஞ் என்று ஒலிப்பது கஞ்சிரா என்றும் சுட்டுவர்.

◆ பண்டைய தோற்கருவிகளின் பெயர்களை அறிவது சரியான அரி தாக இருக்கின்றது. இன்றைய இளம் தோற் கருவி வாத்தியக் கலைஞர்களுக்கு அவற்றின் பெயரினைக் கூறுவீர்களா?

ஆம், கட்டாயம் இளம் கலைஞர் அல்ல சகல வாத்தியக் கலைஞர்களும் அறிந்திருக்க வேண்டும். தமிழர் முழவியல் என்ற நூலின் ஆசிரியர் கலாநிதி சி.மகேந்திரன் பண்டைத் தமி ழரின் கருவிகள் எண்பது இருப்பதாகக் குறிப்பிடுகின்றார்.

1. அடக்கம், 2. அந்தரி 3. அமுத குண்டலி 4. அரிப்பறை 5. ஆகுளி 6. கமந்திரிகை 7. ஆவஞ்சி 8. உடல் 9. உடுக்கை 10.உறுமி 11. எல்லரி 12. தறங்கோள் 13. ஒருவாய்க் கோதை 14. கஞ்சிரா 15. கண்விழு தூம்பு 16. கணப் பறை 17. கண்டிகை 18. கரடிகை 19. கல்லல் 20.கல்லலடு 21. கல்ல வடத்திரள் 22. கிணை 23. கிரிக்கட்டி 24. குடமுழா 25. குண்டலம் 26. கும்மடி 27. கைத்திரி 28.கொட்டு 29. கோட் பறை 30. சகடை 31. சந்திரபறை 32. சந்திர வளையம் 33. சல்லரி 34. சல்லிகை 35. சிறுபறை 36 . சுத்தமத்தளம் 37. சென்டா 38. டமாரம் 39. தக்கை 40. தகுணித்தம் 41. தட்டை 42. தடாரி 43. தண்டோர்.44. தண்ணுமை 45. தபலா 46. தமருகம் 47. தமுக்கு 48. தவண்டை 49. தவில் 50.தாசரி தப்ப ட்டை 51. திமிலா 52. கடி 53. துருமை 54. சித்திரி 55.துந்துபி 56. தூரியம் 57. தொண் டகச் சிறுபறை 58. தோலக் 59. நகரி 60. நிசானம் 61.படவம் 62.படலிகை 63.பம்பை 64. பத[illegible] 65.[illegible] 66.[illegible] 67.பூமாடு வாத்தியம் 68.[illegible] 69.[illegible] ஜியக் கண்ணாடி மத்தளம் 70.பேரி 71. மருளி 72. மத்தளம் 73.மிருதங்கம் 74.முரசு 75.முருடு 76.முழவு 77.மேளம் 78.மொந்தை 79.விரலேறு 80. ஜமலிகா என எண்பது வகைக் கருவிகள் உள்ளன. இவற்றுள் நான்கு அல் லது ஐந்து கருவிகளைக் கற்றுவிட்டு தம்பட் டம் அடிக் கிறார்கள். நாம் கருவிகளை பூரண மாகக் கற்றுத்தேறவேண்டும். தொடர்ந்து கற்றுக் கொண் டிருக்க வேண்டும்.

◆ தாங்கள் பல்வேறு வகையான நாடகங்களுக்கு ஆர்மோனியம், மத்தளம் ஆகிய இசைக்கருவிகளை மீட்டியுள்ளீ ர்கள். இதில் தாங்கள் இசை வழங்கிய தெரு வெளி நாடகங்கள் பற்றி...?

நான் எஸ்.ஜீ.சாந்தன், ஜே.ஆர்.சுகுமார் ஆகியோரின் இசை நாடகங்களுக்கும் சமூக நாடகங்களுக்கும் வரலாற்று நாடகங்களுக்கும் கூத்துக்களுக்கும் கிறிஸ்தவ நாடகங் களுக்கும் என 6 ஆயிரத்துக்கு மேற்பட்ட மேடைக ளில் இசையை வழங்கியுள்ளேன். 2011 ஆம் ஆண்டு தெருவெளி நாடகங்கள் வன்னிப்ப ரப்பில் வெற்றி நடை போட்ட காலம். தெருவெளி நாடகத்தைப் பார்க்க மக்கள் அலை மோது வார்கள். நாடகம் எழுச்சி மிக்க தாக இருக்கும். நாடகத்தின் வெற்றி நாடக முடிவில் புதிய போராளிகள் இணைந்து கொள்வார்கள். நாடகத்தில் வழங்கப்படு கின்ற இசை மேலும் பார்வையாளர்களைச் சுண்டியிழுப்பதாக அமை யும். ஒரு நாடக த்தையே ஒரு நாளில் பலரின் வேண்டு கோளிற்கு இணங்க பத்துத்தடவைகள் மேடை யேற்றுவோம். கிட்டத் தட்ட 300 இற்கு மேற்பட்ட மேடைகளில் இசையை [illegible] வயதிலும் யார் நிகழ்வு [illegible] இசையை வழங்கும்படி கேட்டால் தாராள மனத்துடன் எனது இசைச் சேவையினை வழங்குவேன்.

◆ தாங்கள் யாழ். சீலன் இசைக் குழுவை நடத்தி வந்தீர்கள். தற்பொழுது இயங்காமல் இருக்கிறது. இயங்க வைப்பதற்கான முயற்சிகள் ஏதும் எடுத்திருக்கிறீர்களா?

1975 ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் அரியாலையில் இருந்தபோது யாழ்.சீலன் என்ற நாமத்துடன் ஆரம்பித்தேன். 1985 ஆம் ஆண்டு வரை சரியாகப் பத்து வருடங்கள் சிறப்பாக இயக்கி வந்தேன். பின்னர் யாழ்ப் பாணத்திலிருந்து மீண்டும் வன்னிக்குச் சென்றேன். போர்ச் சூழலில் எங்கள் உயிர்களைக் காப் பதா? இசைக் குழுவை நடத்துவா? என்ற கேள்வி பல நெருக்கடிகளைத் தாண்டி யும் என்னாலான இசைப்பணியை முன்னெ டுத்தேன். 2011 ஆம் ஆண்டு எனது மகள் வீரச்சாவு அடைந்தார். இவர் நல்ல பாடகி. எனது இசைக்குழுவில் பாடி வந்தார். ஒரு பக்கபலமாக இருந்தார். இவர் வீரச்சாவடைந்த பின்னர் சற்றுக் கலை வாழ்வில் இருந்து ஒதுங்க வேண் டியிருந்தது. சிறிது காலத்திற்குப் பின்னர் மீண்டும் கலைகளை முன்னெடுத்தேன். ஜோன்காபஸ் ஒரு ஆர் மோனியம் தந்தார். அதைத்தான் இன்று வரைப் பாவித்து வருகின்றேன். போதியளவு இசைக்கருவி கள் இன்மையாலும், போதிய கலைஞர்கள் இன்மையாலும் தொடர்ந்து இசைக் குழுவை முன்னெடுத்துச் செல்ல முடியவில்லை. அதற்கான முயற்சிகளைக் கலாசார உத்தியோகத்திரிடம் தெரிவித்துள் ளேன்.

◆ கலையில் ஈடுபடுவதால் கல்வி குறைந்து விடும் என்று கூறுபவர்களுக்கு நீங்கள் என்ன கூறுகிறார்கள்?

கலையாலே ஒரு நாளும் கல்வி அழியாது. கலை ஒருவனின் சிந்தனைச் சக்தியைத் தூண்டுகிறது. உதாரணமாக நாடகத்தில் ஒரு பாத்திரத்தை ஏற்றால் அப்பா த்திரத்தை அவ ரால் மனனம் செய்து பாத்திர வசனங்கள் பாடமான பின்னர் நடிக்கத் தொடங்குவார். மனனம் செய்கின்ற ஆற்றல் இருந்தால் கல்வி யிலுள்ள பாடங்களை இலகுவாக மனனம் செய்து பரீட்சையில் சித்தியடைந்து விடலாம். ஒவ் வொரு கலைகளுக்கும் கல்வி இருக்கிறது. பாடக் கூடிய குரல் வளம் இருந்தும் பாடலை வாசிக்கவோ மனனம் செய்யவோ முடியாத ஒருவரால் பாடலை பாட முடியாது.

மனிதரது உள்ளத்தை தன்வயமாக்கி இயக்கும் ஆற்றல் கலைகளுக்கு உள்ளன. அவற்றுள் கவின் கலைகளை உள்ளம், கண், காது இவற்றால் உணர்ந்தும் கண்டும் கேட்டும் உவகை எய்துகிறோம். கலைகளில் ஈடுபடுவதால் கல்வி குறைவடைகிறது என்ற எண்ணத்தை ஆசிரியர்கள், பெற்றோர்கள் , சமூகத்தினர் கைவிடவேண்டும்.

◆ தங்களின் கலையுலக வாழ்வில் மறக்க முடியாத அனுபவம் ஒன்றை பகிர்ந்து கொள்ளுங்கள்?

நான் ஒருமுறை கைவேலிப்பகுதியில் சென்றுகொண்டிருக்கும் போது திடீரென மழை வந்துவிட்டது. சைக்கிளின் பின்னால் தவில் வைத்திருந்தேன். ஒரு மரத்தை நாடி ஒதுங்கி நின்றேன். அந்த வழியால் ஒரு பிக்கப் வண்டி வந்து கொண்டிருந்து. அதற்குள் இருந் தவர்கள் யார் என்று எனக்குத் தெரியவில்லை. அந்தப் பிக்கப் வண்டிக்குள் தேசியத் தலைவர் வே.பிரபா கரன் இருந்தார். மறுநாள் உயிலங்குளத்தில் தெருவெளி நாடகம் போடச் சென்றிருந்தோம். குறி த்த ஒரு பொறுப்பாளர் வந்து சீலன் ஐயா நீங்கள் நேற்று மழைக்கு நனைந்ததை தலைவர் கண்டவர். உங்கள் எல்லோருக்கும் குடை கொடு க்கச் சொன்னார் என்று 18 பேருக்கும் பெரிய குடையைத் தந்தார். எவ்வளவு உயரிய சிந்தனை கலைஞர்களை அவ்வாறு உயர்வாக மதித்தார்கள்.

09.இறுதியாக நீங்கள் கலை உலகிற்கு மனந்திறந்து கூறுவது?

கலைகள் ஒரு சமூகத்தின் அடையாளமாக இருக்கின்றது. கலைஞர்களின் வளத்தை சரி யாகப் பயன்படுத்த வேண்டும். நிறை வான வராக வரும் வரை கற்க வேண்டும். தொடர் பயிற்சிக்கு உட்பட வேண்டும். குருவானவர் என திகழ்பவர் நிறைவானவராக இருக்க வேண் டும். அதற்காக வயது வித்தியாசம் இன்றி சம்பந்தப்பட்டவர்களிடம் சந்தேகங் களை கற்க வேண்டும். இசைத் தமி ழின் உரைகளைக் கொண்ட 92 இற்கு மேற்பட்ட நூல்கள் உள் ளன. இவற்றில் இருந்து இசை தொடர்பான அறிவைப் பெற்றுக் கொள்ள வேண்டும். மாண வர் களின் சந்தேகங்களை இவற் றில் இருந்து தெளி வுபடுத்த முடியும். இந்தப் பூமியில் இசையால் மய ங்காத மனிதர்கள் குறைவு. எமது பிள்ளைகளுக்கு சிறு வயதில் இருந்து கலைகளை கற்பதற்கான களங் க ளை உருவாக்கிக்கொடுக்கவேண்டும்.

நேர்காணல்:
**ஜெயம் ஜெகன்**

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org



இனுவில் திருப்பதி

# அருள்மிகு திருவேங்கடேஸ்வரர் ஆலயம்

## பீமஏகாதசி உற்சவம்

காலம் : 27.01.2018 சனிக்கிழமை

பெருமாள் மகா அபிஷேகம் - காலை 6.30மணி விஷேட ஆராதனை

அன்னதானம் : ந.ப 12.00மணி

சுவாமி வீதி உலா : மாலை 6.30 மணி

**தொடர்ந்து நித்திரை விழிப்பு வழிபாடு**
**அகண்ட நாம பஜனை**

- நள்ளிரவு 12.00 மணிக்கு விஷேட அபிஷேக ஆராதனை
- 28.01.2018 அதிகாலை தீர்த்த உற்சவம் அபிஷேகம்
- தொடர்ந்து பாறனை அன்னதானம்.

குறிப்பு: சகஸ்ர நாம அர்ச்சனை, விஷேட அபிஷேகம் செய்ய விரும்புபவர்கள் காரியாலயத்தில் முற்கூட்டியே பதிவை மெற்கொள்ளவும். நித்திரை விழித்து விரதம் அனுட்டிப்பவர்களுக்கு வசதி ஏற்படுத்தப் பட்டுள்ளது.

ஆலய தர்மகர்த்தா,
ச.கணேசலிங்கம்
தொடர்பு: 021 224 2300

(2546)

# மணிவிழாக்காணும் சான்றோன்



திரு.
## இ.ஜனக்குமார்

யாழ்.வர்த்தகர் சங்கம் 1958 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. சங்கமானது தலைவர்கள் அல்லது செயலாளர்கள் மாற்றமடைந்து பின்னர் 1989 ஆம் ஆண்டு மீண்டும் அமைத்து அதில் ஜனக்குமார் உறுப்பினராக இணைந்தார்.

யாழ்ப்பாணம் வணிகர் சங்கமாக 1996 ஆம் ஆண்டு புதிய பெயர் மாற்றத்துடன் ஆரம்பிக்கப்பட்டு ஜனக்குமார் இணைந்தார். இடர்பாடு மிகுந்த காலத்தில் பல இன்னல்களுக்கு முகங்கொடுத்துத் தீர்வுகண்டு அரச நிறுவனங்கள், இலங்கை பாதுகாப்புச்சேவை அதிகாரிகளுடன் கருத்துக்கள் பகிர்ந்து வர்த்தகர்களுடைய தொழிலை மேற்கொள்ள நடவடிக்கைகள் எடுத்து இயங்க வைத் தார். கப்பலிற் பொருட்கள் கொண்டு வரக் குறைந்த கட்டணத்திற்கு இணங்க வைத்து இயங்க இணக்கமும் கண்டார். கொழும்பில் இருந்து பொருட்கள் கொண்டு வரும் வர்த்தகர்கள் 4 ஆம் மாடிக்கு கொண்டு செல்லப்பட்டு இன்னல்களுக்கு ஆளானார்கள். அந்த நிலையை மாற்றி அவர் களை இனங்காட்டி வெகு சாதாரணமானவர்கள் என்பதை உறுதிப்படுத்தி தொழில் இலகுவாக நடைபெற ஆன பாதுகாப்புக்கள் ஏற்படுத்தி உதவினார்.

சிவன் இடபம் வழிபாட்டுக்குரியது. பெரிய இடபத்தை பெரும் தொகை கொடுத்துப்பெற்று கொலை செய்து இறைச்சியைப் பெற்றுப் பல தொகைகளைச் சுருட்ட வந்தவர்களிடமிருந்து இடபத்தைக் காக்க பெரிதும் பாடுபட்டு முயன்ற வர்த்தகர்களுடன் ஜெனக்குமார், இணைந்து அதற்குரிய தொகையைத் திரட்டி இடபத்தைப் பாதுகாத்து கீரிமலை நகுலேஸ்வரர் ஆலயத்திற் பாதுக்காக்க இன்றும் இடபம் அங்கு வழிபடப்படுகிறது.

இன்றும் வணிகக் கழகத்தலைவராகச் சேவையாற்றும் ஜனக்குமார் அவர்கள் ஆண்டறுபது மணிவிழாக் காணுகிறார்.

பிரமச்சாரியாகிய கலங்கரை விளக்காக காணும் மணிவிழாச் சிறப்புறவும் சேவை தொடர்ந்து மணியான பயன்கள் பல பெருகவும் வாழ்த்தி திண்ணபுரம் பூரணபுட்கலை ஐயனாரையும் ஈழத்துச் சிதம்பரம் தில்லைக்கூத்தன் திருப்பதம் பணிகின்றோம். ஓம் நமசிவாய.

Best Wishes!

க.கு.க.சிவபாலன் (K.K.K)
தேசபந்து, தேசமான்ய,
யாழ்ப்பாணம்.

(சி-1373)

# பணிநயந்து பாராட்டி மகிழ்கின்றோம்




அருட்திரு.
## ஜெறோ செல்வநாயகம்
(அதிபர்- யா/ புனித பத்திரிசியார் கல்லூரி)

அருட்பணியும் கல்விப்பணியும் இணைந்த உன்னதமான சமூகப் பணி புரிந்து இன்று(25.01.2018) அகவை அறுபதில் கல்விப் பணி நிறைவுறுத்தும் எமது பல்கலைக்கழக நண்பனும் கல்விப்புலச் சகபாடியுமான **அருட்திரு.ஜெறோ செல்வநாயகம்** அவர்களை பணிநயந்து பாராட்டுவதுடன் அவர்தம் சமூகப் பணியும் அருட் பணியும் தொடர்ந்து செழிக்க மனமகிழ்ந்து வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்: பல்கலை நண்பர்கள்
தயானந்தராஜா, சிவனேஸ்வரன், அருணகிரிநாதன்,
சேதுராஜா, அருந்தவபாலன், மார்க்கண்டு, அகிலதாஸ்,
ஞானதேசிகன், ரதிபாலசுப்பிரமணியம்,
கௌரி சண்முகலிங்கன், பிறேமா செல்வின்.

# கல்யாணமாலை
## சர்வதேச திருமண சேவை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1986 இந்து
நட்சத்திரம்: பூசம்
உயரம்: 5'3"
தகைமை/தொழில்: BSc, MSc/ தனியார் தொழில்
தொ.இ: B/7319

பிறப்பு: 1988 இந்து
நட்சத்திரம்: மகம்
கி.பா: செவ் 1 இல்
தகைமை/தொழில்: A/L/ சொந்ததொழில்
தொ.இ: B/7323

பிறப்பு: 1975 இந்து
நட்சத்திரம்: திருவாதிரை
கி.பா: செவ் 4 இல்
தகைமை/தொழில்: IT/அவுஸ்ரேலியா
எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும்
தொ.இ: B/7328

பிறப்பு: 1986 RC
உயரம்: 5'5"
தகைமை/தொழில்: MBBS/வைத்தியர்
தொ.இ: B/733

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1994 இந்து
நட்சத்திரம்: பரணி
கி.பா: செவ் 12 இல்
தகைமை/தொழில்: O/L
எதிர்பார்ப்பு: வெளிநாடுமட்டும்
தொ.இ: G/7497

பிறப்பு: 1991 இந்து
நட்சத்திரம்: உத்தரம்
கி.பா: 9 செவ் 2 இல்
உயரம்: 5'2"
தகைமை/தொழில்: BBM/கணக்காளர்
தொ.இ: G/7498

பிறப்பு: 1988 இந்து
நட்சத்திரம்: விசாகம்
கி.பா: 21
உயரம்: 160cm
தகைமை/தொழில்: A/L/கனடா PR
எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும்
தொ.இ: G/7499

பிறப்பு: 1986 இந்து
நட்சத்திரம்: சித்திரை
கி.பா: செவ் 4 இல்
தகைமை/தொழில்: BSc IT/ விரிவுரையாளர்
தொ.இ: G/6503

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ராஜீவ் கொலை; 7 பேரையும் விடுதலை செய்ய பிரதமரிடம் நேரில் வலியுறுத்த வேண்டும்

## தமிழக முதல்வரிடம் அற்புதம்மாள் வேண்டுகோள்

(சென்னை)

அமைச்சர்கள் தலைமையில் குழு அமைத்து 7 பேரை விடுதலை செய்ய பிரதமரிடம் நேரில் வலியுறுத்த வேண்டும் என்று தமிழக முதலமைச்சருக்கு பேரறிவாளனின் தாயார் அற்புதம்மாள் வேண்டுகோள் விடுத்துள்ளார்.





மறைந்த முன்னாள் பிரதமர் ராஜீவ்காந்தி கொலை வழக்கில் சிறையில் இருந்து வரும் பேரறிவாளனின் தாயார் அற்புதம்மாள் முதலமைச்சர் எடப்பாடி பழனிச்சாமிக்கு வேண்டுகோள் விடுத்து அறிக்கை ஒன்று வெளியிட்டுள்ளார்.

அதில் 19.2.2014 அன்று 7 பேரை விடுதலை செய்வதென மறைந்த முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதா முடிவு செய்தார். வழக்கு மத்திய புலனாய்வுத் துறையின் கீழ் விசாரணை நடத்தப்பட்டதால் மத்திய அரசிடம் கருத்துக் கேட்டு கடிதம் அனுப்பினார். அக்கடிதத்திற்கு பதிலேதும் அனுப்பாமல் மத்திய அரசு உயர் நீதிமன்றில் தடையாணை பெற்றது.

பின்னர், வழக்கு 5 நீதிபதிகள் கொண்ட அரசியல் அமர்விற்கு மாற்றப்பட்டது. இதுபோன்ற வழக்குகளில் மத்திய, மாநில அரசுகளின் அதிகாரம் குறித்து 2.12.2015 இல் தீர்ப்பளித்த அரசியல் அமர்வு 7 பேர் விடுதலை தொடர்பான மாநில அரசின் கடிதம் குறித்து 3 நீதிபதிகள் அடங்கிய அமர்வு முடிவு செய்யும் என தீர்ப்பளித்தது.

23.1.2018 அன்று உயர் நீதிமன்று 3 மாதங்களுக்குள் மாநில அரசின் கடிதத்தின் மீதான பதிலினை மத்திய அரசு வழங்கிட உத்தரவிட்டுள்ளது. எனவே, உச்ச நீதிமன்றின் உத்தரவினை அடிப்படையாகக் கொண்டு தமிழக அரசின் அமைச்சர்கள் தலைமையில் குழுவினை அமைத்து 7 பேர் விடுதலை என்பது ஒட்டுமொத்த தமிழகத்தின் நீண்டகால எதிர்பார்ப்பு என்பதை பிரதமரிடம் நேரில் வலியுறுத்தி 7 பேர் விடுதலைக்கு தடையாக இல்லாமல், காலம் தாழ்த்தாமல், விடுதலைக்கு துணை நிற்க வேண்டும் என கேட்டுக் கொள்ள வேண்டுகிறேன்.

மத்திய மனித உரிமை ஆணையம் தண்டனைக் கழிவுடன் கூடிய 25 ஆண்டுகள் என்பதே அதிகபட்ச தண்டனையாக இருக்க வேண்டும் என வழிகாட்டியுள்ள நிலையில், தண்டனை கழிவின்றி 27 ஆண்டுகளாக சிறைபட்டிருக்கும் 7 பேரையும் இனியும் சிறையில் அடைத்து வைத்திருப்பது மனித உரிமைக்கு எதிரானது என்பதை வலியுறுத்திட வேண்டுகிறேன் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-8)

# ஜப்பானில் எரி...

## வெடித்துச் சித...

(டோக்கியோ)

ஜப்பானின் தலைநகர் டோக்கியோவில்குசட்சு ஷிரேன் என்ற எரிமலை வெடித்து சிதறியதில் இராணுவத்தினர் 6 பேர் படுகாயங்களுடன் மீட்கப்பட்டனர். அவர்களில் ஒருவர் உயிரிழந்தார்.

ஜப்பானின் தலைநகர் டோக்கியோவில் இருந்து 150 கி.மீ. தொலைவில் குசட்சு ஷிரேன் என்ற எரிமலை உள்ளது. இந்த எரிமலையில் நேற்று முன்தினம் கடுமையான சீற்றம் ஏற்பட்டு வெடித்து சிதறத் தொடங்கியது.

இந்த நிலையில், அந்தப் பகுதியில் 6 இராணுவத்தினர் குளிர்கால போர்ப் பயிற்சியில் ஈடுபட்டு வந்தனர்.

எரிமலை வெடிப்பின் காரணமாக, அதில் இருந்து ஒரு கி.மீ. பரப்பளவில் பாறைகள் வந்து விழுந்தன. அவற்றில் போர்ப்பயிற்சியில் ஈடுபட்டு வந்த இராணுவத்தினர் சிக்கிக்கொண்டனர். உடனடியாக மீட்புப்படையினர் அங்கு விரைந்தனர். சிக்கிய இராணுவத்தினர் 6 பேரும் படுகாயங்களுடன் மீட்கப்பட்டனர். அவர்களில் ஒருவர் உயிரிழந்தார். இதை இராணுவ அமைச்சகம் உறுதி செய்துள்ளது.

# ஐ.நா. மத்தியஸ்தம் செய்யும்



(நியூயோர்க்)

இந்தியா- பாகிஸ்தான் சம்மதம் தெரிவித்தால் பிரச்சினைக்கு மத்தியஸ்தம் செய்ய ஐ.நா.பொதுச்செயலாளர் தயாராகவுள்ளதாகவும், அதுவரை இந்த விவகாரத்தில் ஐ.நா.சபை தலையிடாது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தியா-பாகிஸ்தான் இடையே எல்லையில் அண்மைக்காலமாக தொடர்ந்து மோதல் சம்பவம் நடந்து வருகிறது. இது குறித்து ஐ.நா. பொதுச்சபை செய்தித் தொடர்பாளர் ஸ்டீபன் டுஜாரிக் செய்தியாளர்களிடம் தெரிவிக்கையில்,

ஐ.நா. பொதுச்செயலாளர் அந்தோனியோ குட்ரேரஸ் உலகம் முழுவதும் அமைதி நிலவ வேண்டும் என்றே விரும்புகிறார். எந்த நாட்டில் பிரச்சினை ஏற்பட்டாலும் அதை தீர்க்க அவர் தயாராகவுள்ளார்.

இந்தியா- பாகிஸ்தான் இடையே எல்லையில் கடந்த 10 நாட்களுக்கும் மேலாக என்ன நடந்து வருகிறது என்பதை அனைவரும் அறிவார்கள். இரு நாடுகளும் சம்மதம் தெரிவித்தால் இந்தப் பிரச்சினையில் மத்தியஸ்தம் செய்ய ஐ.நா. பொதுச்செயலாளர் தயாராகவுள்ளார்.

அதுவரை இந்த விவகாரத்தில் ஐ.நா. சபை தலையிடாது. இரு நாடுகளும் பேச்சுவார்த்தை நடத்தி எல்லையில் பதற்றத்தைத் தணிக்க வேண்டும் என்றே ஐ.நா. பொதுச்செயலாளர் விருப்பம் தெரிவித்துள்ளார் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-8)

# இந்தோனேசியாவில் சக்திவாய்ந்த பூகம்பம்



(ஜகார்த்தா)

இந்தோனேசியா தலைநகர் ஜகார்த்தாவில் நேற்று சக்திவாய்ந்த பூகம்பம் ஏற்பட்டது. இதனால், மக்கள் வீடுகளை விட்டு பீதியுடன் வெளியேறினர்.

அமெரிக்க புவியியல்அமைப்பின் அறிக்கையின்படி, தலைநகர் ஜகார்த்தாவில் இருந்து 100 கி.மீ. தொலைவிலும் சுகாபூமி நகரில் இருந்து 104 கி.மீ. தொலைவிலும் பூமிக்கு அடியில் 44 கி.மீ.ஆழத்தில் மையம் கொண்டு நிலநடுக்கம் ஏற்பட்டது. இந்த பூகம்பம் 6.0 ரிக்டர் அளவாகப் பதிவானது எனத் தெரிவிக்கப்பட்டது.

இந்த பூகம்பம் ஏற்பட்டவுடன், அலுவலகத்தில் வேலை செய்தவர்கள், வீடுகளில் இருந்த மக்கள், கடைகளில், வணிகவளாகங்களில் இருந்தவர்கள் அனைவரும் அலறியடித்து ஓடி வந்து வீதிகளில் தஞ்சமடைந்தனர்.

மேலும் வீதிகளில் வாகனத்தில் சென்றவர்களும் நடுவழியிலேயே வாகனத்தை விட்டு விட்டும் பாதுகாப்பான இடத்துக்குச் சென்றனர்.

இது குறித்து இந்தோனேசியா பேரிடர் மேலாண்மை அமைப்பின் செய்தித்தொடர்பாளர் ஸ்டுபோ புர்வோ நுக்ரகோ கூறுகையில், "சியாஞ்சூர் நகரில் ஒரு பாடசாலை கட்டடம் இடிந்ததில் 6 மாணவர்கள் காயமடைந்தனர். 130 வீடுகள், ஒரு மசூதி ஆகியவை சேதமடைந்தன. ஆனால், முழுமையான சேத விபரங்கள் இன்னும் கிடைக்கவில்லை" எனத் தெரிவித்தார்.

சிலி நாட்டு தூதரகத்தில் பணியாற்றும் ரூடி டோகாடோரப் தொரிவிக்கையில், "நாங்கள் அமர்ந்திருந்த போது, திடீரென கட்டடங்கள், இருக்கைகள் குலுங்கத் தொடங்கின. அவசர வழிப்பாதை வழியாக கீழே இறங்கி உயிர் பிழைத்தோம். நில நடுக்கம் 10 முதல் 15 நிமிடங்கள் வரை நீடித்தது" என்று தெரிவித்தார். (இ-8)

# அரசியலில் பறக்க விரும்பும் புதிய பறவைகள்: ரஜினி, கமல் மீது ஸ்டாலின் மறைமுக சாடல்

(சென்னை)

அரசியல் சூழல் அறிந்து புதிய பறவைகள் சிறகடிக்க வருவதாக நடிகர் ரஜினிகாந்த், கமல்ஹாசன் குறித்து திமுக செயல்தலைவர்முகஸ்டாலின் மறைமுகமாகச் சாடியுள்ளார். இது தொடர்பாக நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை அவர் வெளியிட்ட அறிக்கையில்,



அரசியல் தட்பவெப்பம் அறிந்து, புதிய புதிய பறவைகள் சிறகடிக்க நினைக்கின்றன. ஜனநாயகம் என்பது எல்லாருக்குமான வானம். எந்தப் பறவையின் சிறகுகளுக்கு எவ்வளவு வலு இருக்கிறதோ, அதற்கேற்ப சிறகடித்துப் பறந்து, அதன்பின் பாதை தெரியாமல் பயணம் தடைபட்டு ஓய்வெடுப்பதை அரசியல் களம் கவனித்துக் கொண்டுதான் இருக்கிறது.

சுயமரியாதையையும், சமூக நீதியையும் இரு சிறகுகளாகக் கொண்ட திராவிட இயக்கம் என்பது, நூற்றாண்டு கடந்தும் ஓய்வின்றிச் சிறடிகத்துக் கொண்டே உயரே உயரே பறந்துகொண்டுதான் இருக்கிறது.

தாய்ப்பறவை தன் குஞ்சுகளுக்கு இரைதேடி வெகுதூரம் பறந்து சென்று, இரையுடன் திரும்பி வந்து வாஞ்சையுடன் ஊட்டுவது போல, தமிழக மக்களுக்கு உண(ர்)வூட்டும் இயக்கமாக, தி.மு.க. சிறகடித்துக் கொண்டே இருக்கிறது. ஆட்சியில் இருந்தாலும், எதிர்க்கட்சியாக இருந்தாலும் தமிழக மக்களின் நலனுக்காகவும், இன - மொழி பாதுகாப்புக்காகவும் உறுதியுடன் பாடுபடும் இயக்கமான தி.மு.கவின் ஆற்றல் அளவிடற்கரியது என அவர் மேலும் தெரிவித்தார். (இ-8)

# உயர்த்தப்பட்ட சம்பளம் வேண்டாம்; சபாநாயகருக்கு தினகரன் கடிதம்



(சென்னை)


எம்.எல்.ஏக்களுக்காக உயர்த்தப்பட்ட சம்பளம் வேண்டாம் எனவும் சட்டமசோதா நிறைவேறுவதற்கு முன்பு இருந்த சம்பளத்தையே தனக்கு வழங்கும்படியும் சபாநாயருக்கு, டி.டி.வி. தினகரன் கடிதம் எழுதியுள்ளார்.

தமிழக சட்டசபை சபாநாயகர் ப.தனபாலுக்கு ஆர்.கே.நகர்த்தொகுதி எம்.எல்.ஏ. டி.டி.வி.தினகரன் எழுதிய கடிதத்தில் கூறப்பட்டிருப்பதாவது.எம்.எல்.ஏ.க்களுக்கு சம்ப ளம் மற்றும் படி ஆகியவை சேர்த்து மாதந்தோறும் ரூ.55 ஆயிரம் வழங்கப்பட்டு வந்தது. இந்த நிலையில் கடந்த 12 ஆம் திகதியன்று இந்தத் தொகையை ஒரு இலட்சத்து 5 ஆயிரம்ரூபாவாக உயர்த்தும் சட்டமசோதா தாக்கல் செய்யப்பட்டது. அதை சட்டசபையில் அறிமுக நிலையிலேயே எதிர்த்தேன். மக்கள் நலத்திட்டங்களை செயற்படுத்தவும் பல திட்டங்களை செயற்படுத்த முடியாத அளவுக்கு நிதிப்பற்றாக்குறை இருப்பதாலும் அதற்கு நான் எதிர்ப்புத் தெரிவித்தேன். ஆனாலும் எம்.எல்.ஏக்களுக்கு சம்பளத்தை உயர்த்தும்அந்த சட்டமசோதாநிறைவேற்றப்பட்டது. எனவே உயர்த்தப்பட்ட சம்பள உயர்வை நான் விட்டுக்கொடுக்கிறேன். சட்ட மசோதா நிறைவேறுவதற்கு முன்பு இருந்தச் சம்பளத்தையே எனக்கு வழங்கும்படி கேட்டுக்கொள்கிறேன் என அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-8)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வெளிநாடு

## ...ரிமலை ...தறியது



...ங்கு மலைப்பகுதியின் உச்சியில் அமைந் ... ஓய்வு இல்லத்தில் இருந்த 78 பேர், எரி ... சீற்றத்தால் தூண்டப்பட்ட பனிச்சரிவில் சிக் ... ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. ...லை உச்சக்கட்டமாக வெடித்துச் சிதறுகிற ... 2 கி.மீ. பரப்பளவுக்கு பாறைகள் வந்து விழக் ... என்று தீய ணைப்பு மற்றும் பேரிடர் மேலா ...ம அமைப்பு எச்சரிக்கை விடுத்துள்ளது. ...பானில் ஆன்டேக் என்ற எரிமலை 2014 ...ஆண்டு செப்டெம்பர் மாதம் திடீரென வெடி ...சிதறிய போது அதில் சிக்கி 63 பேர் உயிரி ...ளர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-8)

## தொழுகை முடித்து வந்தவர்களை இலக்குவைத்து

# வெடிகுண்டுத் தாக்குதல் 33 பேர் உடல் சிதறிப் பலி!

(டிரிபோலி)

லிபியா நாட்டில் மசூதியில் தொழுகை முடித்து வந்தவர்கள் மீது தீவிரவாதிகள் நடத்திய கார் வெடிகுண்டு தாக்குதலில் 33 பேர் பரிதாபமாகப் பலியாகினர்.

லிபியா நாட்டின் பெங்காஷி நகரில் அல் சல்மானி மாவட்டம் அமைந்துள்ளது.

இங்குள்ள மசூதியில் நேற்று முன்தினம் மாலை தொழுகை நடைபெற்றது. தொழுகை முடிந்து பொது மக்கள் வெளியே வந்த சமயம் அங்கு இரண்டு கார்களில் இருந்த வெடி குண்டுகள் வெடித்துச் சிதறின.

இந்த இரட்டைக் கார் வெடிகுண்டுத் தாக்குதலில் சம்பவ இடத்திலேயே 33 பேர் உடல் சிதறி பரிதாபமாக பலியாகினர். மேலும் பலர் படுகாயமடைந்தனர்.

தகவலறிந்து மீட்புப் படையினர் அங்கு விரைந்து வந்தனர். அவர்கள் பலியான உடல்களைக் கைப்பற்றி பிரேத பரிசோதனைக்கு அனுப்பினர். படுகாயமடைந்தவர்



களை மீட்டு வைத்தியசாலைக்கு அனுப்பி வைத்தனர்.

விசாரணையில், வெடிகுண்டுத் தாக்குதலில் பலியானவர்களில் பொதுமக்களும், பொலிஸாரும் அடங்குவார்கள்.

காயமடைந்தவர்களில் சிலரது நிலைமை கவலைக்கிடமாகவுள்ளதால் பலி எண்ணிக்கை அதிகரிக்கும் என தெரிவித்தனர்.

இந்தத் தாக்குதலுக்கு இதுவரை எந்த அமைப்பும் பொறுப்பேற்கவில்லை. (இ-8)

# ...பயங்கரவாதத்துக்கு ...திராக ஒன்றுபடுவோம்

## ...ரதமர் மோடி அழைப்பு



(...டாவோஸ்)

...பயங்கரவாதத்துக்கு எதிராக ஒன்றுபடு... என்று டாவோஸ் உலக பொருளாதார ... மாநாட்டில் பேசிய பிரதமர் மோடி ...ப்பு விடுத்தார்.

...விட்சர்லாந்து நாட்டின் டாவோஸ் நகரில் ... பொருளாதார அமைப்பின் வருடாந்திர ...மாநாடு நேற்று முன்தினம் தொடங்கியது. ...தில், 'பிரிந்துள்ள உலகில் எல்லோரும் ...துகொள்ளும் எதிர்காலத்தை உருவா...' என்ற தலைப்பில் பிரதமர் நரேந்திர ... இந்தியில் பேசினார்.

...97 ஆம் ஆண்டு பிரதமராக இருந்த தேவ... இந்த மாநாட்டில் கலந்துகொண்டு பேசி...கிறார். அவருக்குப் பின்னர் இப்போது ...நான் இதில் பங்கேற்றுள்ளேன்.

...டைப்பட்ட காலத்தில் இந்தியப் பொருளா... குறிப்பிடத்தக்க அளவுக்கு மாற்றத்தை ...ந்துள்ளது. அப்போது இந்தியாவின் ...நாட்டு மொத்த உற்பத்தி 400 பில்லியன் ...ராக (சுமார் ரூ.26 இலட்சம் கோடி) ...தது. இப்போது 6 மடங்குக்கு மேல் ...ரித்துள்ளது.

...ந்தியா எப்போதுமே உலக அமைதிக்காக ...ஜனநாயகத்துக்காகவும் பன்முகத்தன்...காகவும்தான் இருந்து வருகிறது. இது ...இந்தியாவின் உள்ளார்ந்த பலம்.

...லகத்தை ஒரே குடும்பமாகத்தான் நாங்...பார்க்கிறோம். எல்லா பிளவுகளையும் ...னைகளையும் பேச்சுவார்த்தை மூலம் தீர்க்க முடியும். நாம் அனைவரும் மகிழ்ச்சியாக இருப்போம். நாம் அனைவரும் நலமாக இருப்போம். சமாதானமாக இருப்போம்.

நமது திறமை தனிப்பட்ட நபர்களாகவும் நாடுகளாகவும் ஒன்றுபட்டு மலர வேண்டும். ஜனநாயகம் என்பது வாழ்வின் தத்துவம், பரந்த பார்வையின் அங்கம்.

மற்றவர்களின் இயற்கை வளங்களை சுரண்ட வேண்டும் என்று இந்தியா ஒருபோதும் கண் வைத்தது கிடையாது.

இந்தியா முன்கூட்டி கணிக்கத்தக்க, நிலையான, முற்போக்கு நாடு. நீங்கள் ஆரோக்கியத்துடன் வளம் பெற வேண்டும், முழுமைத்தன்மையுடன் ஆரோக்கியம் பெற வேண்டும், சமாதானத்துடன் செல்வம் பெற வேண்டும் என்று விரும்பினால் இந்தியாவுக்கு வாருங்கள்.

பயங்கரவாதம், பருவநிலை மாற்றம், தன்நலமைய அணுகுமுறை ஆகியவை உலகுக்கு சவால்களாக அமைந்துள்ளன.

பயங்கரவாதம் ஒட்டுமொத்த மனித சமூகத்துக்கே அச்சுறுத்தலாக அமைந்து இருக்கிறது. மற்றொரு மிக முக்கிய விடயம், நன்றாக படித்த இளைஞர்களை பயங்கரவாதத்தை நோக்கி செல்வதற்கு மூளைச்சலவை செய்யப்படுகிறது.

எனவே உலகத்தின் முன் பயங்கரவாதமும், பருவநிலை மாற்றமும் மிகப்பெரிய கவலை அளிக்கும் அம்சங்களாகவுள்ளன.

பயங்கரவாதம் என்பது மிகவும் ஆபத்தானது. நல்ல பயங்கரவாதிக்கும் மோசமான பயங்கரவாதிக்கும் இடையேயான செயற்கையான வேறுபாடும் பயங்கரவாதத்தைப் போன்றே ஆபத்தானது.

பயங்கரவாத அச்சுறுத்தலில் இந்தியாவின் நிலை நன்றாகத் தெரிந்த ஒன்றுதான். நான் அதை விளக்கப் போவது இல்லை.

சில நாடுகள் தங்களை மையப்படுத்திய அணுகுமுறையை கொண்டுள்ளன. பயங்கரவாதமும் வன்முறையும் பரவினால் இந்த உலகம் இன்னும் பிளவுபடும்.

அமைதியும் ஸ்திரத்தன்மையும் பாதுகாப்பும் சமகால உலக அமைப்பில் மிகப் பெரிய சவால்களாக மாறி வருகின்றன. உலகமயமாதலுக்கு எதிராக பாதுகாப்புவாதம் தலைதூக்குகிறது. இந்தப் போக்கின் காரணமாக இரு தரப்பு, பல தரப்பு வர்த்தகப் பேச்சுக்கள் கிட்டத்தட்ட முடங்கிப் போய் உள்ளன.

குறுகிய உள்நாட்டு வட்டத்தை விட்டு வெளியே வந்து பயங்கரவாதம், பருவநிலை மாற்றம், பெருகிவரும் பாதுகாப்பு வாதம் ஆகியவற்றின் ஆபத்துக்கு எதிராக நாம் ஒன்றுபடுவோம். நாம் ஒரு சுதந்திரமான சொர்க்கத்தை உருவாக்குவோம். அதில் பிரிவினையும், பிளவும் இல்லாத ஒத்துழைப்பு இருக்கும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-8)

# தலிபான்கள் மீது பாகிஸ்தான் நடவடிக்கை எடுக்க வேண்டும்

## அமெரிக்கா கிடுக்குப்பிடி



பாகிஸ்தான்



அமெரிக்கா

(வோஷிங்டன்)

ஆப்கானிஸ்தானில் ஹோட்டலில் நடந்த தாக்குதலுக்கு பொறுப்பு ஏற்றுக் கொண்ட தலிபான்கள் மீது பாகிஸ்தான் நடவடிக்கை எடுக்க வேண்டும் என அமெரிக்கா அழுத்தம் கொடுத்துள்ளது.

ஆப்கானிஸ்தான் தலைநகர் காபூலிலுள்ள இன்டர் கான்டினன்டல் சொகுசு விடுதியில் பயங்கரவாதிகள் கடந்த வாரம் அதிபயங்கரத் தாக்குதல்களை நடத்தினர். இந்த தாக்குதல்களில், வெளிநாட்டினர் உள்ளிட்ட அப்பாவி மக்கள் 22 பேர் கொல்லப்பட்டனர். இந்தத் தாக்குதல்களுக்கு தலிபான் பயங்கரவாத இயக்கம் பொறுப்பேற்றுக் கொண்டுள்ளது.

இந்த நிலையில், தலிபான் தலைவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பாகிஸ்தானுக்கு அமெரிக்கா கூடுதல் அழுத்தம் கொடுத்துள்ளது.

இது குறித்து அமெரிக்க ஜனாதிபதியின் வோஷிங்டன் வெள்ளை மாளிகை செய்தித் தொடர்பாளர் சாரா சாண்டர்ஸ், நிருபர்களுக்கு பேட்டியளித்தார். அப்போது அவர் கூறியதாவது,

"தலிபான் தலைவர்களை பாகிஸ்தான் கைது செய்ய வேண்டும் அல்லது அங்கு இருந்து உடனே வெளியேற்ற வேண்டும். தலிபான் பயங்கரவாதிகள் தனது நாட்டில் இருந்து செயற்படுவதை பாகிஸ்தான் தடுக்க வேண்டும்" என்று வலியுறுத்தினார்.

சாரா சாண்டர்ஸ் நிருபர்களைச் சந்தித்த அடுத்த சில நிமிடங்களில் அமெரிக்காவுக்கான பாகிஸ்தான் தூதர் அய்ஜாஸ் அகமது சவுத்ரி அங்கு நடந்த நிகழ்ச்சி ஒன்றில் கலந்துகொண்டு பேசினார்.

அப்போது அவர், "பாகிஸ்தானில் இருந்த பயங்கரவாதிகளையும் அவர்களது புகலிடங்களையும் ஆயுத தொழிற்சாலைகளையும் படைகள் ஒழித்துக்கட்டி விட்டன. இந்த நிலையில் பாகிஸ்தான் பயங்கரவாதிகளுக்கு புகலிடம் தருகிறது என்று எங்களைப் பார்த்து சொல்கிறவர்கள், அதற்கான ஆதாரத்தை காட்ட வேண்டும். இதை ஒரு பகிரங்க சவாலாக சொல்கிறேன். 10 மாதங்களாக நாங்கள் ஆதாரத்தைக் கேட்டுக் கொண்டு இருக்கிறோம். பாகிஸ்தானில் எந்த குகையிலாவது பயங்கரவாதிகள் இருந்தால் காட்டுங்கள். நாங்கள் தீர்த்துக்கட்டுகிறோம்" என்றும் தெரிவித்தார். (இ-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேம்பித் தேம்பியழுத அதிபர்; 'எம்.பி.பதவிகளை துறப்போம்'

## மலையக எம்.பிக்கள் உறுதி

(கொழும்பு)

பதுளை தமிழ் மகளிர் மகா வித்தியாலயத்தின் அதிபர் ஆர்.பவானியை அச்சுறுத்தி முழங்காலிட வைத்த சம்பவம் தொடர்பில், கல்வி மற்றும் மனிதவள அபிவிருத்தி பற்றிய துறைசார் மேற்பார்வைக்குழு முன்னிலையில் நேற்று முன்தினம் விசாரணைகள் நடைபெற்றன.

நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் பிற்பகல் 1:30 இற்கு ஆரம்பமான இந்த விசாரணைகள் சுமார் இரண்டு மணிநேரம் இடம்பெற்றன.

அந்தக் குழு அறைக்குள் ஊடகவியலாளர்கள் அனுமதிக்கப்படாத போதும் அதிபர் தேம்பித் தேம்பியழுது சாட்சியளித்தமையை அவதானித் திருந்தனர்.

அவர் சாட்சியமளிப்பது, கண்ணாடிகளுக்கு வெளியே தெட்டத்தெளிவாகத் தெரிந்தது. அழுகுரலும் கேட்டது. ஒருகணத்தில் உணர்ச்சி வசப்பட்டு தேம்பியழுது கண்ணீர் மல்கிய அதிபர் "முதலமைச்சருக்குத் தெளிவுபடுத்திப் பார்த்தேன், அவர் கேட்கவில்லை. முடியாத குறைக்குத்தான் காலில் விழுந்தேன். அந்தநேரம் செத்துவிடலாம் போலிருந்தது" என்றார்.

இதனிடையே, அமைச்சர் திகாம்பரம் அந்த அறையிலிருந்து வெளியேறினார். அவருடைய கண்களில் கண்ணீர் குளம் கட்டியிருந்தது. "நுவரெலியா மாவட்டத்தில் இவ்வாறான ஒரு சம்பவம் இடம்பெறு வதற்கு இடமளிக்கமாட்டேன். எங்களுடைய அதிபர், ஆசிரியர்களிடத்தில் ஒற்றுமையில்லை. சில அரசியல்வாதிகள் தங்களுடைய பெயருக்காக அரசியல் செய்கின்றனர். அதைத்தான் தமிழ்ப்பத்திரிகைகளும் தூக்கிப்பிடித்துக கொண்டு அறிக்கையிடுகின்றன.

"மலையக மக்களுக்கு வீடுகளைக் கட்டிக் கொடுப்பதற்கும் ஒன்றுமே செய்யாதவர்கள், எங்களுடன் மல்லுக்கட்டிக் கொண்டிருக்கின்றனர் என்று, நுவரெலியாவுக்கு ஜனாதிபதி வந்ததும் நன்றாகச் சொல்வேன்" என்று கூறியதுடன், "அதிபர் கண்ணீர் மல்கியதைப் பார்த்ததும், எனக்கும் கண் கலங்கி விட்டது" என்று கூறி கண்களை துடைத்துக் கொண்டு அவ்விடத்திலிருந்து அகன்று சென்று விட்டார்.

விசாரணையின் பின்னர், ஊடகவியலாளர் சந்திப்பை நடத்திய வடிவேல் சுரேஷ் எம்.பி, "மலையகத்தைச் சேர்ந்த சகல எம்.பிக்களும் ஜனாதிபதியையும் பிரதமரையும் சந்தித்து இந்த விவகாரம் தொடர்பில் எமது நிலைப்பாடுகள் குறித்து அறிவிப்பதற்கும் நடவடிக்கையெடுத் துள்ளோம்.

"பதுளையில் முதலமைச்சரால், பாடசாலை அதிபர் ஒரு முழங்காலிட வைக்கப்பட்ட சம்பவத்தை ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது. இதனால் இந்த விடயம் தொடர்பாக நாடாளுமன்றத்தில் கல்வி மற்றும் மனிதவள அபிவிருத்தி பற்றி துறைசார் மேற்பார்வைக் குழு முன்னிலையில் விசாரணைகள் நடத்தப்பட்டுள்ளன. முதலமைச்சர் தனது உத்தியோகபூர்வ இல்லத்துக்கு அழைத்து இவ்வாறு நடந்து கொண்டுள்ளார்.

"இதேவேளை, இந்த விவகாரம் தொடர்பான நடவடிக்கைகளுக்கு எனது எம்.பி. பதவிதான் பிரச்சினையென்றால், அதனையும் தூக்கியெறிந்து விட்டு நானும் ஆசிரியர்களுடன் இணைந்து போராடுவேன். இதன்படி, மலையகத்தைச் சேர்ந்த சகல எம்.பிக்களும் பதவிகளைத் துறந்து வெளியேறிச் செல்வோம்" எனத் தெரிவித்தார். (இ-7)

# அரச மதிப்பீட்டாளர்கள் சங்கம் கொழும்பில் ஆர்ப்பாட்டம்





(கொழும்பு)

அரச மதிப்பீட்டாளர்கள் சங்கம் நேற்று முன்தினம் கொழும்பு கோட்டையிலுள்ள நிதி அமைச்சின் முன்னால் ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தினர்.

அனுமதியளிக்கப்பட்ட அமைச்சரவை பத்திரத்தை நிதி அமைச்சோ? திணைக்களமோ? நடைமுறைப்படுத்தப்படாமல் இருப்பதற்கு எதிர்ப்புத் தெரிவித்தே இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

கடந்த ஆட்சிக்காலத்தில் மதிப்பீட்டாளர்களது குறைபாடுகள், சம்பள அதிகரிப்பு, பதவியுயர்வுகள், புதிய மதிப்பீட்டாளர்கள் ஆட்சேர்ப்பு பற்றி 2014.12.12 இல் நிதியமைச்சின் ஊடக அமைச்சரவைப் பத்திரம் அனுமதியளிக்கப்பட்டிருந்தது.

இதேவேளை, மதிப்பீட்டு கடமைகள், வேலைகளை அரசாங்கம் தனியார் கம்பனிகளுக்கு வழங்கி வருகின்றது.

இதனால் நாட்டில் அரச சொத்துக்களுக்கு நிதி மோசடி மற்றும் முறைகேடுகள் நிகழ்கின்றன எனவும் ஆர்ப்பாட்டத்தின்போது அரச மதிப்பீட்டாளர்கள் சங்கத்தின் செயலாளர் செனவிரட்ன தெரிவித்தார்.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டோர் நிதியமைச்சிற்குள் செல்ல முட்பட்டபோது பொலிஸார் இரு மருங்கிலும் வீதிக் தடைகளை வைத்து தடுத்து நிறுத்தினர்.

இதன்போது, அவர்களது மனு நிதி அமைச்சின் செயலாளரிடம் பொலிஸாரின் உதவியுடன் கையளிக்கப்பட்டது.

நாடு முழுவதிலும் அரச மதிப்பீட்டாளர்கள் 350 பேருக்கு மேற்பட்டோர் மதிப்பீட்டுத் திணைக்களத்தில் கடமையாற்றி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# பாராளுமன்ற பணியாளர்களுக்கு பயிற்சி





(கொழும்பு)

பாராளுமன்றத்தில் பணிபுரிய புதிதாக இணைந்த அதிகாரிகளுக்கான பயிற்சி நிகழ்வொன்று பத்தரமுல்ல வோட்டர்ஸ் எட்ஜ் வளாகத்தில் இடம்பெற்றது.

சபாநாயகர் கருஜெயசூரியவின் வேண்டுகோளுக்கு இணங்க ஐக்கிய நாடுகள் சபையின் அனுசரணையில் இந்தப் பயிற்சி நிகழ்வு இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## இன்று ஒரு தகவல்

### எப்போதும் முட்டுக் கொடுக்க முடியுமா?

ஒரு கட்டடத்திற்குக் கொங்கிறீட் தளம் போடும் போது கீழே முட்டுக்கொடுக்கிறோம். பத்துப் பதினைந்து நாட்கள் ஆனதும் அந்த முட்டுக்களை எடுத்து விடுகிறோம். முட்டுக்களை எடுத்த பிறகும் தளம் உறுதியாக நின்றால்தானே தேவலை? எடுத்த உடனே விழுந்து விட்டால் என்னாவது?

இன்றைய உலகில் தங்களுக்குப் பக்கபலமாகவும் பின்புலமாகவும் இருப்பவர்கள் ஒதுங்கிக் கொண்டதும் சம்பந்தப்பட்டவர்கள் உடனே விழுந்துவிடுகிறார்கள். அது கூடாது.

ஒருவரை ஒரு நிறுவனத்தில் நிர்வாக இயக்குநரின் நண்பருக்கு வேண்டியவர் என்பதால் வேலைக்குச் சேர்த்துக் கொண்டார்கள்.

தான் எம்.டி.யின் நண்பருக்கு வேண்டியவர் என்பதால் இந்த மனிதர் ஆட்டம் போடத் துவங்கினார். வேலை பணால்! நமக்கு ஆள் இருக்கிறது என்று ஆடிப் பார்த்தார். உண்மையில் இவர் போக்குச் சரியில்லை என்பதால் அவரை வேலையை விட்டு நீக்கணுமா? சரி செய்யுங்க என்று வேலைக்குச் சேர்த்து விட்டவர் ஒதுங்கிக் கொண்டார்.

ஒரு திரையரங்க உரிமையாளரின் நண்பர் அடிக்கடி குடும்பத்துடன் ஓசியில் படம் பார்க்க வந்தார். உரிமையாளரின் நண்பராயிற்றே என்று ஊழியர்கள் சலாம் போட்டு உட்கார வைத்தார்கள். இடைவேளையில் கூட பாப்கார்னும் சிப்சும் கோப்பியும் கொடுத்து உபசரித்தார்கள்.

இவர் சும்மாயிருக்க மாட்டாமல் ரொம்பவும் அதிகாரம் செய்யப்போக இவரை பற்றிய தவறான பிரசாரம் திரையரங்கு உரிமையாளரிடம் செய்யப்பட்டது.

ஒருநாள் அவர் நண்பர்களுடன் வந்த போது வாசலிலேயே நிறுத்தப்பட்டார். பாஸைப் பார்த்து பாஸ் வாங்கிட்டு வாங்க அப்பதான் உள்ளே விடமுடியும் என் றார்கள். மானம் போய்விட்டது அவருக்கு.

முதலாளியின் நண்பராக இருந்தாலும் நம்மை மதிக்கிறார், நம்மிடம் பிரியமாக இருக்கிறார் என்றெல்லாம் திரையரங்கு ஊழியர்களிடையே இவர் நன்மதிப்பு ஏற்படும்படி பழகியிருந்தால் இவருக்குத் தொடர்ந்து மரியாதை கிடைத்திருக்கும்.

நமக்குப் பின்பலமாக இருப்பவர்களும் சிபாரிசு செய்பவர்களும் அறிமுகப்படுத்தியவர்களும் ஒரு கட்டத்திற்குப் பிறகு ஒதுங்கிவிடுவார்கள். இந்த வேளையில் நாம் நம் தகுதியாலும் திறமையாலும் தான் தாக்குப்பிடிக்க வேண்டுமே தவிர தொடர்ந்து அவர்களை எதிர்பார்த்துக் கொண்டிருக்கக் கூடாது.

கிடைக்கும் வாய்ப்பைக் கப்பென்றும் நிரந்தரமாகவும் பிடித்துக் கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் மாறாக முட்டு விலகியதும் பொல பொலவென்று உதிர்ந்துவிடும் போலித்தனமான நிலைமையில் இருந்து விடக்கூடாது!

**லேனா தமிழ்வாணன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகிந்த, கோத்தபாயவுக்கு எதிராக சட்ட நடவடிக்கை

## ஜனாதிபதி ஆணைக்குழு பரிந்துரை

(கொழும்பு)

**முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷ ஆகியோருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்குமாறு பாரிய நிதி மோசடிகள், ஊழல்கள், முறைகேடுகள் குறித்து விசாரித்த ஜனாதிபதி ஆணைக்குழு பரிந்துரைத்துள்ளது.**



முன்னைய ஆட்சிக்காலத்தில் இடம்பெற்ற மோசடிகள் குறித்து விசாரிக்க நியமிக்கப்பட்ட இந்த ஆணைக்குழுவின் அறிக்கை நேற்று முன்தினம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. அத்துடன் இணையத்திலும் வெளியிடப்பட்டுள்ளது.

இதில், ஐ.ரி.என். எனப்படும் சுயாதீன தொலைக்காட்சி நிறுவனத்தில் நிதி இழப்பை ஏற்படுத்தியமைக்காகவே மகிந்த ராஜபக்ஷவுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்குமாறு ஆணைக்குழு பரிந்துரைத்துள்ளது.

ஜனாதிபதித் தேர்தலின் பரப்புரைக்காக ஐ.ரி.என். தொலைக்காட்சியைக் கட்டணமின்றி பயன்படுத்தியதால்102,158, 058 ரூபா இழப்பு ஏற்படுத்திய தாக மகிந்த ராஜபக்ஷவுக்கு எதிராக குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது.

இலஞ்ச ஊழல் சட்டத்தின் 70 ஆவது பிரிவின் கீழ் இது ஒரு குற்றம் என்றும் எனவே மகிந்த ராஜபக்ஷவுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்குமாறும் ஆணைக்குழு பரிந்துரைத்துள்ளது.

அதேவேளை இதே சட்டத்தின் கீழ் முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷ உள்ளிட்டவர்கள் மீதும் நடவடிக்கை எடுக்குமாறும் ஆணைக்குழு பரிந்துரைத்துள்ளது.

கோத்தபாய ராஜபக்ஷ, மேஜர் நிசங்க சேனாதிபதி, மேஜர் ஜெனரல் பாலித பெர்னாண்டோ, முன்னாள் கடற்படை அதிகாரிகளான சிசிரகுமார கொலம்பகே, மக்சிமஸ் ஜெயரத்ன, ஆகியோருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கவும் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

மேலும் ரக்ன லங்கா பணியாளர்களை அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபடுத்தியதற்கு முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வா பொறுப்பாளி என்றும் ஆணைக்குழு குற்றம் சாட்டியுள்ளது. (இ-7)

# மஸ்கெலியாவில் கண்டுபிடிக்கப்பட்ட பாதச்சுவடை தொல்பொருள் ஆய்வாளர்கள் ஆய்வு செய்தனர்









(கொழும்பு)

மஸ்கெலியா காட்மோர் பிரதேசத்தில் காட்டுப் பகுதியிலுள்ள பாறையொன்றில் கண்டிபிடிக்கப்பட்ட இரண்டு பாதச்சுவடுகள் தொடர்பில் கண்டி தொல்பொருள் ஆய்வு நிலையத்தின் பாலித அத்தநாயக்க தலைமையிலான குழு நேற்று முன்தினம் ஆய்வுகளை மேற்கொண்டது.

குறித்த பாதச்சுவடுகளை புகைப்படம் எடுத்ததுடன் அகலம், உயரம், நீளம் போன்ற பரிமாணங்களையும் அளவீடு செய்தனர்.

இந்தப் பாதச்சுவடுகள் தொடர்பாக உடனடியாக எதுவும் கூற முடியாது என்றும், கண்டிக்கு சென்று மேலும் இது தொடர்பாக ஆராய்ந்த பின் முழுமையான அறிக்கையொன்றை பெற்றுத்தருவதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

எவ்வாறான போதிலும் இந்தப் பாதங்கள் அனுமான் கடவுளின் பாதச்சுவடுகள் என தெரிவித்து பிரதேச மக்கள் பூஜை வழிபாடுகளில் ஈடுபட்டு வருகின்றனர். (இ-7)

# ஆயுதம் ஏந்தியவர்களின் நோக்கத்தை நிறைவேற்றவே கூட்டமைப்பு முயற்சி

## யோகேஸ்வரன் எம்.பி.விளக்கம்

(ஏறாவூர்)



தமிழ் மக்களுக்காக ஆயுதம் ஏந்தி போராடியவர்களின் நோக்கத்தினை நிறைவேற்ற வேண்டும் என்பதற்கான முயற்சிகளை தமிழ் தேசிய கூட்டமைப்பு மேற்கொண்டு வருவதாக தமிழ்த் தேசிய கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் சீ.யோகேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

அத்தோடு, உரிமைகளோடு வாழ வேண்டியவர்களை இரண்டாந்தரப் பிரஜைகளாக வைத்திருப்பதை ஏற்க முடியாதெனவும் அவர் தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாநகர சபைக்குட்பட்ட பகுதியில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை மாலை நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

"இந்த நாட்டில் யுத்தத்தினால் பல்லாயிரக்கணக்கான உயிர்களை இழந்துள்ளோம் இவையெல்லாம் வெறும் வீதிக்காகவும் அபிவிருத்திக்காகவும் இழந்த இழப்பு அல்ல.

நாங்கள் இந்த நாட்டின் தேசிய இனம், பூர்வீகக் குடிகள், இந்த நாட்டில் சகல உரிமைகளையும் அனுபவிக்க வேண்டியவர்கள். இரண்டாம் தரப் பிரஜைகளாக தமிழர்களை வைத்திருப்பதற்கு அனுமதிக்க முடியாது.

அதன் காரணமாகவே எமது உறவுகள் ஆயுதம் ஏந்திப் போராடி பல தியாகங்களை செய்துள்ளனர். எதற்காக அவர்கள் ஆயுதம் தூக்கிப்போராடினார்களோ அந்த நோக்கத்தினை நிறைவேற்றவேண்டும் என்பதற்காக தமிழ்த் தேசிய கூட்டமைப்பு தொடர்ச்சியான முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றது" எனத் தெரிவித்துள்ளார். (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பல்கலை.கல்விசாரா ஊழியர்கள் வேலைநிறுத்தப் போராட்டம்

(ஏறாவூர்)

கிழக்குப் பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்கள், வேலை நிறுத்தப் போராட்டத்தில் இன்று ஈடுபடவுள்ளனரென, கிழக்குப் பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர் சங்கச் செயலாளர் தங்கவேல் சிறிதரன் தெரிவித்தார்.

வேலைநிறுத்தப் போராட்டம் தொடர்பாக, கிழக்கு பல்லைக் கழக உபவேந்தருக்கு, செயலாளரால் நேற்று முன்தினம் அனுப்பிவைக்கப்பட்டுள்ள கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

"கிழக்குப் பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர் சங்கம், ஒன்றிணைந்த கல்விசாரா ஊழியர் சங்க ஆணைக்குழுவின் அழைப்புக்கு இணைங்க, அவர்களுக்கு ஆதரவு வழங்கும் வகையில், இன்று 25 ஆம் திகதி வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளது.

"வேலைநிறுத்தத்தின் போது நீர், மின்சாரம், கால்நடைகளுக்கு உணவளித்தல், விவசாயத்துக்கு நீர்ப்பாசனம் உள்ளிட்ட அவசியமான சேவைகள் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் நடைபெறும்" என குறிப்பிடப்பட்டுள்ள கடிதத்தின் பிரதிகள், கிழக்குப் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம், நிர்வாகச் சங்கம், மாணவர் ஒன்றியம், பதிவாளருக்கும் தகவலுக்காக அனுப்பப்பட்டுள்ளது. (இ-7)




# திருடர்களைப் பிடிக்க பிரதமர் ரணிலே தடை

## அஸாத் சாலி பகிரங்க குற்றச்சாட்டு

(கொழும்பு)

**திருடர்களுக்கும் மோசடிக்காரர்களுக்கும் எதிராக நடவடிக்கை எடுப்பதில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தடையாக இருக்கின்றார். அதனால்தான் ஜனாதிபதி குற்றவாளிகளுக்குத் தண்டனை பெற்றுக்கொடுக்க ஒத்துழைக்குமாறு கேட்கின்றார் என தேசிய ஐக்கிய முன்னணியின் தலைவர் அஸாத் சாலி தெரிவித்துள்ளார்.**



தேசிய ஐக்கிய முன்னணி நேற்று முன்தினம் கொழும்பில் நடத்திய செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

நல்லாட்சி அரசாங்கம் அதிகாரத்துக்கு வரும்போது மக்களுக்கு பல வாக்குறுதிகளை அளித்திருந்தது. அதில் முக்கியமாக கடந்த அரசாங்க காலத்தில் இடம்பெற்ற ஊழல், மோசடிகளுடன் தொடர்புபட்டவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதாக தெரிவித்திருந்தது. ஆனால் அரசாங்கம் அதிகாரத்துக்கு வந்து 3வருடங்கள் கடந்தும் கடந்த காலத்தில் ஊழல் மோசடிகளில் தொடர்புபட்டவர்கள் என பகிரங்கமாக தெரிவிக்கப்படுபவர்களுக்கு எதிராக இதுவரை எந்த சட்ட நடவடிக்கையையும் எடுக்கத் தவறியுள்ளது.

அத்துடன் அரசாங்கம் ஆட்சிக்கு வந்த பின்னர் பல மோசடிகள் இடம்பெற்றுள்ளன. குறிப்பாக இரட்டை கடவுச்சீட்டு விவகாரத்தில் விமல் வீரவன்ச கைதுசெய்யப்பட்டபோது, பிரதமரின் தலையீட்டால் அவர் விடுவிக்கப்பட்டார்.

அதேபோன்று ஐக்கிய தேசிய கட்சியினர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிராக கட்சி தலைமையகத்தில் வைத்து எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டபோது மகிந்த ராஜபக்ஷ அவரை பாதுகாத்தார். அதற்கு பிரதி உபகாரமாகவே பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ராஜபக்ஷ குடும்பத்துக்கு எதிராக எந்த நடவடிக்கையும் எடுக்காமல் பாதுகாத்து வருகின்றார்.

பிரதமரின் இந்த நடவடிக்கையினாலே கடந்த அரசாங்க காலத்தில் ஊழல் மோசடிகளில் தொடர்புபட்டவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க முடியாமல் போயுள்ளது. இதனால் அரசாங்கத்தின் மீது மக்களுக்கு விரக்தி ஏற்பட்டுள்ளது. அத்துடன் ஊழல் மோசடிகளை துடைத்தெறிவதாக தெரிவித்து ஆட்சிக்கு வந்து சில மாதங்களிலே மத்திய வங்கியில் மோசடி இடம்பெற்றுள்ளது.

இதுவும் அரசாங்கத்துக்கு அவப்பெயரை ஏற்படுத்தியுள்ளதுடன் குற்றவாளிகளை பாதுகாக்கும் வகையில் பிரதமர் செயற்படுவதாகவும் பகிரங்கமாக தெரிவிக்கப்படுகின்றது.

இவ்வாறான நடவடிக்கைகளைக் கருத்திற் கொண்டே ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, ஊழல்வாதிகளுக்கு எதிராக சட்ட ரீதியில் தண்டனை பெற்றுக்கொடுக்கும் செயற்பாட்டில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தனக்கு ஒத்துழைப்பு தரவேண்டும் என பகிரங்கமாக தெரிவித்துள்ளார். எனவே ஜனாதிபதியின் இந்த கோரிக்கையானது திருடர்களை பிரதமர் பாதுகாக்கின்றாரா? என்ற சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## செல்லுபடியான அடையாள அட்டை இல்லாதோர் வாக்களிக்க முடியாது


### தேர்தல்கள் ஆணைக்குழு தலைவர் தெரிவிப்பு

(கொழும்பு)

உள்ளூராட்சி சபைத் தேர்தல் வாக்கெடுப்பின் போது செல்லுபடியான அடையாள அட்டை இல்லாத எவரையும் வாக்களிக்க அனுமதிப்பதில்லை என்று தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மகிந்த தேசப்பிரிய தெரிவித்தார்.

அடையாளத்தை வெளிப்படுத்தும் செல்லுபடியான அட்டை இல்லாத வாக்காளர்கள் தேர்தல் ஆணைக்குழுவிடம் இருந்து அடையாள உறுதிப்பத்திரம் ஒன்றை பெற்றுக் கொள்ள வேண்டும் என்று அவர் தெரிவித்தார்.

கட்சிகளின் பிரதிநிதிகளுடன் இடம்பெற்ற சந்திப்



பின் பின்னர் ஊடகங்களிடம் பேசும் போதே தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மகிந்த தேசப்பிரிய தெரிவித்தார். (இ-7)

## பயிற்சி நெறிக்கான விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.தொழில்நுட்பவியல் கல்லூரியில் பகுதிநேர குறுங்கால அடிப்படை ஆங்கிலப் பயிற்சி நெறி (NVQ Level1) வெகு விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளதால் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

க.பொ.த. (சா/த) பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களும் மற்றும் இப் பயிற்சி நெறியை பயில ஆர்வமுள்ள மாணவர்களும் தொழில்நுட்பவியல் கல்லூரி தொழில் வழிகாட்டல் அலுவலகத்தில் மேலதிக விபரங்களைப் பெற்றுக் கொள்ளலாம் என பணிப்பாளர் அறிவித்துள்ளார். (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வட இலங்கை தனியார் பேருந்து உரிமையாளர் சங்கம் வடக்கு முதலமைச்சர் விக்னேஸ்வரனுக்கு மகஜர்

(யாழ்ப்பாணம்)

2019-5ஆம் இலக்க ஒழுக்கவிதிகளை நடைமுறைப்படுத்துவது தொடர்பாக வர்த்தமானியில் உள்ள கட்டணங்கள் அதிகரிப்பினை வலியுறுத்தி உரிமையாளர்களின் வாழ்வாதாரத்தினைக் கருத்திற்கொண்டு வருடந்தோறும் நிரந்தர வழியனுமதியினை புதுப்பிக்கும் போது ரூபா 5ஆயிரத்தையும் சம்பவத்தாளுக்குரிய கட்டணமாக ரூபா 500வும் செலுத்துவதற்கு ஆவன செய்து தருமாறு கோரி வட இலங்கை தனியார் பேருந்து உரிமையாளர் சங்கத்தினர் வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனுக்கு மகஜர் ஒன்றினை கையளித்துள்ளனர்.

வட இலங்கை தனியார் பேருந்து உரிமையாளர் சங்கத்தின் தலைவர், உபசெயலாளர், முல்லைத்தீவு, மன்னார்,வவுனியா,கிளிநொச்சி, யாழ்.தூர சேவைப் பேருந்து உரிமையாளர்களின் கம்பனி ஆகியவற்றின் தலைவர்கள்,செயலாளர்கள் ஆகியோர் இணைந்து முதலமைச்சரை சந்தித்தபோதே இம்மகஜரை கையளித்துள்ளனர். அந்த மகஜரில்

2019/5 ஆம் இலக்க ஒழுங்கு விதிகளை நடைமுறைப்படுத்துவது தொடர்பாக 19.01. 2018 ஆம் திகதி பொது முகாமையாளரால் அனுப்பப்பட்ட கடிதத்துடன் கிடைத்த வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் நிரந்தர வழியனுமதிக் கட்டணமாக வருடத்திற்கு 10 ஆயிரம் ரூபாவும் சம்பவத்தாளுகான மாதாந்த கட்டணமாக ஆயிரம் ரூபாவும் பாதை அனுமதிப்பத்திரத்திற்குரிய உரிமை மாற்றம் ரூபாய் ஒன்றரை இலட்சமும் அறவிடப்போவதாகவும் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது என குறிப்பிடப்பட்டுள்ளது.

முன்னாள் போக்குவரத்து அமைச்சர் காலத்திலேயே இக்கட்டணங்கள் தீர்மானிக்கப்பட்டு எம்மால் ஏற்றுக் கொள்ள முடியாத நிலையில் நாம் அவரிடம் அதனைத் தெரிவித்திருந்தோம். பின்னர் தங்களுக்கும் அதிகார சபைத் தலைவருக்கும் பொது முகாமையாளருக்கும் இக் கட்டணத்தைக் குறைத்து அறவிடுவது பற்றி அறியத் தந்திருந்தோம். அவ்வறிக்கையில் இக்கட்டணம் பற்றிய சரியான ஓர் தீர்மானம் எடுக்க முன்னரே 19.01. 2018 ஆம் திகதி தங்களின் அனுமதியுடன் இச் சட்டவிதிமுறை அமுல்படுத்துவதாக எமக்கு கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. அத்துடன் பத்திரிக்கையிலும் இது விடயமாக தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் காலப்பகுதியில் வருடாந்த பாதை அனுமதிப்பத்திரத்திற்குரிய புதுப்பித்தல் கட்டணம் ரூபாய் 3ஆயிரமும் மாதாந்த சம்பவத்தாளிற்குரிய கட்டணமாக ரூபாய் 200 உம் பாதை அனுமதிப்பத்திரத்தினை உரிமை மாற்றுவதற்குரிய கட்டணமாக ரூபாய் ஒரு இலட்சமும் உறவினர்களுக்கான உரிமை மாற்றுக் கட்டணமாக ரூபாய் 25ஆயிரம் செலுத்தி வந்துள்ளோம். தற்பொழுது போக்குவரத்துத் தொழிலை மையமாகக் கொண்டு வாழ்வாதரத்தினை நடத்தி வரும் உரிமையாளர்களோ, அன்றி சாரதி நடத்துநர்களோ நாளொன்றுக்கு முன்னைய காலத்தில் கிடைக்கப் பெற்ற வருமானத்தினைப் பெற முடியாத தொரு இக்கட்டான சூழ்நிலையிலேயே சேவையாற்றி வருகின்றோம்.

மாதத்தில் பதினைந்து நாட்கள் மட்டுமே சேவை புரிவதுடன் இலங்கைப் போக்குவரத்து சபையின் அதிகரித்த சேவைகளுக்கு மத்தியில் இலாபங்கள் எதுவும் அற்ற நிலையில் சேவையாற்றுவதுடன் கிடைக்கப்பெறும் குறுகிய வருமானத்தினைக் கொண்டே தமது குடும்பச் செலவுகள் மற்றும் கடனடிப் படையில் கொள்வனவு செய்த பேருந்துகளுக்கான கட்டணங்கள் போன்றனவற்றினைச் செலுத்த முடியதா நிலையில் மக்களுக்கான சிறந்த சேவையாற்ற வேண்டும் என்ற நோக்கத்துடனும் கடமையுணர்ச்சியுடனும் சேவையாற்றி வருகின்றோம். அது மட்டுமன்றி இத் தொழிலினை சேவை அடிப்படையிலேயே செய்லாமே தவிர மேலும் வருமானம் அதிகரிக்ககூடிய மாற்று வழிமுறைகள் எதுவும் ஏற்படுத்தப்படவில்லை.

எனவே அனைத்து தனியார் பேருந்து உரிமையாளர்களும் ஒன்றுகூடி தீர்மானம் எடுக்கப்பட்ட வகையில் நிரந்தர வழியனுமதிக் கட்டணமாக ரூபாய் 5ஆயிரமும், மாதாந்த சம்பவத்தாளுக்குரிய கட்டணமாக ரூபாய்500 உம்செலுத்துவதற்கு ஆவன செய்வதுடன் அதிகாரசபையின் ஆளுகையின் கீழ் பாதை அனுமதிப்பதிரத்தினை உரிமை மாற்றம் செய்யும் போது முன்னர் வழங்கப்பட்டதனை விட அரைமடக்கு பணம் குறையும் என எதிர்பாத்திருந்த வேளையே அதனைவிட மேலும் அதிகரித்துக் காணப்படுவது உரிமையாளர்களுக்கு பாரிய தாக்கத்தினை ஏற்படுத்தியுள்ளது.

வட மாகாணத்தில் ஏற்கனவே 1100 இற்கும் மேற் பட்ட பாதை அனுமதிப்பத்திரங்கள் கேள்விப்பத்திரங்கள் இல்லாமலேயே வழங்கப்பட்டிருந்தன. தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் காலத்தில் கேள்விப்பத்திரம் மூலம் வழங்கப்படும் முறையினை எம்மால் கோரப்பட்டதற்கு அமைவாக நிறுத்தி வைக்கப் பட்டிருந்தது.

அதே போன்று இனிவரும் காலங்களிலும் கேள்விப்பத்திரங்கள் இன்றி தாங்கள் பரிசீலனைக்கமைவாக பாதை அனுமதிப்பத்திரத்தின்ன வழங்க ஆவன செய்துதவுமாறு கேட்டுக் கொள்ளுகின்றோம் என அந்த மகஜரில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

# தபால் மூல வாக்களிப்பு எமக்கே சாதகம் -பசில்



(கொழும்பு)

அரச ஊழியர்களுக்கான ஓய்வூதியங்களையும், நிவாரணங்களையும் இல்லாது செய்த இந்த நல்லாட்சி அரசாங்கத்தின் மீதான மக்களின் பிரதிபலிப்பு எமக்கு சாதகமானதாகவே அமையும் என முன்னாள் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

நியாயமான தேர்தலொன்றை நடத்தும் வகையில் அனைத்து கட்சிகளின் பிரதிநிதிகளுக்கும் தேர்தல்கள் ஆணைக்குழுவிற்கும் இடையில் நேற்று முன்தினம் (செவ்வாய்க் கிழமை) நடைபெற்ற பேச்சு வார்த்தையை தொடர்ந்து ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

"தபால் மூல வாக்களிப்பில் மொட்டு சின்னத்திற்கே அதிக வாக்குகள் கிடைத்திருக்கும் என்பதில் சந்தேகமில்லை.

ஏனெனில் இந்த அரசாங்கம் அரச ஊழியர் களுக்கான ஓய்வூதியத்தை யும், நிவாரணங்களையும் இல்லாது செய்துள்ளனர். இதனால் மக்கள் அரசாங்கத்தின்மீது வெறுப்பு கொண்டுள்ளனர்.

அது மட்டுமின்றி வானைத் தொட்டுள்ள தற்போதைய வாழ்க்கை செலவுகளினாலும் அரச ஊழியர்களே அதிகம் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இவ்வாறு வாழ்க்கைச் செலவை தாங்கிக் கொள்ள முடியாதவர்களுக்கான ஒரு சிறந்த வாய்ப்பாகவே இந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தல் அமையவுள்ளது.

ஏனையோருக்கு முன்னுதாரணமாக அமையும் வகையில், தபால் மூல வாக்களிப்பின்போது அரச ஊழியர்கள் எமது ஒன்றிணைந்த கட்சியின் வேட்பாளர்களின் கரங்களை பலப்படுத்துவார்கள் என்பதில் சந்தேகமில்லை" என்றார்.

இதேவேளை, பிணைமுறி விவகாரம் தொடர்பாக கேள்வி எழுப்பியபோது அது சாதாரண திருட்டு அல்ல என்றும் அதுவொரு பகல் கொள்ளை என்றும் தெரிவித்தார். (இ-7)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1311

Search for people, places and things Nagendram Home

### தர்மிகா

நீதான் எனக்கு மனைவியா வருவேன்னு எங்க மாஸ்ரர் அப்பவே சொன்னாங்க... எப்படிச் சொன்னாங்க?



பன்ணி மேய்க்கத்தான் நீ லாயக்குன்னு சொன்னாங்க

### வைஸ்ணவி

உங்கள் மனமே
நீங்கள் விரும்பியபடி
இயங்காதபோது,
மற்றவர்கள்
உங்கள் மனதுக்கு ஏற்ப
இயங்கவில்லை என்று
கோபம் கொள்வது
என்ன நியாயம்...

### சாந்தன்

வீடு எந்த சத்தமுமில்லாம அமைதியா இருக்குன்னா மின்சாரமில்லைன்னு அர்த்தம்



அதுவே மயான அமைதியா இருந்தா சம்சாரம் இல்லன்னு அர்த்தம்

### கவிராஜ்

ஸ்... அய்யய்யா... காலைல எழுந்திரிச்சா ஒரு மனுசனுக்கு எவ்வளவு வேலை... குளிக்கனும், சாப்பிடனும், தூங்கனும். மறுபடியும் முழிக்கனும், நைட் சாப்பிடனும், நல்லா தூங்கனும் மறுபடியும் எழுந்திரிக்கனும், குளிக்கனும். ஸ்... அய்யா... முடியலடா சாமி...



### அஸ்வரன்

புது கலண்டர் வந்த உடனே அதுல போய் எத்தன கவர்மெண்ட் லீவு, என்னைக்கு தீபாவளின்னு...



பாத்து வச்சாத்தான் ஒரு மனத்திருப்தியா இருக்கு

### விமேஸ்

ஸ்கூல்ல பீஸ் அதிகமா வாங்குறது கூட பரவாயில்லை



ஆனா பேங்க் மாதிரி நோட்டு எண்ணிற மிஷின் வெச்சிருக்காஙுங்க அத பாக்குறப்பத்தான் கடுப்பு வருது...!


நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# சத்தியம் என்றும் தோற்காது

## ஊவா மாகாண முதலமைச்சர் சாமர சம்பத் தெரிவிப்பு



(கொழும்பு)

பாடசாலை அதிபரை நான் மன்னிப்புக் கோருமாறு கேட்கவில்லை. அவராகவே வந்து வணங்கி புத்தாண்டு வாழ்த்துக்களைக் கூறிவிட்டுச் சென்றார் என்று ஊவா மாகாண முதலமைச்சர் சாமர சம்பத் தசநாயக்க தெரிவித்தார்.

பதுளை தமிழ் மகா வித்தியாலய பெண் அதிபர் முதலமைச்சரால் முழந்தாளிடச் செய்யப்பட்டு மன்னிப்புக் கோர செய்யப்பட்டதாக எழுந்துள்ள குற்றச்சாட்டையடுத்து நேற்று முன்தினம் முதலமைச்சர் பதுளை பொலிஸ் நிலையத்தில் சரணடைந்தார். இதனையடுத்து அவர் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு இரண்டு இலட்சம் ரூபா பெறுமதியான சரீரப் பிணையில் விடுவிக்கப்பட்டார்.

நீதிமன்றத்தை விட்டு வெளியே வந்த அவரை பெருமளவிலான ஆதரவாளர்கள் ஒன்றுகூடி வரவேற்றனர். தனது உத்தியோகபூர்வ வாசஸ்தலத்திற்கு அவர் வருகை தந்த போதும் பெருமளவிலான ஆதரவாளர்கள் அவரை வரவேற்றனர்.

அங்கு ஆதரவாளர்கள் மத்தியில் கருத்துத் தெரிவித்த முதலமைச்சர்,

குறித்த அதிபரை மன்னிப்புக் கேட்க நான் கோரவும் இல்லை. அவராகவே வந்து வணங்கி புத்தாண்டு வாழ்த்துக்களைக் கூறிவிட்டுச் சென்றார். இதனை முன்னிலைப்படுத்தி எனது தரப்பினர் அரசியல் இலாபம் தேடுகின்றனர். நான் தெய்வ நம்பிக்கை உள்ளவன். இன, மத பேதங்களுக்கு அப்பாற்பட்டவன். சத்தியம் என்றும் தோற்றதில்லை. அத்துடன் எனது விடயத்திலும் சத்தியம் வெல்லும். அது வரை காத்திருப்பேன் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## சைட்டம் மருத்துவக் கல்லூரி குறித்து மற்றுமொரு கலந்துரையாடல் நாளை

(கொழும்பு)

மாலபே சைட்டம் தனியார் மருத்துவக் கல்லூரி தொடர்பான ஜனாதிபதி உபகுழுவின் அறிக்கை கிடைக்கப் பெற்றுள்ளதாகவும், இது தொடர்பிலான மேலதிக கலந்துரையாடலொன்று நாளை 26ஆம் திகதி இலங்கை மருத்துவ சபையில் இடம்பெறவுள்ளதாகவும் சட்டமா அதிபர் நேற்று முன்தினம் உச்ச நீதி மன்றத்துக்கு அறிவித்தார்.

சட்டமா அதிபர் சார்பில், மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் ஜனாதிபதி சட்டத்தரணி சஞ்சய் ராஜரத்தினம் இதனை நீதிமன்றுக்கு அறிவித்தார்.

அதனை அடுத்து மாலபே சைட்டம் தனியார் மருத்துவக் கல்லூரி தொடர்பான மனு எதிர்வரும் 29ஆம் திகதிக்கு பிற்போடப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## கிணற்றிலிருந்து சடலம் மீட்பு

(யாழ்ப்பாணம்)

மானிப்பாய் கட்டுடை பகுதியிலுள்ள வயல் கிணற்றில் இருந்து வயோதிபர் ஒருவர் நேற்று முன்தினம் இரவு 8 மணியளவில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார் என மானிப்பாய் பொலிஸார் தெரிவித்தனர்.

மதவடிலேன் கட்டுடைப்பகுதியைச் சேர்ந்த ஆ.கணேசமூர்த்தி (வயது-64) என்பவரே சடலமாக மீட்கப்பட்டவராவார்.

வயலுக்கு சென்று வருவதாகக்கூறி நேற்று முன்தினம் முற்பகல் 10 மணியளவில் வீட்டிலிருந்து இவர் புறப்பட்டுள்ளார். மதியம் 2 மணி ஆகியும் உணவிற்கு வீடு திரும்பவில்லை இதனையடுத்து உறவினர்கள் வயலுக்குச்சென்று தேடினர். இதன் போது இவர் அணிந்திருந்த செருப்பு வயல் கிணறு ஒன்றுக்கு அருகில் காணப்பட்டுள்ளது. கிணற்றினை எட்டிப் பார்த்த போது முதியவர் சடலமாகக் காணப்பட்டுள்ளார். சம்பவ இடத்திற்கு மானிப்பாய் பொலிஸார் வரவழைக்கப்பட்டு மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டதோடு சடலம் கிணற்றிலிருந்து மீட்கப்பட்டது. (இ-8)

## பருத்தித்துறையில் இரத்ததான நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை பிரதேச செயலக ஊழியர் நலன்புரிச் சங்கத்தின் ஏற்பாட்டில் இரத்ததான நிகழ்வு எதிர்வரும் 29 ஆம்திகதி திங்கட்கிழமை காலை 8.45மணிக்கு பருத்தித்துறை பிரதேச செயலகத்தில் இடம்பெறவுள்ளது.

இரத்ததானம்செய்ய விரும்புகின்ற பொதுமக்கள் 0212 264717,021-2263259 என்ற தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொண்டு பதிவுகளினை மேற்கொள்ள முடியும் என பருத்தித்துறை பிரதேச செயலர் ஆழ்வாப்பிள்ளை சிறி அறிவித்துள்ளார். (இ-7)

## யாழ்.பல்கலை.ஊழியர்கள் இன்று ஒருநாள் அடையாள வேலை நிறுத்தம்

(யாழ்ப்பாணம்)

2016 ஆம் ஆண்டு ஜூலை 27 ஆம் திகதிமுதல் ஓகஸ்ட் 8ஆம் திகதி வரை அனைத்துப் பல்கலைக்கழக தொழிற்சங்க கூட்டுக்குழுவால் தொடர்ச்சியான வேலை நிறுத்தப் போராட்டம் ஒன்று ப.மா. ஆணைக்குழுவிலும் நாடு முழுவதிலுமுள்ள ப.மா. ஆசார்ந்த அரச பல்கலைக்கழகங்களிலும் உயர் கல்வி நிறுவனங்களிலும் மேற்கொள்ளப்பட்டமையைத் தொடர்ந்து ஓகஸ்ட் 8ஆம் திகதி உயர் கல்வி அமைச்சு, ப.மா.ஆ. குழு, தொழிங்சங்கங்களிடையே பிணக்குகளைத் தீர்ப்பது சம்பந்தமான எழுத்து மூலமான உடன்பாடொன்று எட்டப்பட்டது.

இந்த உடன்பாட்டுக்கமைவாக தொழிற்சங்க நடவடிக்கை தற்காலிகமாக ஒத்தி வைக்கப்பட்டது. இந்த உடன்பாட்டின் பிரகாரம் ஊழியர்களின் பிணக்குகளில் சில தீர்த்து வைக்கப்பட்டாலும் உடன்பாட்டின் நிறைவேற்றப்படாத அம்சங்களை (மீள மீள நினை வூட்டியும்) நிறைவேற்றும் படி வலியுறுத்துவதை நோக்கமாகக்கொண்டே 17.01. 2018 அன்று பிக்கெட்டிங் போராட்டம் நடத்தப்பட்டது.

மாதாந்த இழப்பீட்டுப்படி (MCA) 2016 - 2020 வரையான 5 ஆண்டுகாலப் பகுதியில் 100% ஆக அதிகரிக்கப்படுதல் என்ற உடன்படிக்கையின்படி 2018 ஆம் ஆண்டு ஜனவரிமாதம் 20% ஆல் இது அதிகரிக்கப்பட வேண்டும். ஆனால் இது சம்பந்தமான சுற்றுநிருபம் இதுவரை வெளியிடப்படவில்லை.

பல்கலைக்கழகங்களில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள சொத்துக்கடன் (Property loan) போதனை சாரா ஊழியர்களுக்கு பாதியளவே வழங்கப்படுகிறது. உடன்பாட்டின் பிரகாரம் சகலருக்கும் சமமாக 2 மில்லியன்கடன்தொகையை வழங்க இதுவரை நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

சகலபல்கலைக்கழகங்களிலும் திறன்மிக்க காப்புறுதித் திட்டத்தை உருவாக்குவதற்கான செயற்றிட்டமெதுவோ, திறன்மிக்க ஓய்வூதியத் திட்டத்தை உருவாக்குவதற்கான செயற்திட்டமெதுவோ உடன்பாட்டின் பிரகாரம் இதுவரை மேற்கொள்ளப்படவில்லை.

இவை இவ்வாறிருக்க பல்கலைக்கழகமானிய ஆணைக்குழு தொழிற்சங்கங்களுடன் கலந்துரையாடாமல் அல்லது தொழிற்சங்கங்களுக்கு அறியத்தராமல் பின்வரும் ஒரு தலைப்பட்சமான தீர்மானங்களை எடுத்துள்ளது.

பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவில் உள்ள உயர்நிலை பதவி உத்தியோகத்தர்களின் வெற்றிடங்களை உரியமுறையில் நிரப்புவதற்குநடவடிக்கைஎடுக்காதிருத்தல்

2018 ஆம்ஆண்டுஜனவரி 2 ஆம்திகதிபமா.ஆ.தலைவருக்கு இவ்விடயங்கள் தொடர்பாக கடிதம் மூலம் அனைத்துப் பல்கலைக்கழகங்களின் தொழிற்சங்கங்களின் கூட்டுக்குழு அறிவித்திருந்ததுடன் இதன் பிரதிகள் சகல பல்கலைக்கழகங்க ளின் துணை வேந்தர்கள், பதிவாளர்களுக்கும் மற்றும் உயர்கல்வி அமைச்சர், அமைச்சின் செயலாளருக்கும் அனுப்பப்பட்டன. 17.01.2018 அன்று பிக்கெட்டிங் போராட்டம்நடத்தப்பட்டது.

மேற்படி கோரிக்கைகளை நிறைவேற்ற இதுவரை நடவடிக்கை எடுக்காதமையினால் 22.01.2018 அன்று கொழும்பு தேசிய நூலக கேட்போர் கூடத்தில் நடைபெற்ற கூட்டத்தில் எதிர்வரும் 25.01.2017 வியாழக்கிழமை அன்று ஒருநாள் அடையாளவேலைநிறுத்தப் போராட்டம் ஒன்றை மேற்கொள்வதாக அனைத்துப் பல்கலைக்கழகதொழிற்சங்க கூட்டுக்குழு தீர்மானித்துள்ளது. கூடத்தில் நடைபெற்ற கூட்டத்தில் எதிர்வரும் 25.01. 2017 வியாழக்கிழமை அன்று ஒருநாள் அடையாள வேலை நிறுத்தப் போராட்டம் ஒன்றை மேற்கொள்வதாக அனைத்துப் பல்கலைக்கழக தொழிற்சங்க கூட்டுக் குழு தீர்மானித்துள்ளது. அதன் பின்னரும் கோரிக்கைகள் நிறைவேறப்படாத சந்தர்ப்பத்தில் பெப்ரவரி மாதம் முதல் தொடர் போராட்டங்களில் ஈடுபடவுள்ளதாகவும் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலும் பாதுகாப்பு ஊழியர்கள் தவிர்ந்த சகல கல்வி சாராஊழியர்களையும் இப்போராட்டத்தில் இணைந்து கொள்ளுமாறும்இன்று 25.01. 2018 வியாழக்கிழமை காலை 8.00 மணிக்கு இராமநாதன் மண்டபமுன்றலில் ஒன்று கூடுமாறும் யாழ்பல் கலைக் கழக ஊழியர் சங்கம் அழைப்பு விடுத்து அறிவித்துள்ளது. (இ-7)

## பண வெகுமதி வழங்குவதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

(யாழ்ப்பாணம்)

தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சு ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியச்சபையின் ஏற்பாட்டில் 2017 ஆம் ஆண்டு க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்த ETF அங்கத்தவர்களின் பிள்ளைகளுக்கு பண வெகுமதி வழங்குவதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இதில் மாணவர் ஒருவருக்கு தலா 12ஆயிரம் ரூபா பெறுமதியான பண வெகுமதி 5000 பேருக்கு வழங்கப்படவுள்ளது.

இதற்கான விண்ணப்பப் படிவங்களை WWW. etfb.lk என்ற இணையத்தளத்தின் ஊடாக 2018.01.22 தொடக்கம் பிராந்திய காரியாலயங்களில் பெற்றுக் கொள்ளலாம் எனவும் பூரண ப்படுத்திய விண்ணப்பப டிவங்களை 01.03.2018 இற்கு முன்னர் 9'x4" அளவுடைய தபால் உறையில் புலமைப் பரிசில் அலுவலர் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியச் சபை இல.92, கிருள வீதி, நாரஹேன்பிட்டி கொழும்பு 05 என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கலாம்எனவும்புலமைப் பரிசில் அலுவலர் அறிவித்துள்ளார். (இ-7)

## பேஸ்புக் பதிவால் வந்த வினை ஷபீக் ராஜாப்தீன் இராஜினாமா; ஹக்கீம் அதிரடி நடவடிக்கை



(ஏறாவூர்)

கிழக்கு மாகாண முஸ்லிம்களை இழிவுபடுத்தி பேஸ்புக்கில் கருத்து வெளியிட்டு சர்ச்சைக்குள்ளாகியுள்ள ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தேசிய அமைப்பாளரும் தேசிய நீர் வழாங்கல், வடிகாலமைப்புச் சபையின் பிரதி தலைவருமான ஷபீக் ரஜாப்தீன், அப்பதவிகளில் இருந்து நேற்று இராஜினாமா செய்துள்ளார்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் நகர திட்டமிடல், நீர் வழாங்கல் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் குறித்த விடயம் தொடர்பில் விளக்கம் கோரியதை தொடர்ந்தே, ஷபீக் ரஜாப்தீன் இத்தீர்மானத்தை மேற்கொண்டதாக கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன.

சம்மாந்துறையை சேர்ந்த பேஸ்புக் நண்பர் ஒருவருடன் மெசஞ்ஜர் மூலம் சமகால அரசியல் தொடர்பாக விவாதிக்கும்போது, கிழக்கு மாகாண முஸ்லிம்களின் அரசியல் செயற்பாடுகளை விமர்சித்தும் இழிவுபடுத்தியும் ஷபீக் ரஜாப்தீன் கருத்துகளை வெளியிட்டிருந்தார்.

இதனைக் குறித்த நபர், பேஸ்புக் வாயிலாக அம்பலப்படுத்தியதை தொடர்ந்து அவர் மீது பலத்த கண்டனமும் விமர்சனமும் எழுந்திருந்தது குறிப்பிடத்தக்கது. (இ-7)

## கட்சி தாவ பந்துல தயார்! கூட்டு எதிரணிக்குள் குழப்பம்



(கொழும்பு)

ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் உட்கட்சி கூட்டம் நேற்று முன்தினம் நடைபெற்ற போது சூடான வாக்குவாதங்கள் நடந்துள்ளதாக தெரியவருகிறது.

நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.சி. முத்துகுமாரன, நாடாளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்த்தனவை கடுமையாக விமர்சித்துள்ளார். பந்துல குணவர்த்தன கட்சி தாவ உள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

இதன் காரணமாகவே பந்துல குணவர்த்தன தற்போது ஜனாதிபதியை விமர்சிப்பதில்லை எனவும் அவர் தெரிவித்தார்.

எனினும் இந்த குற்றச்சாட்டை மறுத்த பந்துல குணவரத்தன தான் கட்சி மாறப் போவதில்லை எனத் தெரிவித்துள்ளார்.

அதேவேளை, ஐக்கிய தேசியக்கட்சியினரும், ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியினரும் ஒருவரை ஒருவர் விமர்சிப்பது போல் தற்போது நடித்து வருவதாக கூட்டத்தில் பேசிய நாடாளுமன்ற உறுப்பினர் மகிந்தானந்த அளுத்கமகே கூறியுள்ளார். மக்கள் விடுதலை முன்னணியும் இந்த நடிப்பில் ஒரு பங்காளி எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (இ-7)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# ஜனாதிபதிக்கு எதிராக சேறுபூசும் பொறுப்பை பிரசார நிறுவனத்திடம் ஒப்படைத்த மகிந்தஅணி

(கொழும்பு)

மகிந்த ராஜபக்ஷ உட்பட அவரது அணியினர் இணைந்து, தனக்கு எதிராக சேறுபூசும் பிரசாரங்களை முன்னெடுப்பதற்கான பொறுப்பினை பிரசார நிறுவனம் ஒன்றிடம் கையளித்துள்ளதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

புறக்கோட்டை டெக்னிகல் சந்தியில் நேற்று முன்தினம் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் பேசும் போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

எனக்கு எதிராக குற்றச்சாட்டுக்களை முன்வைக்க எதுவும் இல்லாத காரணத்தினால், தனிப்பட்ட வாழ்க்கையை மையப்படுத்தி, சேறுபூசும் பிரசாரங்களை முன்னெடுக்க திட்டமிட்டுள்ளனர்.

அண்மையில் இந்த குழுவினர் இணைந்து இது குறித்து கலந்துரையாடியுள்ள தாகவும் அதில் சம்பந்தப்பட்ட ஒருவர் எனக்கு சகல தகவல்களையும் வழங்கினார்.

இதற்கமைய எதிர்வரும் நாட்களில் இணையத்தளங்கள் உட்பட ஊடகங்களை பயன்படுத்தி சேறுபூசும் பிரசாரங்களை முன்னெடுக்க திட்டமிட்டுள்ளனர்.

சேறுபூசி எப்படியான பிரசாரங்களை முன்னெடுத்தாலும் எவருக்கும் அஞ்சப்போவதில்லை. கடந்த ஜனாதிபதித் தேர்தல் சமயத்திலும் இப்படியான சேறுபூசும் பிரசாரங்களை முன்னெடுத்தனர்.



இப்படியான கீழ்த்தரமான யுக்திகளால் எனது வெற்றியைத் தடுக்க முடியாமல் போனது எனவும் ஜனாதிபதி தெரிவித்தார். (இ-7)

# வெளிநாடு செல்ல அனுமதி கோருகிறார் லலித் வீரதுங்க

(கொழும்பு)



முன்னாள் ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க வெளிநாடு செல்ல நீதிமன்றத்திடம் நேற்று அனுமதி கோரியுள்ளார்.

லலித் வீரதுங்கவின் கோரிக்கை தொடர்பில் சட்டமா அதிபரின் நிலைப்பாட்டை எதிர்வரும் 29ஆம் திகதி நீதிமன்றத்திற்கு அறிவிக்குமாறு கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி கிஹான் குலதுங்க உத்தரவிட்டுள்ளார்.

தனிப்பட்ட விஜயமாக அவுஸ்திரேலியாவுக்கும், ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம் நடத்தும் கருத்தரங்கொன்றில் கலந்துகொள்ள கட்டார் செல்லவும் நீதிமன்றத்திடம் அனுமதி கோரியுள்ளார்.

கடந்த ஜனாதிபதித் தேர்தல் சமயத்தில் சில் துணிகளை விநியோகித்தமை சம்பந்தமான வழக்கில் லலித் வீரதுங்கவிற்கு சிறைத் தண்டனை விதிக்கப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# பொலிஸாரின் துப்பாக்கிச் சூட்டில் பலியானவரின் குடும்பத்திற்கு வீடு

(கொழும்பு)

கதிர்காமத்தில் பொலிஸார் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகம் காரணமாக பலியான நிரோஷன் என்பவரின் குடும்பத்திற்கு பொலிஸ் திணைக்களத்தினால் புதிய வீடொன்று கட்டிக் கொடுக்கப்படவுள்ளது.

பொலிஸாரின் சைகையை மீறி மோட்டார் சைக்கிளை ஓட்டிச் சென்ற நபர் மீது பொலிஸார் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகம் காரணமாக கடந்த வாரம் கதிர்காமத்தில் நிரோஷன் என்ற இளம் குடும்பஸ்தர் உயிரிழந்திருந்தார்.

இதன் காரணமாக பொலிஸார் மற்றும் பொதுமக்களுக்கிடையில் பாரிய மோதல் நிலை ஏற்பட்டு கதிர்காமத்தில் சில நாட்களாக பதற்ற நிலை தொடர்ந்தது.

இந்த நிலையில் துப்பாக்கிச் சூட்டில் பலியான நிரோஷனின் குடும்பத்தாருக்கு புதிய வீடொன்றையும், வருமானத்துக்காக வர்த்தக நிலையம் ஒன்றையும் நிர்மாணித்துக் கொடுக்க பொலிஸார் முன் வந்துள்ளனர்.

எதிர்வரும் மூன்று மாதங்களுக்குள் அதற்கான நிர்மாணப் பணிகள் நிறைவடையும் என்று தென் மாகாண பிரதிப் பொலிஸ்மா அதிபர் கித்சிறி ஜயலத் தெரிவித்துள்ளார்.

அதேபோன்று உயிரிழந்த நிரோஷனின் பிள்ளைகள் உயர் கல்வியைப் பூர்த்தி செய்யும் வரை அவர்களின் கல்விக்கான செலவுகளை பொறுப்பேற்றுக் கொள்ள கொழும்பைச் சேர்ந்த வர்த்தகர் ஒருவர் முன்வந்துள்ளார். (இ-7)

# ஜனாதிபதியின் கருத்திற்கெதிராக மகள் சத்துரிகாவின் செயற்பாடு



(கொழும்பு)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் மகள் சத்துரிகா சிறிசேன தந்தையின் கருத்துகளுக்கு எதிரான நடவடிக்கைகளை முன்னெடுத்து வருவதாக சமூக வலைத்தளங்கள் விமர்சித்து வருகின்றன.

அண்மையில் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றின்போது சத்துரிகா சிறிசேன சிறுவர்களுக்கு மைலோ பால் பக்கெற்றுகளை விநியோகித்துள்ளார். இந்தச் சம்பவமானது ஜனாதிபதியின் கருத்துக்கு முரண்பட்ட வகையில் அமைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த நவம்பர் மாதம் 11ஆம் திகதி "மைலோ பாலில் அதிகளவு சீனி உள்ளடக்கப்பட்டுள்ளதால் உடல்நலத்திற்கு தீங்கு விளைவிக்கும் பானமாக மைலோ காணப்படுகின்றது. எனவே இதனை பருகுவதை தவிர்த்துக்கொள்ள வேண்டும் எனவும், மைலோவானது தடைசெய்யப்பட வேண்டிய பானவகைகளுள் ஒன்றாகும் என்ற வகையிலும் ஜனாதிபதி கருத்து வெளியிட்டிருந்தார்.

எனினும் தற்போது ஜனாதிபதியின் மகளே, மைத்திரி எதிர்த்த பானத்தை விநியோகித்து வருகின்றார்.

ஜனாதிபதியின் எதிர்மறையான கருத்துக்களின் பின்னரும் குறித்த பான உற்பத்திகள் மட்டுப்படுத்தப்படாமல் தொடர்ந்தும் நடைபெற்று வருகின்றன என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# புலியின் கட்டுப்பாட்டில் கிராமம்

(கொழும்பு)

தெரனியகல பிரதேச மக்களை புலியொன்று அச்சுறுத்தி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தெரனியகல பொலிஸ் பிரிவிற்கு உட்பட்ட மஹாதென்ன, நூரியாவத்த, மராவத்த, பொல்கஸ்வத்த ஆகிய பகுதிகளில் இந்தப் புலி சஞ்சரிப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

பிரதேசத்தில் உள்ள நாய்கள் மற்றும் பன்றிகளை இந்த புலி கொன்று உணவாக உட்கொண்டு வருவதாக பிரதேச மக்கள் தெரிவித்துள்ளனர்.

இதற்கு முன்னரும் பல சந்தர்ப்பங்களில் இந்தப் புலி கிராமங்களுக்குள் புகுந்து நாய்களை வேட்டையாடிச் சென்றுள்ளது.

இதன் காரணமாக பெருந்தோட்டங்களில் பணியாற்றி வரும் அப்பாவி தொழிலாளிகள் பெரும் பீதியடைந்துள்ளதுடன், அவர்களது பணியும் ஸ்தம்பிதம் அடைந்துள்ளது. (இ-7)

# வெயிலில் விடும் துவிச்சக்கரவண்டிக்கு பாதுகாப்புக் கட்டணம்

(கரணவாய்)

நெல்லியடி பொதுச்சந்தையில் கொட்டகை இல்லாது வெயிலில் விடப்படும் துவிச்சக்கர வண்டிகளுக்கு பாதுகாப்புக்கட்டணம் அறவிடப்படுவதாக பொதுமக்கள் குற்றம் சாட்டியுள்ளனர். இது தொடர்பில் கரவெட்டிப்பிரதேச சபையினர் கவனம் செலுத்த வேண்டுமென சந்தைக்கு வரும்பொது மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (இ-8-60)

# துஷ்பிரயோகச் சம்பவம் ஆசிரியர் மறியலில்

(ஏறாவூர்)

மட்டக்களப்பு - ஏறாவூரிலுள்ள பிரபல பாடசாலையொன்றில் துஷ்பிரயோகச் சம்பவம் தொடர்பாக முறைப்பாடு செய்யப்பட்ட நிலையில் தலைமறைவாகியிருந்த சிரேஷ்ட ஆசிரியர் ஏறாவூர் பொலிஸ் நிலையத்தில் நேற்று முன்தினம் சரணடைந்ததுடன் அவரை விளக்க மறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டுள்ள சந்தேக நபரை ஏறாவூர் சுற்றுலா நீதவான் நீதிமன்றில் பொலிஸார் ஆஜர்படுத்திய போது நீதிபதி முஹம்மத் றிஷ்வி சந்தேக நபரை பெப்ரவரி 7 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். (இ-7)

# முஸ்லிம் கட்சிகளுக்கு அறைகூவல்

(கொழும்பு)



போலி அரசியல் கலாசாரங்களுக்கு முற்றுப்புள்ளி வைத்துவிட்டு, சமூக நோக்காகக் கொண்ட உண்மையான அரசியல் செய்ய முன்வருமாறு, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் பைசர் முஸ்தபா, முஸ்லிம் கட்சிகளுக்கு அறைகூவல் விடுத்தார்.

அம்பாறை மாவட்டத்தில் பொத்துவில் மற்றும் நிந்தவூர் ஆகிய பிரதேசங்களில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி சார்பில் போட்டியிடும் வேட்பாளர்களை ஆதரிக்கும் முகமாக இடம்பெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டங்களில் நேற்று முன்தினம் அவர் மேலும் தெரிவிக்கையில்,

எனக்கு முஸ்லிம் சமூகம் தேவை. எனவே தான் நான் சமூக நோக்காகக் கொண்ட அரசியலை செய்து வருகின்றேன்.

சுனாமிப் பேரலை அனர்த்தம் ஏற்பட்டபோது, நிந்தவூர், அட்டாளைச்சேனை, பொத்துவில், அக்கரைப்பற்று, சாய்ந்தமருது, மருதமுனை போன்ற பிரதேசங்களிலும் இன்னும் ஏனைய பிரதேசங்களிலும் பாரிய அழிவுகள் இடம்பெற்றன. அதன் பின்னர் இப்பிரதேசத்தில் உள்ள ஒலுவில், அட்டாளைச்சேனை, பாலமுனை, நிந்தவூர், ஒலுவில் ஆகிய இடங்களில் நடைபெற்ற சம்பவங்களின்போது, நான் என்னையே அர்ப்பணம் செய்து, தனிமையாக போராடினேன். இச்சந்தர்ப்பத்தில் கூட, தாமே முஸ்லிம் கட்சிகளின் தலைவர்கள் எனக்கூறிக் கொள்ளும் எந்த முஸ்லிம் தலைமைத்துவ கட்சிகளும் முன்வரவில்லை.

இக்கட்சிகள் இறுதி கட்டத்திலேயே இப்பகுதிகளுக்கு வந்தது மட்டுமல்லாமல், புகைப்படம் எடுத்துக்கொண்டு, பத்திரிகைகளிலும் பேஸ்புக்களிலும் தம்மை விளம்பரப்படுத்திக் கொண்டார்கள். இதுதான், முஸ்லிம் கட்சிகள் சமூகத்துக்கு செய்த வேலை. இவ்வாறான செயல்களைத் தான் நான் வெறுக்கிறேன்.

யாரும் இம்முறை ஏமாற வேண்டாம். சோர்ந்து போகவும் வேண்டாம். ஏமாற்று கலாசாரத்தை மாற்றுங்கள். உங்கள் பிரதேசத்தை அபிவிருத்தி செய்யும் தேசிய அரசாங்கத்துக்கு ஆதரவைக் கொடுங்கள். அதனூடாக வேட்பாளராகக் களமிறங்கியுள்ளவர்களை ஆதரியுங்கள் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# பேராதனை பல்கலையில் தாக்குதல்; 9 மாணவர்கள் விளக்கமறியலில்

(கொழும்பு)

பேராதனை பல்கலைக்கழக முகாமைத்துவ பீட மாணவர்கள் இருவர் மர்மமான முறையில் தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட 9 மாணவர்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

கண்டி பிரதான நீதவான் முன்னிலையில் அவர்கள் நேற்று முன்தினம் முன்னிலைப்படுத்தப்பட்டனர்.

இதன்போது அவர்களை நாளை 25 ஆம் திகதி வரை யில் விளக்கமறியலில் வைக்க நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

கடந்த 15 ஆம் திகதி குறித்த தாக்குதல் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

சம்பவத்தில் காயமடைந்த, குறித்த மாணவர்கள் பேராதனை வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருவதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அத்துடன், சம்பவம் தொடர்பில் கிடைக்கப்பெற்றுள்ள காணொலி ஒன்று தொடர்பில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர். (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# சிரிப்பால் வந்த சிரிப்பு

(23.01.2018 தொடர்ச்சி)

கசையடி கொடுக்க ஆட்கள் போதவில்லை. மேலும் கசையடி கொடுக்கும்போதே, அடிக்கிற ஆட்கள் சிரித்துவிட அவர்களும் கசையடி வாங்கினார்கள். இப்படிக் கசையடி வாங்கியவர்களால் இரண்டு நாட்களுக்கு எந்த வேலையும் செய்ய முடியவில்லை. விவசாயம் நடக்கவில்லை, தொழிற்சாலைகள் செயற்படவில்லை, பாடசாலைகள் நடக்கவில்லை, கல்லூரிகள் மூடிக்கிடந்தன, வீடுகளில் சமையல் செய்ய ஆளில்லை. எல்லோரும் வைத்திய சாலையில் கிடந்தார்கள்.

உடம்பு சரியாகி வந்ததும் ஏதாவது ஒரு காரணத்துக்காகச் சிரித்து விடுவார்கள். ஏன் முதலமைச்சரே இரண்டு தடவை கசையடி வாங்கினார் என்றால் பார்த்துக் கொள்ளுங்களேன். அதிலிருந்து முதலமைச்சர் தொடங்கி அதிகாரிகள், ஊழியர்கள், சேவகர்கள், பொது மக்கள் என்று எல்லோரும் இரவில் சத்தமாக ரேடியோ, தொலைக்காட்சி சனல்களை போட்டு சிரியோ சிரியென்று சிரிப்பார்கள்.

ரேடியோ, தொலைக்காட்சி சத்தத்தில் சிரிப்புச் சத்தம் வெளியே கேட்காது. இப்படியெல்லாம் சிரிப்பூர் மக்கள், வெளிப்படையாகச் சிரிக்க முடியாமல் சங்கடப்பட்டார்கள். நீங்களே சொல்லுங்கள்? யாராலும் சிரிக்காமல் வாழ முடியுமா?

ஆனால், தொடர்ந்து வாங்கிய தண்டனையால் மக்கள் சிரிப்பை மறந்து அழத் தொடங்கினார்கள். முன்பு எதற்கெல்லாம் சிரித்தார்களோ, அதற்கெல்லாம் இப்போது



அழுதார்கள். வீடே அழுதது. தெருவே அழுதது. ஊரே அழுதது. நாடே அழுதது. பகலும் இரவும் அழுகைச் சத்தம் கேட்டுக் கொண்டேயிருந்தது.

ராஜா ஒரு நாள், அவருடைய அமைச்சர்களுக்கு விருந்து வைத்தார். அந்த விருந்தில் முதலமைச்சர் வறுத்த கோழிக்குஞ்சு ஒன்றை அப்படியே விழுங்க. முயற்சித்து வாயை அகலமாகத் திறந்தார். கோழிக்குஞ்சு உள்ளேயும் போகாமல் வெளியேயும் வராமல் வாய்க்குள்ளே நின்றுவிட்டது. முதலமைச்சரின் வாய் தவளையின் வாய் மாதிரி ஆகிவிட்டது.

அந்தநேரம் பார்த்து ராஜா முதலமைச்சரிடம், "எப்படி விருந்து?" என்று கேட்டார்.

அதற்கு முதலமைச்சர் "விருந்து பிரமாதம்" என்று சொன்னார்.

அதைக் கேட்ட ராஜா, சிரிப்பு பொங்கிவர சிரித்துவிட்டார். உடனே விருந்தில் கலந்து கொண்டவர்கள் "ஹேய்... ராஜா சிரித்துவிட்டார் ராஜா சிரித்துவிட்டார்..." என்று கத்தினார்கள்.

உடனே ராஜா சேவகர்களைக் கூப்பிட்டு, "யாராயிருந்தாலும் சட்டம் சட்டம்தான்... நிறைவேற்றுங்கள்..." என்று சொன்னார் ராஜா. எல்லோரும் வேண்டாம் வேண்டாம் என்று சொன்னார்கள். ஆனால், ராஜா பிடிவாதம் பிடித்தார்.

சரி என்று சேவகர்களில் ஒருவன் ராஜாவை திருப்பி நிறுத்தி. முதுகிலும் பிட்டத்திலும் ஐம்பது கசையடிகள் கொடுத்தான். அவ்வளவுதான் ராஜா துடிதுடித்து, உடம்பெல்லாம் தடித்து உருண்டு புரண்டு விட்டார்.

ராஜா துடிப்பதைப் பார்த்து எல்லோருக்கும் சிரிப்பு வந்தாலும் யாரும் சிரிக்கவில்லை.

மறுநாள் ராஜா முதல் வேலையாக முதலமைச்சரைக் கூப்பிட்டு அவருடைய சிரிப்புத் தடைச் சட்டத்தை உடனே நீக்கிவிடச் சொன்னார். முதலமைச்சர் ராஜாவின் வீங்கிப்போன உடம்பைப் பார்த்து சிரிப்பு பொங்கி வரச் சிரித்தார். ராஜாவும் அந்தச் சிரிப்பில் கலந்துகொண்டார். சிரிப்பூர் நாட்டிலிருந்த மக்களும் அன்றிலிருந்து சுதந் திரமாகச் சிரிக்க ஆரம்பித் தார்கள்.

(இது ஒருநகைச்சுவைக்காக)

(முற்றும்)




- 750- அப்பாசியக் கலீபக கிளர்ச்சியாளர்கள் உமையா கலீபகத்தை தோற்கடித்தனர்.
- 1348- இத்தாலியின் பிரியூலி பகுதியைப் பெரும் நில நடுக்கம் தாக்கியதில், பெரும் சேதம் ஏற்பட்டது.
- 1498- போர்த்துக்கீச நாடுகாண்பயணி வாஸ்கோடகாமா தென்கிழக்கு ஆபிரிக்காவை அடைந்தார்.
- 1533- இங்கிலாந்தின் எட்டாம் ஹென்றி ஆன் பொலினைத் தனது இரண்டாவது மனைவியாக இரகசியத் திருமணம் புரிந்து கொண்டார்.
- 1755- மாஸ்கோ பல்கலைக்கழகம் ஆரம்பிக்கப்பட்டது.
- 1791- பிரித்தானிய நாடாளுமன்றம் 1791 அரசமைப்பு சட்டத்தை நிறைவேற்றியது. இதன்படி, பழைய கியூபெக் மாகாணம் மேல் கனடா, கீழ் கனடா என இரண்டாகப் பிரிக்கப்பட்டது.
- 1881- தோமஸ் ஆல்வா எடிசன், அலெக்சாண்டர் கிரஹாம் பெல் ஆகியோர் இணைந்து ஓரியண்டல் டெலிபோன் கம்பெனி என்ற நிறுவனத்தை ஆரம்பித்தனர்.
- 1882- வேல்ஸ் இளவரசர்கள் அல்பேர்ட் விக்டர், ஜோர்ஜ் ஆகியோர் கொழும்பு வந்து சேர்ந்தனர்.
- 1890- நெல்லி பிளை தனது 72 நாள் உலகம் சுற்றும் பயணத்தை வெற்றிகரமாக முடித்துக் கொண்டார்.
- 1918- உக்ரேன் மக்கள் போல்ஷெவிக் ரஷ்யாவிடம் இருந்து விடுதலையை அறிவித்தனர்.
- 1924- முதலாவது குளிர்கால ஒலிம்பிக் விளையாட்டுக்கள் பிரான்சில் ஷாமனீ என்ற இடத்தில் ஆரம்பமானது.
- 1942- இரண்டாம் உலகப் போர்: தாய்லாந்து ஐக்கிய அமெரிக்கா மீதும் ஐக்கிய இராச்சியம் மீதும் போரை அறிவித்தது.
- 1971- உகண்டாவில் இடம்பெற்ற இராணுவப் புரட்சியில் மில்ட்டன் ஒபோட் அதிபர் பதவியில் இருந்து அகற்றப்பட்டு இடி அமீன் தலைவரானார்.
- 1993- கொட்டியாரக் குடாக் கடலில் மூதூர்-திருகோணமலை நகரங்களுக்கு இடையிலான சேவையில் ஈடுபட்டு வந்த பயணிகள் படகு ஒன்று கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் நூற்றுக்கும் அதிகமானோர் மூழ்கி இறந்தனர்.
- 1994- நாசாவின் கிளமென்டைன் விண்கலம் சந்திரனை நோக்கி ஏவப்பட்டது.
- 1998- கண்டியின் தலதா மாளிகையில் இடம்பெற்ற தற்கொலைத் தாக்குதலில் 8 பேர் கொல்லப்பட்டு 25 பேர் படுகாயமடைந்தனர்.
- 1999- மேற்கு கொலம்பியாவில் இடம்பெற்ற 6.0 ரிக்டர் அளவு நிலநடுக்கத்தில் 1000 பேர் வரையில் கொல்லப்பட்டனர்.
- 2002- விக்கிப்பீடியா மீடியாவிக்கி மென்பொருளுக்கு மாறியது.

**பிறப்புகள்**

- 1627- இராபாட் வில்லியம் பாயில், அயர்லாந்து-ஆங்கிலேய வேதியியலாளர், இயற்பியலாளர் (இ. 1691)
- 1920- பித்துக்குளி முருகதாஸ், பக்திப் பாடகர் (இ. 2015)
- 1933- சில்லையூர் செல்வராசன், ஈழத்து எழுத்தாளர், கவிஞர், நடிகர் (இ. 1995)
- 1941- செங்கை ஆழியான், ஈழத்து எழுத்தாளர்
- 1957- ஜெனிபர் லீவிஸ், அமெரிக்க நடிகை
- 1958- கவிதா கிருஷ்ணமூர்த்தி, இந்தியப் பாடகி
- 1967- ஊர்வசி, தென்னிந்தியத் திரைப்பட நடிகை
- 1980- சேவியர் எர்னாண்டசு, எசுப்பானியக் கால்பந்து வீரர்
- 1981- அலீசியா கீசு, அமெரிக்கப் பாடகி, நடிகை

**இறப்புகள்**

- 1947- அல் கபோன், அமெரிக்கக் கடத்தல்காரர் (பி. 1899)
- 1983-என். எம். ஆர். சுப்பராமன், இந்திய அரசியல் வாதி (பி. 1905)
- 1988- திருவாசக சுவாமிகள், ஈழத்து சைவத் துறவி, சொற்பொழிவாளர் (பி. 1904)
- 2001- அலெக்சாந்தர் சுதக்கோவ், சோவியத் ரஷ்ய இயற்பியலாளர் (பி. 1921)
- 2005- பிலிப் ஜான்சன், அமெரிக்கக் கட்டிடக் கலைஞர், படிகப் பேராலயம்;படிகப் பேராலயத்தை வடிவமைத்தவர் (பி. 1906)
- 2014- எம். உதயகுமார், இலங்கைத் தமிழ்த் திரைப்பட, நாடக நடிகர் (பி. 1938)
- 2016- கல்பனா, மலையாள நடிகை (பி. 1965)

**சிறப்பு நாள்**

- தேசிய ஊட்டச்சத்து நாள் (இந்தோனேசியா)
- தேசிய வாக்காளர் நாள் (இந்தியா)
- 2011 புரட்சி நாள் (எகிப்து)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | கிளிநொச்சி | மருதனார்மடம் |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 100 | 100 | 100 | 100 |
| உருளைக்கிழங்கு | 60 | 100 | 60 | 60 |
| பச்சைமிளகாய் | 100 | 100 | 160 | 100 |
| தக்காளி | 80 | 40 | 80 | 80 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 20 | 40 | 40 |
| கோவா | 50 | 40 | 60 | 80 |
| கரட் | 80 | 80 | 160 | 100 |
| பூசணி | 50 | 40 | 80 | 50 |
| புடோல் | 60 | 40 | 80 | 100 |
| வாழைக்காய் | 80 | 40 | 100 | 80 |
| சின்ன வெங்காயம் | 150 | 300 | 240 | 300 |
| பெரிய வெங்காயம் | 140 | 100 | 150 | 180 |
| பாகற்காய் | 200 | 100 | 200 | 200 |
| வெண்டிக்காய் | 140 | 100 | 120 | 140 |
| கருணைக் கிழங்கு | 60 | 100 | 80 | 50 |
| பயற்றங்காய் | 180 | 100 | 120 | 180 |
| லீக்ஸ் | 200 | 200 | 240 | 200 |
| பீற்றூட் | 60 | 100 | 100 | 80 |
| கறிமிளகாய் | 200 | 100 | 200 | 200 |
| முருங்கைக்காய் | 800 | 1200 | 600 | 1400 |
| போஞ்சி | 80 | 100 | 120 | 100 |
| கத்தரிதம்புள்ள | 80 | 50 | 80 | 100 |
| கீரை-1பிடி | 30 | 20 | 40 | 20 |
| தேசிக்காய் | 30 | 20 | 60 | 60 |
| தேங்காய் (ஒன்று) | 90 | 80-130 | 75 | 100 |
| இராசவள்ளி | 160 | 250 | 200 | 150 |
| வெங்காயப்பூ | 150 | 120 | 200 | 180 |
| முள்ளங்கி | 60 | 100 | 80 | 80 |
| பொன்னாங்காணி | 40 | 40 | 40 | 25 |
| வல்லாரை | 15 | 20 | 20 | 30 |
| ஈரப்பலா | 80 | 50 | 80 | 80 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விண்ணுற அடுக்கிய விறகின் வெந்தணல்
நுண்ணிய தீ புகில் ஒன்றுமில்லையாம்...
~ திருநாவுக்கரசர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## தமிழ் மக்களை வாழவைக்கப்போகும் உள்ளூராட்சி சபைத் தேர்தல்

தமிழகத்தில் குன்னக்குடி வைத்தியநாதன் என்றொரு உலகறிந்த கலைஞர் இருந்தார்.

வயலின் வாசிப்பதில் அவருக்கு இணை வேறுயாருமிலர் என்று கூறுமளவில் குன்னக்குடி வைத்தியநாதன் மிகப்பிரபல்யம் பெற்றிருந்தார்.

பக்கவாத்தியக் கருவியான வயலினை பக்கா வாத்தியமாக மாற்றிய பெருமை அவரையே சாரும்.

பொதுவில் பாட்டிசை மேடைகளில் பக்க வாத்தியமாக இசைக்கப்படுகின்ற வயலின் கருவியை முதன்மையாக்கி, அதற்கு பக்கவாத்தியங்களை இசைக்கச் செய்த பெருமை வைத்தியநாதனையே சாரும்.

அட வயலின் மேதை குன்னக்குடி வைத்தியநாதனுக்கும் எங்கள் நாட்டில் நடக்கும் உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்கும் என்ன தொடர்பு என்று நீங்கள் யாரேனும் கேட்டால், அதற்கு விளக்கமும் உண்டு.

இலங்கையில் நடைபெறுகின்ற தேர்தல்களில் உள்ளூராட்சி சபைத் தேர்தல் என்பது ஒரு பக்கவாத்தியத் தேர்தல்.

இந்தப் பக்கவாத்தியத்தால் உரிமைசார் விடயங்களைத் தமிழ் மக்கள் பெற்றுவிட முடியாதென்பது தெரிந்த உண்மை.

பிரதேசம் சார்ந்த சுகாதாரம், போக்குவரத்துப் பாதை, தெருமின்விளக்கு, குடிநீர் உள்ளிட்ட பிரதேச ரீதியான வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க முடியுமேயன்றி,

இந்த நாட்டின் ஜனாதிபதியுடன் பேச்சு நடத்தி அரசியல் கைதிகளை விடுவிக்கவோ அன்றி காணாமல்போனவர்களின் விடயம் தொடர்பில் நடவடிக்கை எடுக்கவோ முடியாது.

அதனால்தான் உள்ளூராட்சி சபைத் தேர்தல் என்பது ஒரு பக்கவாத்தியத் தேர்தல் என்று கூறினோம்.

எனினும் பக்கவாத்தியத் தேர்தலான உள்ளூராட்சி சபைத் தேர்தலை தமிழ் மக்கள் நினைத்தால் ஒரு பக்காவாத்தியத் தேர்தலாக மாற்ற முடியும். இதைக் கூறுவதற்காகவே குன்னக்குடி வைத்தியநாதனை இங்கு குறிப்பிட்டோம்.

ஆம்; தமிழ் மக்கள் நினைத்தால், மனம் வைத்தால் உள்ளூராட்சி சபைத் தேர்தல் மூலமாக இந்த நாட்டில் தமிழ் மக்கள் யார் என்பதை நிரூபிக்க முடியும்.

தமிழ் மக்களைப் பொறுத்தவரை இன்று அவர்கள் அரசுக்கு எதிராகவும் தமிழ் அரசியல் தலைமைக்கு எதிராகவும் போராட வேண்டியவர்களாக உள்ளனர்.

தமிழினத்தின் இருப்புக்காக இந்த நாட்டில் நடந்த அத்தனை தியாகங்களையும் கொச்சைப்படுத்துமளவில் தமிழ் அரசியல் தலைமை நடந்து கொள்கிறது.

எனவே தமிழ் அரசியலில் ஒரு பெரும் மாற்றத்தை ஏற்படுத்துவதற்கு-தமிழ் அரசியலில் ஒரு பெரும் திருத்தத்தை செய்வதற்கு உள்ளூராட்சி சபைத் தேர்தலை தமிழ் மக்கள் பயன்படுத்துவார்களாக இருந்தால், பக்கவாத்தியத் தேர்தல் பக்காவாத்தியத் தேர்தலாக மாறும்.

இந்தக் கட்சியால்தான் எம் இனம் உய்வு பெறும் என்றில்லாமல் அவர்களுக்குச் சந்தர்ப்பம் கொடுத்துள்ளோம். இனி இவர்களுக்கும் ஒரு சந்தர்ப்பத்தைக் கொடுத்துப் பார்ப்போம் என்று முடிவு செய்து, வாக்கு எனும் ஜனநாயக ஆயுதத்தை மக்கள் பிரயோகிப்பார்களாயின் ஒவ்வொரு கட்சித் தலைமைகளும் தங்களைத் திருத்தவும் மக்களுக்குச் சேவையாற்ற வேண்டும் என்ற முடிவுக்கு வரவும் வழிவகுக்கும் என்பது சத்தியம்.

### கர்ப்பிணிப் பெண் படுகொலை வழக்கு

# குற்றப் புலனாய்வுப் பிரிவுக்கு வழக்கினை மாற்ற ஊர்காவற்றுறை நீதிமன்றம் உத்தரவு

(யாழ்ப்பாணம்)

ஊர்காவற்றுறை கரம்பொன் பிரதேசத்தில் கர்ப்பிணி பெண்ணொருவரை கொடூரமாக கொலை செய்த சம்பவமானது இடம்பெற்று ஒரு வருடம் கடந்து விட்ட நிலையிலேயே வழக்கின் விசாரணையினை குற்றப் புலனாய்வு பிரிவுக்கு மாற்றுவதற்கு ஊர்காவற்றுறை நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

நேற்றைய தினம் குறித்த வழக்கானது ஊர்காவற்றுறை நீதவான் நீதிமன்ற நீதவான் ஏ.எம்.எம்.றியால் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப் பட்டபோதே இவ் உத்தரவானது நீதவானால் பிறப்பிக்கப்பட்டது.

நேற்றைய வழக்கு விசாரணையின்போது சந்தேக நபர்கள் சார்பாக சட்டத்தரணி திருக்குமார் முன்னிலையாகியிருந்தார்.

இதன்போது குறித்த வழக்கில் பொலிஸார் மந்த கதியிலேயே விசாரணைகளை மேற்கொள்வதாகவும், இச் சம்பவம் தொடர்பான மரபணு அறிக்கையை பெற்றுக் கொள்வதில் தாமதப்படுத்துவதாகவும் குறிப்பிட்டிருந்தார்.

மேலும் சந்தேகநபர்கள் சம்பவம் இடம்பெறும்போது சம்பவ இடத்தில் இருந்தார்கள் என்பது தொடர்பான வீடியோ காணொலிகளை மன்றுககு சமர்ப்பித்த போதும் அது தொடர்பான புகைப் படங்களை இன்னமும் சமர்ப்பிக்கவில்லை எனவும் மன்றில் சுட்டிக்காட்டியிருந்தார்.

இதன்போது பொலிஸார் தாம் இவ் வழக்கு தொடர்பான மரபணு அறிக்கையை பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கையை மேற்கொள்வதாகவும் குறிப்பிட்டிருந்தனர்.

இதனையடுத்து இரு தரப்பு வாதங்களையும் செவிமடுத்த நீதிபதி குறித்த வழக்கின் விசாரணையை குற்றப் புலனாய்வு பிரிவுக்கு பாரப்படுத்த நடவடிக்கைக்கு உத்தரவிட்டு கட்டளை பிறப்பித்ததுடன் இவ் வழக்கின் விசாரணையை எதிர்வரும் 07ஆம் திகதி வரை ஒத்தி வைக்கவும் அதுவரை இரு சந்தேகநபர்களையும் விளக்க மறியலில் வைக்கவும் நீதவான் உத்தரவிட்டார்.

இதேவேளை குறித்த கர்ப்பிணி பெண்ணான ஹம்சிகா கொலை செய்யப்பட்டு இன்றுடன் ஓராண்டு நிறைவடைந்துள்ள போதும் அக் கொலைக்கான நீதி இன்னமும் கிடைக்கப்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கதாகும். (ம-4)

## மணிவிழாவும் நூல் வெளியீடும்

(யாழ்ப்பாணம்)

திருமதி குயீன் ஜெஸீலி கலாமணி அவர்களின் மணிவிழாவும் நூல் வெளியீட்டு விழாவும் இன்று காலை 10.30 மணிக்கு அல்வாய் வரசித்தி விநாயகர் உடனுறை காத்தவராயர் ஆலயத்தில் இடம்பெறும்.

ஓய்வுநிலை திட்டப் பணிப்பாளர் திருமதி வ.பர்வதாமணி தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் வாழ்த்துரைகளை பா.தனபாலன், திருமதி கி.அன்னலட்சுமி ஆகியோர் வழங்குவர்.

இந்நிகழ்வில் திருமதி குயீன் ஜெஸீலி கலாமணி அவர்களால் எழுதப்பட்ட, ஈழத்து இசை நாடக மரபு வளர்ச்சியில் அண்ணாவியார் எஸ்.தம்பிஐயா என்ற ஆய்வு நூலும் வெளியிட்டு வைக்கப்படும்.

நூல் வெளியீட்டுரையை பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜாவும் க.திலகநாதனும் ஆற்றவுள்ளனர்.

தொடர்ந்து யாழ்ப்பாணம் நாட்டார் வழக்கியல் கழகத்தின் இசை நாடகப் பாடல்களும் இடம்பெறும். (ம)

## யா/பத்திரிசியார் கல்லூரிக்கு புதிய அதிபர் நியமனம்

புனித பத்திரிசியார் கல்லூரியின் 24ஆவது அதிபராக அருட்பணி அன்ரன் பீற்றர் திருமகன் இன்று வியாழக்கிழமை தனது கடமைகளை பொறுப்பேற்கின்றார். அவருக்கான வரவேற்பு நிகழ்வு இன்று கல்லூரி மண்டபத்தில் நடைபெறும்.

ஏற்கெனவே அதிபராக இருந்த அருட்பணி ஜெறோ செல்வநாயகம் அவர்கள் நேற்றுடன் ஓய்வு பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம)

## தாழையடி கடற்பரப்பில் 110 கிலோ கஞ்சா மீட்பு

(யாழ்ப்பாணம்)

வடக்கு கடற்பரப்பில் நேற்று முன்தினம் மேற்கொள்ளப்பட்ட ரோந்து நடவடிக்கையின் போது 110 கிலோ கேரள கஞ்சா கைப்பற்றப்பட்டுள்ளதாக வட மாகாண கடற்படை கட்டளை தலைமையகம் தெரிவித்துள்ளது.

நேற்று முன்தினம்மாலை 5 மணியளவில் கேரள கஞ்சா கடத்தல் நடவடிக்கை இடம்பெறவுள்ளதாக கடற்படைக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலொன்றினையடுத்தே விசேட ரோந்து நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டது.

இதன்போதே மருதங்கேணி, தாழையடி கடற்பரப்பில் குறித்த கஞ்சா பொதிகளானது கைப்பற்றப்பட்டுள்ளன.

கடலில் மிதந்து கொண்டிருந்த நிலையிலேயே இக் கஞ்சா பொதிகளானது மீட்கப்பட்டிருந்ததுடன் அவை சுமார் 50 பார்சல்களாக பொலித்தீனால் சுற்றப்பட்ட நிலையில் காணப்பட்டதாகவும், இது தொடர்பாக எவரும் கைது செய்யப்படவில்லை எனவும் வட மாகாண கடற்படையானது அறிவித்துள்ளது.

மேலும் மீட்கப்பட்ட கேரள கஞ்சா பொதிகள் அனைத்தும் காங்கேசன்துறை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள நிலையில் இது தொடர்பான மேலதிக விசாரணைகளை காங்கேசன்துறை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-4)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை வெள்ளி காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணி வரை கிளிநொச்சி பிர தேசத்தில் வற்றாப்பளை, முள்ளியவளை, தண்ணீரூற்று, குமுழமுனை, மாஞ்சோலை வைத்தியசாலை, முல்லைததீவு விமானப் படை-I மற்றும் II, முல்லைத்தீவு 59வது படைப் பிரிவு (14ESR-01மற்றும் 14 ESR-02), SFHQ வற்றாப்பளை, குமுழமுனை பலநோக்கு கூட்டுறவுச்சங்க அரிசி ஆலை, 12 VIR, இராணுவ முகாம், 16 ESR, இராணுவ முகாம் ஆகிய இடங்களிலும் வவுனியா பிரதேசத்தில் கோவில குளம், ஆச்சிபுரம், சமணன் குளம், மகாமயிலங்குளம், மருதநகர், எல்லப்பமருதங்குளம், பெரியகூமரசங்குளம், ஆசிகுளம், சிதம்பரபுரம் ஆகிய பிரதேசங்களிலும் மின் தடைப்படும். (இ-9)

## அன்றாட வாழ்வில் ஐஸ்வர்யம் அதிகரிப்பதற்கான ஆசாரங்கள்




### முடியை வெளியில் போடக்கூடாது ஏன்?

தலைவாறும் போது உதிரும் முடியை வாசலிலோ, தோட்டத்திலோ போடக்கூடாது என்று பழைய காலத்திலிருந்தே கூறி வருகிறார்கள். முதலாவது முடி மிக லேசாக இருப்பதால் அது காற்றில் பறந்து வீட்டிற்குள் வருவதற்கும், உணவுப் பதார்த்தங்களில் படுவதற்கும் வாய்ப்புள்ளது.

தோட்டங்களில் போடப்படும் முடி செடி, கொடிகளில் சுற்றி நிற்கும். அந்தச் செடி கொடிகளை பசுக்கள் மேயும் போது அதிலுள்ள முடி பசுவின் வயிற்றுக்குள் சென்று உபாதைகளை ஏற்படுத்த வாய்ப்புண்டு. அதே போல் நாம் உண்ணும் உணவில் பட்டு தெரியாமல் நாம் அந்த [illegible] வயிற்றில் கோளாறுகள் ஏற்படும். (தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சத்திய தரிசனம்



### தமிழில் ஒரு அருமையான சொல்

❖ நற்பண்புகள் கொண்ட தூய்மையான வாழ்க்கை மிகவும் முக்கியமானது. இறைப் பணியாக நமது வாழ்க்கையை மேற்கொண்டு தன்னம்பிக்கையுடன் செயற்பட வேண்டும்.

❖ பஞ்ச பூதங்களாலான இயற்கை இறைவனின் சொரூபமாக விளங்குகிறது. இதன் தூய்மையை கெடுத்தால் நம்முடைய ஐம்புலன்களின் தூய்மை பாழடையும். மனமும் மாசடையும். இயற்கையைப் பாதுகாத்தால் இறைவனை வழிபட்டவர்களாக மாறுவோம். இதுவே நாம் முன்னேற வழி.

❖ கடவுளிடம் "மன அமைதியைக் கொடு" என்று வேண்டிக் கொள்ளுங்கள். அதுவே நியாயமான பிரார்த்தனை.

❖ நாக்கின் ருசி, நாக்கின் பேச்சு இரண்டையும் கட்டுப்படுத்துவதைப் பொறுத்துத் தான் உங்கள் வாழ்க்கை இருக்கிறது. இதைச் சரியாகச் செய்தால் பிற பலன்கள் தாமாகவே வந்து சேரும்.

❖ தமிழில் "அருள்" என்று ஒரு சொல் உள்ளது. அது சமஸ்கிருதத்தில் "தர்மம்" என்ற சொல்லுக்கு இணையானது. வேறு எந்த மொழியிலும் இப்படி ஒரு சொல் இல்லை. தர்மத்தை நாம் காப்பாற்றினால் அது நம்மை காப்பாற்றும்.

# உலகக் கிண்ணம் இலங்கையில்



உலகக் கிண்ண வரலாற்றில் முதல் தடவையாக உலகக்கிண்ணத்துடன் உலகக்கிண்ண குழுவினர் நேற்று அதிகாலை கொழும்பை வந்தடைந்துள்ளனர். கொழும்பை வந்தடைந்த குறித்த குழுவினரை இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனத்தின் உப தலைவரும், வடமாகாண உதைபந்தாட்ட அபிவிருத்தித் தலைவருமான ஞானப்பிரகாசம் அருமை ஜெராட் தலைமையில் வரவேற்றுள்ளனர். உலகக்கிண்ண வரலாற்றில் முதல் தடவையாக உலகக்கிண்ணத்துடன் உலகக்கிண்ண குழுவினர் இலங்கை வந்துள்ளமை குறிப்பிடத்தக்க விடயமாகும்.

(பனிக்கன்குளம் செய்தியாளர்)

## இறுதிக்குச் செல்லுமா இலங்கை; வாழ்வா, சாவா? இன்றைய போட்டி



சிம்பாவே அணியை பங்களாதேஷ் வீழ்த்தியுள்ளதால், இலங்கை அணி இறுதிப் போட்டிக்குள் நுழைவதற்கு பிரகாசமான வாய்ப்பு உள்ளது.

பங்களாதேஷ், சிம்பாவே, இலங்கை அணிகள் விளையாடும் முத்தரப்பு தொடர் பங்களாதேஷில் நடைபெற்று வருகிறது.

இதில் பங்களாதேஷ்-சிம்பாவே அணிகள் மோதிய போட்டியில் பங்களாதேஷ் அணி 91 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

இந்த வெற்றியின் மூலம் பங்களாதேஷ் அணி இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றுள்ளது. அதேசமயம் இலங்கை அணி இன்று பங்களாதேஷ் அணியுடன் மோதவுள்ளது.

அப்போட்டியில் இலங்கை அணி வெற்றி பெற்றால் இறுதிப் போட்டிக்குள் நுழையும், அதுவே தோல்வியடைந்துவிட்டால் சிம்பாவே மற்றும் இலங்கை அணிகள் ஓட்ட ரேட் அடிப்படையில் இறுதிப் போட்டிக்கு தகுதி பெறும்.

மேலும் இலங்கை, பங்களாதேஷ் அணியுடன் அதிக ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோல்வியடைந்து விட்டால் போட்டியிலிருந்து வெளியேற வேண்டிய சூழ்நிலை ஏற்படும், அதன்பின் சிம்பாவே இறுதிப் போட்டிக்கு தகுதி பெறும் என்பதால் தற்போது இத்தொடர் பரபரப்பான கட்டத்தை எட்டியுள்ளது. (க)

## டோனி போல் வருமா?



நியூசிலாந்து சென்றுள்ள பாகிஸ்தான் அணி நியூசிலாந்து அணியுடனான ஐந்து ஒருநாள் போட்டிகள் கொண்ட தொடரை முழுமையாக இழந்த நிலையில், தற்போது இரு அணிகள் இடையேயான இருபது-20 போட்டிகள் கொண்ட தொடர் நடைபெற்று வருகிறது.

இதில் நேற்று முன்தினம் நடைபெற்ற போட்டியில் நியூசிலாந்து அணி 7 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

இந்நிலையில் இப்போட்டியின் போது பாகிஸ்தான் அணி வீரரான சர்பராஸ் கான் சர்பராஸ் அஹமத் துடுப்பெடுத்தாடிக் கொண்டிருந்த போது, பந்தானது சர்பராஸின் மட்டையில் படாமல் விக்கெட் கீப்பரிடம் சென்றது.

இதனால் ஸ்டெம்பிங்கில் இருந்து தப்பிக்க முன்பு ஒருமுறை இந்திய அணியின் அதிரடி வீரர் டோனி செய்ததைப் போன்று, நின்ற இடத்தில் இருந்து தனது கால்களை மட்டும் அகலமாக நீட்டினார். ஆனால் இதில் சர்பராஸ் கான் ஆட்டமிழந்தார்.

இதைக் கண்ட இணையவாசிகள் எல்லாரும் டோனி போல் வந்துவிடுமா என்று கிண்டல் அடித்து வருகின்றனர். (க)

## ஹோலியை கேள்வி கேட்க இந்தியாவில் ஆளில்லை




விராட் ஹோலி களத்தில் விளையாடும் போது அவர் செய்யும் தவறை நேரடியாக அவரிடமே தெரிவிக்கும் தைரியம் அணியில் யாருக்கும் இல்லை என வீரேந்திர ஷேவாக் காட்டமாக விமர்சித்துள்ளார்.

களத்தில் ஹோலி செய்யும் தவறை சுட்டிக் காட்டும் ஒரு நபர் இந்திய அணியில் இருக்க வேண்டும்.

அனைத்து அணிகளிலும் தலைவருக்கு அறிவுரை சொல்ல நான்கு அல்லது ஐந்து வீரர்கள் வரை இருப்பார்கள், ஆனால் அதுபோன்ற ஒரு நிலை இந்திய அணியில் இல்லை என்பதே உண்மை.

ஹோலியின் அணித் தேர்வை கேள்வி கேட்க எந்த வீரரும் முன்வருவதில்லை, ஒருவேளை ஹோலி அளவுக்கு அவர்களின் விளையாட்டு தரம் இல்லாததும் ஒரு வகை காரணமாக இருக்கலாம் என தெரிவித்துள்ளார்.

மேலும் விராட் ஹோலி ஒரு சிறந்த வீரர், எந்த சூழ்நிலையிலும் நன்றாக விளையாடக் கூடியவர். ஆனால் அவருக்கு ஈடு கொடுக்கும் திறமை இந்திய அணியில் யாருக்கும் இல்லாததால் தலைவனாக ஹோலி பாதிப்புகளை எதிர் கொள்ள நேரிடும் எனவும் தெரிவித்துள்ளார். (க)

## இறுதிப் போட்டியில் மோதும் கொற்றாவத்தை றேஞ்சர்ஸ் உடுப்பிட்டி நவஜீவன்ஸ் அணிகள்

ஸ்ரீ அம்பாள் கால்பந்தாட்டச் சுற்றுப்போட்டியின் இறுதிப்போட்டியில் கொற்றாவத்தை றேஞ்சர்ஸ் அணியும், உடுப்பிட்டி நவஜீவன்ஸ் அணியும் மோதவுள்ளது.

கரணவாய் வடக்கு நாச்சிமார் கோவிலடி ஸ்ரீ அம்பாள் விளையாட்டுக் கழகம், தமது 50 ஆவது ஆண்டு நிறைவையொட்டி வடமராட்சி கால்பந்தாட்ட லீக்கின் அனுசரணையுடன், வடமராட்சியின் சவால் வெற்றிக்கிண்ணத்துக்கான அணிக்கு 7 பேர் கொண்ட கால்பந்தாட்டச் சுற்றுப்போட்டியொன்றை தமது விளையாட்டுக்கழக மைதானத்தில் நடத்தி வருகின்றது.

20 விளையாட்டுக் கழகங்கள் பங்குபற்றிய, இந்தச் சுற்றுப்போட்டியில் முதற் சுற்று ஆட்டங்கள் விலகல் முறையில் நடைபெற்றது.

முதற் சுற்றிலிருந்து 8 அணிகள் தெரிவு செய்யப்பட்டு, இரண்டாம் சுற்று ஆட்டங்கள் லீக் முறையில் நடைபெற்றது.

தொடர்ந்து அரையிறுதிக்கு அணிகள் தெரிவு செய்யப்பட்டன. அந்த வகையில் நவிண்டில் கலைமதி, வதிரி டயமன்ஸ், கொற்றாவத்தை றேஞ்சர்ஸ் மற்றும் உடுப்பிட்டி நவஜீவன்ஸ் அணிகள் தகுதி பெற்றன.

22 ஆம் திகதி நடைபெற்ற முதலாவது அரையிறுதியாட்டத்தில் நவிண்டில் கலைமதி அணியை எதிர்த்து உடுப்பிட்டி நவஜீவன்ஸ் அணி மோதியது.

ஆட்டநேர முடிவில் இரண்டு அணிகளும் எவ்வித கோல்களையும் பெற்றிருக்கவில்லை.

தொடர்ந்து வெற்றியாளரைத் தீர்மானிக்க சமநிலை தவிர்ப்பு உதை நடத்தப்பட்டு, அதில் நவஜீவன்ஸ் அணி 05:04 என்ற கோல்கள் கணக்கில் வெற்றி பெற்றது.

23 ஆம் திகதி நடைபெற்ற இரண்டாவது அரையிறுதியாட்டத்தில் வதிரி டயமன்ஸ் அணியை எதிர்த்து கொற்றாவத்தை றேஞ்சர்ஸ் அணி மோதியது.

இதில் றேஞ்சர்ஸ் அணி, 02:01 என்ற கோல்கள் கணக்கில் வென்றது. (க-26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கடற்படையின் கனரக...

மாணவியின் மாமனார் படுகாயமடைந்துள்ளார்

புங்குடுதீவு 12ஆம் வட்டாரத்தில் வசிக்கும். புங்குடுதீவு ரோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலையில் தரம் 4 இல் கல்வி கற்றுவரும் மாணவியான திருலங்கன் கேசனா (வயது 9) என்ற சிறுமியே மேற்படி உயிரிழந்ததுடன் அதே இடத்தை சேர்ந்த சிறுமியின் மாமனாரான கதிரேசன் சசேஸ்வரன் (வயது 38) என்பவர் படுகாயமடைந்து யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார்.

மேற்படி சம்பவம் தொடர்பாக தெரிய வருகையில், குறித்த சிறுமி பேருந்தில் பாடசாலைக்கு சென்று வருபவர். வழமை போன்று பாடசாலைக்கு செல்வதற்காக நேற்று காலை 7 மணி அளவில் புங்குடுதீவு கதிரேசன் வித்தியாலயத்துக்கு அருகில் பேருந்துக்காக காத்திருந்துள்ளார்.

அப்போது சிறுமியின் மாமனாரான சசேஸ்வரன் தனது மகளை புங்குடுதீவு கதிரேசன் வித்தியாலயத்தில் இறக்கி விட்டு செல்ல முற்பட்ட வேளை, குறித்த சிறுமி அவரை இடைமறித்து. பேருந்தை காணவில்லை எனவும் தான் கற்கும் பாடசாலையில் தன்னை இறக்கிவிடுமாறு கோரியுள்ளார்.

அப்போது மாமனார் குறித்த சிறுமியை தனது மோட்டார் சைக்கிளில் ஏற்றிக்கொண்டு பாடசாலை நோக்கி சென்றுள்ளார். அப்போது புங்குடுதீவு நாற்சந்திக்கு அருகில் கடற்படையினரின் கனரக வாகனம் ஒன்று அதிவேகமாக தழம்பிய நிலையில் வந்துள்ளது.

அதனை அவதானித்த சசேஸ்வரன் வழிவிடுவதற்காக தனது மோட்டார் சைக்கிளை ஓரமாக நிறுத்தியுள்ளார். அப்போது வேக கட்டுப்பாட்டை இழந்து கனரக வாகனம் நிறுத்தியிருந்த மோட்டார் சைக்கிளை வேகமாக மோதியது.

மோட்டர் சைக்கிளில் இருந்த சசேஸ்வரன் தூக்கி வீசப்பட்டதுடன், மோட்டார் சைகிளுடன் சிறுமியும் கனரக வாகனத்தின் சக்கரத்தில் சிக்குண்டு 10 மீற்றர் தூரத்துக்கு இழுத்து செல்லப்பட்டு விடுவிக்கப்பட்டதுடன், 15 மீற்றர் தூரத்தில் வாகனம் நிறுத்தப்பட்டுள்ளது.

உடனடியாக சம்பவ இடத்தில் இருந்த பொதுமக்கள் காயமடைந்த பாடசாலை மாணவியையும் அவரது மாமனாரையும் புங்குடுதீவு வைத்தியசாலைக்கு கொண்டு சென்றனர். அங்கு வைத்தியரோ தாதியோ கடமையில் இல்லாத காரணத்தினால் அங்கு இருந்த இரு சிற்றூழியர்கள் காயமடைந்தவர்களை அம்புலன்ஸ் மூலம் யாழ்.போதனா வைத்தியசாலைக்கு கொண்டு வந்து சேர்த்தனர்.

ஆனால் மாணவியை பரிசோதித்த வைத்தியர்கள் மாணவி உயிரிழந்துவிட்டதாக தெரிவித்திருந்தனர். படுகாயமடைந்த மாமனார், யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருவதுடன்நேற்று மாலையே நினைவுதிரும்பியிருந்தார்.

மேற்படி சம்பவம் இடம்பெற்ற இடத்தில் பொதுமக்கள் அதிகமாக நடமாடும் பகுதியாக இருப்பதுடன், இந்த வீதிகளில் யுத்தகாலத்தில் பயன்படுத்தும் கடற்படையினரின் கனரக வாகனங்கள் பயன்பாட்டில் இருப்பது பொதுமக்கள் மத்தியில் தொடர்ச்சியாக பாரிய அச்சத்தை ஏற்படுத்தி வருவதாகவும், இவ்வாறான வாகனங்கள் அப்பகுதியில் செல்வதற்கு தடை விதிக்கப்பட வேண்டும் எனவும் அப்பகுதி மக்கள் கடுமையான எதிர்ப்பை தெரிவித்ததுடன், புங்குடுதீவு வைத்தியசாலைக்கு வைத்தியர், தாதியர்கள் உரிய நேரததுக்கு கடமையில் இல்லை. இதனால் பொதுமக்கள் பாரிய சிரமத்தை எதிர்நோக்குவதாகவும் அப்பகுதி மக்கள் மரண விசாரணையின் போது விசனம் தெரிவித்திருந்தனர்

விபத்து தொடர்பான மரண விசாரணையை யாழ்.போதனா வைத்தியசாலை மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டிருந்தார். (ம-4,9)

## தண்டனை கொடுப்பது...

மத்திய வங்கி பிணைமுறி தொடர்பான விசாரணை ஆணைக்குழுவின் அறிக்கையில் சில பக்கங்களை காணவில்லையென சிலர் கூக்குரலிட்ட போதிலும் அதில் பக்கங்கள் எதுவும் குறைவடையவில்லை என ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

புறக்கோட்டை ஐக்கிய வியாபாரிகள் சங்கத்துடன் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நேற்றுமுன்தினம் பிற்பகல் சந்திப்பை நடத்தியிருந்தார்.

இந்த சந்திப்பில் கருத்து வெளியிட்ட ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, காலம் காலமாக கொழும்பு மாவட்ட மக்கள் ஐக்கிய தேசிய கட்சிக்கு வாக்களித்திருந்த போதிலும் அவர்களின் பிரச்சினைகள் தீர்த்துவைக்கப் பட வில்லை எனக் குறிப்பிட்டார்.

மத்திய வங்கி பிணைமுறி விவகாரம் தொடர்பில் கண்டறிவதற்காக நியமிக்கப்பட்ட ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு மற்றும் பாரிய ஊழல், மோசடிகள் குறித்து கண்டறிவதற்காக நியமிக்கப்பட்ட ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் நடவடிக்கைகள் சரியாகவும் முறையாகவும் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் அதன் அடுத்த கட்ட நடவடிக்கைகளை உரிய முறையில் மேற்கொள்ளும் பொறுப்பை ஜனாதிபதி என்றவகையிலும் தனிப்பட்ட முறையிலும் நான் ஏற்கிறேன். மத்திய வங்கி பிணைமுறி தொடர்பான விசாரணை ஆணைக்குழுவின் அறிக்கையில் சில பக்கங்களை காணவில்லையென சிலர் கூக்குரலிட்டபோதும் அதில் பக்கங்கள் எதுவும் குறைவடையவில்லை. சில சட்டரீதியான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் வரை அந்த ஆவணங்களின் இரகசியத்தன்மை பாதுகாக்கப்பட வேண்டியுள்ளது. அதனை வெளியிடுவதன் மூலம் குற்றம் சுமத்தப்பட்டிருப்பவர்கள் நன்மை அடைவதற்கு சந்தர்ப்பம் இருக்கின்றது. கொழும்பு மாவட்ட மக்கள் ஐக்கிய தேசியக் கட்சிக்கு பல வருட காலமாக வாக்களித்தபோதிலும் கடந்த 25 வருட காலப்பகுதியில் அம்மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு அம்மக்களின் வாக்குகளைப் பெற்றுக் கொண்ட எந்தவொரு மக்கள் பிரதிநிதியும் நடவடிக்கை எடுக்கவில்லை. அம்மக்கள் எதிர்நோக்கியிருக்கும் பிரச்சினைகளுக்கு அவர்களின் வாக்குகளைப் பெற்றுக்கொண்ட அனைவரும் வகைகூறவேண்டும். நகரத்தை அழகாகவும் தூய்மையாகவும் பேணுகின்ற அதேநேரம் மக்களின் வாழ்க்கையை அழகுபடுத்துவது மிகவும் அவசியமாகும். புறக்கோட்டை சிறிய மற்றும் நடுத்தர வியாபாரிகளினதும் நடைபாதை வியாபாரத்தில் ஈடுபட்டிருப்பவர்களினதும் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு முறையான நிகழ்ச்சித் திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்படும்.

இந்த சந்திப்பில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியுடன் இணைந்து கொண்ட ஐக்கிய தேசிய கட்சி உறுப்பினர்களுக்கான அங்கத்துவ அட்டைகள் ஜனாதிபதியினால் வழங்கி வைக்கப்பட்டன.

அமைச்சர் பைஸர் முஸ்தபா, சந்திம வீரக்கொடி உள்ளிட்ட மக்கள் பிரதிநிதிகளும், புறக்கோட்டை ஐக்கிய வியாபாரிகள் சங்கத்தின் செயலாளர் சம்பத் சமிந்த விதானகமகே உள்ளிட்ட பிரதிநிதிகளும் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர். (ம)

## வடக்கு-கிழக்கு...

யுத்தத்தினால் மிகவும் பாதிக்கப்பட்ட வடக்கு கிழக்கிலுள்ள மக்களுக்கு பல்வேறு பிரச்சினைகள் காணப்படுகின்றன. வடக்கு கிழக்கு மாகாணங்களில் இந்தோனேசியா முதலீடுகள் செய்வதனை உறுதிப்படுத்த வேண்டும் என்று இந்தோனேசிய ஜனாதிபதி ஜோக்கோ விடோடோவிடம் எதிர்க்கட்சித்தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

நீண்டகால யுத்தத்தின் காரணமாக பிராந்தியத்திலுள்ள ஏனைய நாடுகளுடன் ஒப்பிட்டுப் பார்க்கையில் இலங்கை மிகவும் பின்தங்கிய நிலையில் உள்ளது. இந்நிலையினை சீர்செய்வதற்கு சர்வதேசத்தின் உதவி தேவையாகவுள்ளது.

இதன்போது இந்தோனேசிய ஜனாதிபதி, இலங்கை நாட்டை கட்டியெழுப்பும் முயற்சிகளுக்கும் பொருளாதாரத்தை மேம்படுத்தும் முன்னெடுப்புகளுக்கும் மற்றும் வளங்களை கட்டியெழுப்பும் முயற்சிகளுக்கும் இந்தோனேசியா தொடர்ந்தும் ஆதரவு வழங்கும் என்றார்.

இலங்கைக்கு விஜயம் செய்துள்ள இந்தோனேசிய ஜனாதிபதி ஜோக்கோ விடோடோவிற்கும் எதிர்க்கட்சி தலைவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான இரா. சம்பந்தனுக்கும் இடையிலான சந்திப்பு நேற்று புதன்கிழமை கொழும்பில் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது. (ம)

## குழந்தை பிறந்து...

னையில் சத்திரசிகிச்சை மூலம் பெண் குழந்தை ஒன்றை பெற்றுள்ளார். குழந்தை பிறந்த நாளில் இருந்து இவர் பேச்சு மூச்சின்றி கோமா நிலையில் இருந்துள்ளார்.

குழந்தை பிறந்த அன்றைய தினமே இவரை யாழ் போதனா வைத்தியசாலைக்கு மேலதிக சிகிச்சைக்காக அனுப்பப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டு வந்தது நேற்றைய தினம் குறித்த பெண் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இவருக்கு இரத்த அழுத்தம் மற்றும் இருதய நோயால் இவர் உயிரிழந்துள்ளதாக மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்த மரண விசாரணையை யாழ்போதனா வைத்தியசாலை மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டிருந்தார். (ம-9)

## ஜனாதிபதியின் செயலா...

ப்பிட்டார்.

பிணைமுறி தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்ட ஜனாதிபதி ஆணைக்குழு சமர்ப்பித்த அறிக்கையின் ஒரு பகுதியே சபையில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதியின் செயலாளர் முன்கூட்டியே அறிவித்திருக்க வேண்டும் என தெரிவித்த அநுரகுமார திசாநாயக்க,

அறிவிக்காமைக்கான காரணத்தையும் அறிக்கையின் பிறிதொரு பகுதி குறித்தும் முழு விளக்கத்தினையும் அவர் தெரிவிக்க வேண்டும் என கேட்டுக்கொண்டார்.

இதன்போது சபையில் குறுக்கிட்ட நாடாளுமன்ற உறுப்பினர் தினேஷ் குணவர்தன, பிணைமுறி தொடர்பில் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையில் குறைபாடுகள் காணப்படுகின்றதா என்ற சந்தேகம் எழுந்துள்ளதாக குறிப்பிட்டார்.

குறித்த அறிக்கையானது 6 ஆயிரம் பக்கங்களை கொண்டது என ஜனாதிபதி தெரிவித்த போதிலும், எமக்கு கிடைக்கப்பெற்றுள்ள அறிக்கை 6 ஆயிரம் பக்கங்களை கொண்டதாக அமையவில்லை என சுட்டிக்காட்டினார்.

ஒரு பகுதியை மாத்திரம் பெற்றுக்கொடுத்து நாடாளுமன்றில் எவ்வாறு விவாதத்தினை நடத்துவது? குறித்த விவகாரம் தொடர்பில் விவாதத்தினை நடத்தினாலும் அது முழுமையான தீர்வினை பெற்றுத்தாராது எனவும் நாடாளுமன்ற உறுப்பினர் தினேஷ்குணவர்தன தெரிவித்தார்.

இதேவேளை, பிணை முறி தொடர்பிலான அறிக்கை தொடர்பில் முன்னாள் அமைச்சர்ரவி கருணாநாயக்க விசேட உரையொன்றை ஆற்றுவதற்கு முனைந்தபோது அதற்கு சபாநாயகர் எதிர்ப்பினை வெளிப்படுத்தினார்.

கிடைக்கப்பெற்ற அறிக்கையினை மன்றில் வாசிக்க சபாநாயகர் மறுப்பு தெரிவித்தமை கவலையளிப்பதாகவும், குறித்த அறிக்கையினை ஐந்தாயிரம் ரூபாவிற்கு தாம் பெற்றுக்கொண்டதாகவும், அதனை மன்றில் வாசிக்க அனுமதி மறுக்கப்பட்டதால் ஊடகங்களுக்கு பிரத்தியேகமாக வெளிபடுத்த போவதாகவும் ரவி கருணாநாயக்க கூறினார்.

நாடாளுமன்றில் தனக்கான சிறப்புரிமை மீறப்பட்டுள்ளதாகவும், சபாநாயகர் இவ்வாறு ஒரு தீர்மானத்தினை மேற்கொள்வார் என தாம் சற்றும் எதிர்பார்க்கவில்லை எனவும் குறிப்பிட்டார். (ம)

## பரபரப்படையும்...

மோதல்கள் இடம்பெற்று வருவதாகவும் தென்னிலங்கை அரசியல் அவதானிகள் குறிப்பிட்டுள்ளனர்.

தற்போதைய நிலையில் ஐக்கியதேசிய கட்சி மற்றும் சுதந்திரக்கட்சி ஆகியன இணைந்த ஐக்கிய அரசாங்கத்தில் குழப்பங்கள் ஏற்பட்டு வருவதாகவும், கூடிய விரைவில் சுதந்திரக்கட்சி தனித்து அரசாங்கம் ஒன்றினை அமைக்கும் திட்டங்கள் வகுக்கப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

அதேபோன்று ஐக்கிய தேசிய கட்சியில் உள்ள முக்கியஸ்தர்கள் சுதந்திரக்கட்சியில் இணைந்துகொள்ளவுள்ளதாகவும் செய்திகள் வெளிவருகின்றன.

அதனை உறுதிப்படுத்தும் வகையில், சுதந்திரக்கட்சியில் அங்கத்துவம் வகிக்கும் அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்க ஐக்கிய தேசிய கட்சி எதிர்வரும் காலங்களில் இரண்டாக பிளவுபட்டுப்போகும் வாய்ப்புகள் காணப்படுவதாக நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை ஊடகங்களுக்கு கருத்து வழங்கும் போது தெரிவித்துள்ளார்.

மேலும், ஐக்கிய தேசிய கட்சியைச் சேர்ந்தவர்களே அக்கட்சி மீது அதிருப்தி கொண்டுள்ளதாகவும் இதனால் பலர் அக்கட்சியில் இருந்து பிரிந்து சுதந்திரக்கட்சியில் இணைந்து கொள்ளவுள்ளதாகவும் எஸ்.பி கூறியுள்ளார்.

இதேவகைக் கருத்துகள் தொடர்ந்தும் தென்னிலங்கை அரசியல் வட்டாரத்தில் அடுததடுத்து முன்வைக்கப்பட்டு வருவதால் நல்லாட்சி அரசாங்கத்திற்குள் பிளவு ஏற்படுமா என்ற ஐயப்பாடுகள் எழுந்துள்ளன.

இதேவேளை, பிரதமர் ரணிலை நேரடியாகவும், மறைமுகமாகவும் தாக்கும் வகையில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் தற்போது கருத்துகளை முன்வைத்து வரும் காரணத்தினால் அவர்கள் இருவருக்கும் இடையிலான பனிப்போர் அதிகரித்து வருவதாக அரசியல் அவதானிகள் சுட்டிக்காட்டுகின்றனர். (ம)

## சிறுமியை வன்புணர்ந்த...

அந்த வழக்கிலும் அவருக்கான தண்டனையை யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகர் இளஞ்செழியன் தான் வழங்கினார். இந்தத் தண்டனை 2016 ஆம் ஆண்டு மார்ச் மாதம் வழங்கப்பட்டது.

யாழ்ப்பாணம் கோப்பாய் பொலிஸ் பிரிவைச் சேர்ந்த சிறுமி ஒருவர், அவரது பெற்றோரின் பாதுகாப்பிலிருந்து கடத்திச் சென்று கிளிநொச்சி அக்கராயன்குளம் பகுதியில் வைத்து வன்புணர்வுக்குட்படுத்தப்பட்டார்.

2012ஆம் ஆண்டு மார்ச் 8ஆம் திகதி இந்தச் சம்பவம் இடம்பெற்றது. சிறுமி வழங்கிய முறைப்பாட்டின் அடிப்படையில் இணுவிலைச் சேர்ந்த கிருஷ்ணபிள்ளை பிரேமன் கைது செய்யப்பட்டார். அவருக்கு எதிரான ஆரம்ப விசாரணைகள் மல்லாகம் நீதவான் நீதிமன்றில் இடம்பெற்று வழக்கு சட்டமா அதிபர் திணைக்களத்திடம் பாரப்படுத்தப்பட்டது. சந்தேகநபரும் பிணையில் விடுவிக்கப்பட்டார்.

சிறுமியைக் கடத்திச் சென்றமை மற்றும் வன்புணர்ந்தமை உள்ளிட்ட 4 குற்றச்சாட்டுகளை முன்வைத்து சந்தேகநபருக்கு எதிராக யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றில் சட்டமா அதிபர் திணைக்களத்தால் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது. இந்த வழக்கு நேற்று விசாரணைக்கு வந்தது. சிறைச்சாலை உத்தியோகத்தர்களால் எதிரி மன்றில் முற்படுத்தப்பட்டார். அவர் தன் மீதான 4 குற்றச்சாட்டுக்களையும் ஏற்றுக்கொண்டார்.

முதலாவது குற்றத்துக்கு 5 ஆண்டுகள் ஒத்திவைக்கப்பட்ட 2 ஆண்டுகள் கடூழியச் சிறைத்தண்டனை வழங்கப்படுகிறது. 3 ஆயிரம் ரூபா தண்டமும் விதிக்கப்படுகிறது. அதனை செலுத்தத் தவறின் ஒரு மாத சிறைத் தண்டனையை எதிரி அனுபவிக்கவேண்டும்.

இரண்டாவது, மூன்றாவது மற்றும் நான்காவது குற்றத்துக்கு 5 ஆண்டுகள் ஒத்திவைககப்பட்ட தலா 2 ஆண்டுகள் கடூழியச் சிறைத் தண்டனை வழங்கப்படுகிறது.

தலா 3 ஆயிரம் ரூபா தண்டமும் விதிக்கப்படுகிறது. அதனை செலுத்தத் தவறின் 3 மாத சிறைத் தண்டனையை எதிரி அனுபவிககவேண்டும். குற்றவாளிக்கான தண்டனையை ஏககாலத்தில் மன்று விதிக்கிறது. அதன்படி 5 ஆண்டுகள் ஒத்திவைக்கப்பட்ட 2 ஆண்டுகள் கடூழியச் சிறைத் தண்டனை விதிக்கப்படுகிறது. தண்டமாக 12 ஆயிரம் ரூபா செலுத்தவேண்டும். அதனைச் செலுத்தத் தவறின் 4 மாதங்கள் சிறைத் தண்டனையை அனுபவிக்கவேண்டும்.

மேலும் பாதிக்கப்பட்ட சிறுமிக்கு 30 ஆயிரம் ரூபா இழப்பீட்டை குற்றவாளி செலுத்த வேண்டும். அதனை வழங்காவிடின் 3 மாதங்கள் சிறைத் தண்டனையை அனுபவிக்க வேண்டும் என்று மேல் நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகர் இளஞ்செழியன் தண்டனைத் தீர்ப்பளித்தார். (ம-04,281)

## தமிழரசுக் கட்சி...

சபை வேட்பாளர் ஒருவரை வட்டுக்கோட்டை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

தமிழரசு கட்சி சார்பில் மானிப்பாய் பிரதேச சபைக்காக போட்டியிடுகின்ற வேட்பாளர் ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார். குறித்த வேட்பாளர் வடக்கு மாகாண மகளிர் விவகார அமைச்சர் திருமதி அனந்தி சசிதரனை முகநூலில் அவதூறாக விமர்சித்து வந்துள்ளார்.

இந்த நிலையில் மேற்படி வேட்பாளர் தனது பெயருக்கு களங்கம் ஏற்படுத்துவதாக மானிப்பாய் பொலிஸ் நிலையத்தில் அமைச்சர் அனந்தி சசிதரன் முறைப்பாடொன்றை பதிவு செய்திருந்தார். இந்த நிலையிலேயே நேற்றுக் காலை குறித்த வேட்பாளரை மானிப்பாய் பொலிஸார் பொலிஸ் நிலையத்திற்கு அழைத்து வாக்குமூலம் ஒன்றை பதிவு செய்துள்ளனர்.

இது தொடர்பில் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என வட்டுக்கோட்டை பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ம-04)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தேர்தல் வன்முறை 705...**

தல் முறைப்பாட்டு செயலகம் அறிவித்துள்ளது. தேர்தல் முறைமை மாற்றத்தினால் தேர்தல் சட்டங்களை மீறுதல் மற்றும் வன்முறை சம்பவங்கள் என்பன தொடர்பிலான முறைப்பாடுகளில் வீழ்ச்சி பதிவாகியுள்ளதாக செயலகம் சுட்டிக்காட்டியுள்ளது.

இதேவேளை, 705 முறைப்பாடுகளில் தேர்தல் வன்முறைகள் தொடர்பில் 32 முறைப்பாடுகள் பதிவாகியுள்ளதாகவும், இதில் 28 முறைப்பாடுகள் அச்சுறுத்தல்கள் தொடர்பிலானவை எனவும் தெரிவிக்கப்படுகிறது.

விருப்பு வாக்குமுறை தேர்தலுடன் ஒப்பீடு செய்யும் போது இம்முறை தேர்தல் பிரசார நடவடிக்கைகள் மிகவும் அமைதியான முறையில் முன்னெடுக்கப்பட்டு வருவதாக தேர்தல் முறைப்பாட்டு செயலகம் மேலும் தெரிவித்துள்ளது. (ம)


**Vacancies**

1. **English teachers – Part time & Full time**
Ability to speak in English, Passed A/L and have driving licence
2. **Computer typist (Both Tamil & English) - (Females only)**
Suitable candidates please send your CV to the following address.
**Northern Academic & Leadership Training Center**
**134, Adiyapatham Road, Thirunelvely.**
**T.P: 071 141 8711**
(2541)

**Dream of Studying MBBS / MD**
**China | Belarus | Latvia | Malaysia**



SLMC Approved
(R-1377)

Sichuan University - China
Zhengzhou University - China
Gomel State Medical University - Belarus
Riga Stradins University - Latvia
Segi University - Malaysia
International Medical University - Malaysia
Duration: 6 years Medium-English
Limited Seats are available for 2018 intake
Colombo : 076 7013060
107, B-1/1 Galle Road, Colombo 06
Jaffna : 077 3013060
77, Clock Tower Road, Jaffna
iCS Study Medicine Abroad

**இன்சுவை யாழ் ஒடியற் கூழ்**
தினமும் காலை 11 மணி முதல்
யாழ்பாடி
49-51, அம்மன் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
021 222 6868, 077 736 0353,
075 987 5800
(1347)

**அரிசி ஆலை வாடகைக்கு**
ஊரெழுவில் இயங்கிக் கொண்டிருக்கும் அரிசி ஆலை வாடகைக்குண்டு.
தொ.பே: 077 401 3959,
077 378 6647
(C-1368)

**English Personal Classess**
**Grade 01 - O/L**
**T.P: 0773314608**
(2535)

**விரைவு பொதிகள் சேவை, விமான பயணச்சீட்டுகள் விசா சேவைகள்**
● அனைத்து சேவைகளும் மிக குறைந்த கட்டணத்தில்
(C-1345)
UK-550*/=Kg
மற்றும் அனைத்து நாடுகளுக்கும் குறைந்த விலையில்
DELIVERY IN 3 - 5 DAYS
**V2 TRAVELS-0768226240**
● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● நெல்லியடி ● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை

**எவரெஸ்ட் குமாரிக்கா சந்தனாதி தைலம்**



- நீண்ட கூந்தல் வளர்ச்சிக்கும்
- இளநரையை போக்கவும்
- பொடுகிலிருந்து நிவாரணம் பெறவும்
- கண் எரிச்சல், தலை வலியை நீக்கவும்
- ஞாபக சக்தியை அதிகரிக்கச் செய்யவும்
- ஏழு வகையான மூலிகைகள் உள் அடங்கிய சிறப்பு தைலம்

100 வீதம் இயற்கையானது

(கற்றாழை, வல்லாரை, நெல்லிக்காய், கரிசலாங்கண்ணி, கறிவேப்பிலை, பொன்னாங்காணி, அவுரி மற்றும் விற்றமின் E)

எல்லா மருந்தகங்களிலும் சாதாரண கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்

தயாரிப்பு:
எவரெஸ்ட் மருந்தகம்,
உசன், மிருசுவில்,
யாழ்ப்பாணம்.

ஏக விநியோகஸ்தர்
பிரமநாதன் & Co
எண்.28, 26, பேரின்பநாயகம் வீதி,
சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.
கைபேசி எண்: 0776389356, 0777153571
(1394)

**BEACON**
வெலிங்டன் சந்தி (லிங்கம் கூல்பார் அருகாமை), யாழ்ப்பாணம்.

| உயிரியல் | இணை. கணிதம் |
|---|---|
| திரு.P.ஶ்ரீதரன் (M.Sc) (யா/பரியோவான் கல்லூரி) | திரு.T.S.தஜீதரன் (B.Sc) (யா/கொக்குவில் இந்துக் கல்லூரி) |
| திரு.பிரணவன் (யா/வேம்படி மகளிர் கல்லூரி) | திரு.T.சுகந்தன் (B.Sc) (கொழும்பு சேனநாயக்க கல்லூரி) |
| **இரசாயனவியல்** | **பௌதிகவியல்** |
| திரு.S.ஶ்ரீதரன் (M.Sc) (யா/வேம்படி மகளிர் கல்லூரி) | திரு.P.ராகவா (B.Sc) (யா/மானிப்பாய் இந்துக் கல்லூரி) |
| திரு.S.ஏகன் (B.Sc Spl, che) (யா/ஸ்கந்தவரோதயாக் கல்லூரி) | திரு.றமணன் (யாழ். பல்கலைக் கழகம்) |

(C-1378)

**A/L - 2020, Day Class**
ஆரம்பம் : 27.01.2018
மட்டுப்படுத்தப்பட்ட அனுமதிகள். முற்பதிவுகளை மேற்கொள்ளவும். தொடர்பு: 077 069 0654

**9வது யாழ்ப்பாணம் சர்வதேச வர்த்தகச் சந்தை**
**Jaffna International Trade Fair**
வடக்கிற்கான உங்களது நுழைவாயில்
www.jitf.lk
jitf.lk




நாளை ஆரம்பம்

**26 27 28**
**ஜனவரி JANUARY**
10.00 am - 8.00 pm
யாழ்ப்பாணம் மாநகரசபை மைதானத்தில்
Municipal Grounds - Jaffna
MAIN SPONSOR
S-lon
காட்சிக்கூட பதிவுகளுக்கு அழைக்கவும்
+94 71 7488107
(2404)
OFFICIAL PARTNERS
MOBILE TELECOMMUNICATION ROOFING FOOD PRINT MEDIA CONSTRUCTION SOLUTION PROVIDER ELECTRONIC MEDIA LUBRICANT LIFESTYLE RADIO
Telecom ANTON RUHUNU FOODS INSEE DAN Mobil HARVEST
ORGANIZED BY IN ASSOCIATION WITH SUPPORTED BY ENDORSED BY PARTNER COUNTRY
LECS LANKA EXHIBITION CCIY SRI LANKA ASSOCHAM

**வலம்புரி**
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532


**மணிவிழா வாழ்த்து**



இன்று 25.01.2018 வியாழன் அகவை அறுபதை பூர்த்தி செய்து மணிவிழாக் காணும் எங்கள் அப்பம்மா

**திருமதி குயீன் ஜெஸீலி கலாமணி**

அவர்கள் இன்னும் பல்லாண்டு காலம் மகிழ்வாக, நலமாக வாழ வேண்டும் என்று வாழ்த்தி இறை ஆசியை வேண்டுகிறோம்.

வாழ்த்துவோர்:-
பேரப்பிள்ளைகள்: பரணீதரன் கலாதரன் முரளீதரன் மேகாஷ்னி
"கலை அகம்", அல்வாய்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 25.01.2018 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.